ஒக்டோபர் 2016

ඔලි අරසි

OLIARAZI

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி

நல்லதொரு குடும்பம்

இதழ் 11
ஒளி 03
பக்கங்கள் : 100 (80 + 12 + VIII)

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பாராட்டு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

திருத்தற் சேவையுடன் தரம்-04
மாதிரி வினாத்தாள் - (I+II)

ரூபா 75



இலவசம்

சுயதொழில் கையேடு

போட்டிப் பரீட்சை வழிகாட்டி

## கொல்லப்படும் நினைவாற்றல்




## சமூக ஒருமைப்பாட்டை விரும்புகின்றேன்




மாற்றத்தின் திறவுகோல் ஆசிரியர்களே!



சர்வதேச சாதனையை நோக்கி...



மனதை மயக்கும் நடனம்



அத்தனைக்கு ஆசைப்படு!
(புதிய தொடர்)

STUDIO 3000 DF.

The Camera is only a tool,we make the **difference...**



STUDIO3000DF.
*Dinuka + Dulani*


| Bambalapitiya | Peliyagoda | Negombo |
|---|---|---|
| 0114003000 | 0114853000 | 0114943000 |
| 0718223000 | 0710663000 | 0714113000 |

www.3000.lk




ஆசிரியர்தலையங்கம்

# அன்புடன் வாசகர்களுக்கு...



# அவதானம்... அவதானம்

## கொல்லப்படும் நினைவாற்றலும் சீரழியும் சமுதாயமும்

> நினைவில் வைத்திருக்க வேண்டிய பல முக்கிய தகவல்களை கையடக்க தொலைபேசிக்குள் அடகு வைத்து எமது நினைவாற்றலை (Memory Power) எம்மை அறியாமலே இழந்துகொண்டு இருக்கின்றோம். எமது வாழ்க்கையே கையடக்கதொலைபேசிக்குள் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. மெமரி கார்டின் கொள்ளளவு அதிகரிக்க அதிகரிக்க மனித மூளையின் நினைவாற்றலின் கொள்ளளவு குறைவடைந்து செல்கின்றது என்பதை நாம் உணர மறுக்கின்றோம்.

இரவுப்பயணம் ஒன்றில் காரில் பயணித்துக் கொண்டிருந்தனர் சிலர். அவர்களுக்கு முன்னால் இரண்டுகார்கள் சற்றுதூர இடைவெளியில் சென்று கொண்டிருந்தன. திடீரென சிறிய சந்தியினுள் இருந்துவெளிப்பட்ட மோட்டார் வண்டியால் இரண்டாவதாக சென்றகார் விபத்திற்குள்ளாகிறது. முன்னே சென்றகார் எதையும் கவனிக்காமல் சென்றுவிட்டது. முன் காரில் சென்றவர்கள் மகள், கணவன், பிள்ளைகள். பின் காரில் சென்றவர்கள் பெற்றோர். தொடர்ந்துவந்தவர்கள் காரை நிறுத்தி மோட்டார் வண்டியில் வந்தவரையும் காரில் பயணித்தவர்களையும் கவனித்து அவசர மாக தொலைபேசியில் வைத்தியசாலைக்கும் முன்னே சென்றகாரிற்கும் அறிவித்து உயிரிழப்பை தவிர்த்தனர். இது தொலைபேசியின் பாரிய நன்மை.

நகர்ப்பகுதி பஸ்ஸில் அமர்ந்திருந்தவேளை வீதியின் எதிரே நின்ற பிச்சைக்காரர் ஒருவர் தனது கைபேசியில் பேசியது செவிகளில் விழுந்தது. டேய் மச்சான், 152 பஸ்ஸில சனக்கூட்டம் ரொம்ப அதிகம்டா, சீக்கிரம் வாடா இது தொலைபேசியின் சுமாரான நன்மை.

அண்மையில் அறிந்ததொருவிடயம், பிரபலபாடசாலைமாணவன் ஒருவனின் புத்தகப்பையினுள் மிகவிலை உயர்ந்த தொலைபேசி ஒன்று இருந்துள்ளது. பாடசா லையின் கட்டுப்பாடுகளை மீறி எப்படியோ அவனால் அது உள்ளே கொண்டுவரப்பட்டு விட்டது. ஆனால் தற்செயலாக ஆசிரியரின் கண்ணில் அதுபட்டுவிட்டது. அதிபரிடம் விசா ரணைக்காக அனுப்பப்படுகின்றான். விசாரணையின் மூலம் அவனிடம் பலவிடயங்கள் அறியப்பட்டு தொலைபேசி சோதனையிடப்பட்டபோது அவனால் சேமித்துவைக்கப்பட்டிருந்த அனைத்தும் ஆபாசபுகைப்படங்களும் காணொளிகளுமே. அவன் அதனைப் பத்திரப்படுத்தியிருந்த விதமே விசித்திரமானது. ஒவ்வொரு கோவைக்கும் தனித்தனியாககடவுச்சொல் (pass word) பதிவிட்டிருந்தான்.

பெற்றோர் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட போதுதான் பிள்ளைகளின் இவ்வாறான சீரழிவிற்கு பெற்றோர்களும் காரணம் என்பதுதெளிவாகப் புரிகின்றது. இதுதொலைபேசியின் கெடுதி.



சாதாரணதரம் கற்கும் இம்மாணவனிற்கு தாயின் நச்சரிப்பின் பெயரிலேயே இச்சாதனம் தந்தையால் வாங்கிகொடுக்கப்பட்டிருக்கின்றது. தமதுபிள்ளைகளிற்கு நல்லது செய்வதாக எண்ணி பெற்றோர் செய்யும் இச்செயலானது எத்தகையபாரியவிளைவுகளை உண்டு பண்ணுகின்றது என்பதை சிந்திக்க வேண்டும். பகுத்தறியும் தன்மைவரும் வரை இவ்வாறான சாதனங்களை அவர்களிடம் கையளிப்பதுதவறாகும். இவ்விடயத்தில் ஒவ்வொருபெற்றோரும் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும்.

இன்று உலகில் எத்தகைய நிலையினரையும் ஆளுகின்ற ஒருவிடயமாக




கையடக்க தொலைபேசி மாறிவிட்டது. இன்றையகாலத்தில் யாருமே சற்றுநேரம் கூட கைப்பேசியைவிட்டுவிட்டு இருக்கமாட்டோம். கைபேசியைமறந்துவிட்டுவெளியே சென்றுவிட்டால் மிகமுக்கியமான எதையோ இழந்துவிட்டதாகநாம் உள்ளத்துள் உழன்றுகொண்டிருப்போம். நாம் செய்யச் சென்ற வேலையைக் கூட சரியாகச்செய்யமாட்டோம். அதிலும் சிலர் குளிக்கச் செல்லும் போது கூட கைபேசியுடன் செல்வதைநாம் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறுமனிதர்களை இயக்குகின்றசக்தியாகஉள்ளகைபேசிகளின் உச்சக்கட்டபாதிப்பிற்கு இன்று ஆளாகுவது பெருமளவில் இளைஞர் யுவதிகள் தான்.

கையடக்க தொலைபேசியால் உலகம் உள்ளங்கையில் வந்துவிட்டது என்பது உண்மைதான். எமது சிந்தனைத்திறனும் கிரகிக்கும் சக்தியும் நேரவளமும் இதனால் சுரண்டப்படுகின்றது என்பதற்கு அப்பால் கலாசாரபண்பாட்டு விழுமியங்கள் சீரழிக்கப்படுகின்றன என்பதை மறுக்கமுடியாது.

**மாணவர்கள், நல்லவிடயங்களைத் தேடுவதற்காக தொலைபேசியின் இணையத்தினுள் நுழைகின்றபோது தம்மை அறியாமலே தேவையற்றவிடயங்களில் ஈர்க்கப்படுகின்றனர். கெட்டவிடயங்கள் கண்களில் பட்டுவிட்டதும் அவற்றை சீ என்று ஒதுக்கிச்செல்லும் மனப்பக்குவம் இளவயதினருக்கு இருப்பதில்லை. ஒருதடவை தொட்டுப்பார்ப்போம் என்னும் துள்ளல் தன்மையினால் ஏதோ ஒன்றிற்குள் மெதுவாக உள்நுழைந்து பின்னர் எங்கேயோ போய்விடுவார்கள்.**

அதன் தாக்கம் அருவருப்பாகவும் ஆபாசச் சீரழிவாகவும் மாறிவிடும். தூய்மையற்ற எண்ணங்கள் வன்முறைகளுக்கும் துர்நடத்தைகளுக்கும் வழிகோலுகின்றன. கண்டதேகாட்சி,கொண்டதேகோலம் என ஆகிவிடுகின்றது வாழ்க்கை. இன்று, படப்பிடிப்பு, அலாரம், நேரம்பார்த்தல், குறிப்புபுத்தகம் என எல்லாமாகவும் தொலைபேசிகளே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய சகல வசதிகளையும் கொண்டகைபேசிகள் இன்றுசந்தையில் மலிவாகக் கிடைப்பது, அனைத்து தரத்தினரும் வாங்குவதற்கு ஏற்றவகையில் இருப்பதுடன் கமரா, மணிக்கூடு, லப்ரொப், டயறி என்பவற்றின் விற்பனையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் தொகையைக் காட்டிலும் சிம் அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றுவிடுமோ என்னும் அச்சம் எழாமலில்லை. ஒருவர் இரண்டு, மூன்று என சிம் அட்டைகளை வைத்திருப்பது சாதாரண விடயமாகிவிட்டது. வீதிகள் தோறும் விற்கப்படும் சிம் அட்டைகள் இச்சந்தர்ப்பத்தினை இலகுவாக நிறைவேற்றுகின்றன. இன்றையகாலத்தில் ஐம்பது ரூபா கொடுத்து ஒரு புத்தகத்தை வாங்கவிரும்பாத ஒரு இளைஞனோ யுவதியோ தொலைபேசி அட்டைக்காக நூற்றுக்கணக்கில் செலவு செய்வதற்குத் தயக்கம் காட்டுவதில்லை. எத்தகையவறுமையிலும் பிள்ளைகளின் கல்வியே தமது வறுமையைமாற்றக்கூடியமாபெரும் சக்தி என்பதை உணர்ந்த பெற்றோர் அவர்களின் கல்விக்காக எவ்வளவும் செலவுசெய்யப் பின்வாங்குவதில்லை. அதனைதமக்குச் நசாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் பிள்ளைகள் அப்பணத்தில் தான் தமக்கான தொலைபேசி அட்டைகளை வாங்குகின்றனர். தூரத்திற்கு கல்விகற்கச் செல்லும் பிள்ளைகளிடம் தொலைபேசி இருப்பது தேவை எனபெற்றோர் நினைப்பது தவறல்ல, ஆனால் அதுசிமாட் போனாக இருக்கவேண்டும் என நினைப்பதேதவறு.

பெற்றோர்களே, என் பிள்ளைக்கு தொலைபேசியில் தெரியாதது எதுவுமேயில்லை எனக் கூறுவதில் இல்லைபெருமை. உலகம் அவனைத் திறமையாளனாய் போற்றும்போதுதான் உள்ளதுஅனைவரினதும் பெருமை. தொலை பேசிகளைநாம் ஆளவேண்டுமே தவிர அவை எம்மை ஆளக்கூடாது. தேவையான விடயங்களுக்குமட்டும் அதனைப் பயன்படுத்தும் போது உயர்வுகள் கிடைக்கும். தேவையற்று பயன்படுத்தும் போது அவமானங்களேமிஞ்சும். எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்பதை புரிந்து நடந்துகொள்ளுங்கள்.

ஆசிரியர்

வடிவமைப்பு : என்.ஜெகாதரன், எஸ்.மகாவிஷ்ணு

ஆசிரிய பீடம் : தொலைபேசி : 0114320695, துரித அழைப்பு : 0718628369,
தொலைநகல் : 0114322614, E-mail : oliarazi33@gmail.com, Viber - 0779046836

கடித தொடர்புகளுக்கு :
ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
அல்லது இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# உட்பொதிவுகள்


| | |
|---|---|
| இல்லறம் இனித்திட | 06 |
| கவியால் கருத்துரைப்போம் | 08 |
| என்னதான் சங்கதி | 09 |
| உண்மைச் சம்பவம் | 16 |
| கதைசொல்லும் கவி | 12 |
| பேசும்படம் | 15 |
| கடிதம் | 16 |
| வாழ்வியல் | 17 |
| ஆரோக்கியம் | 18,19 |
| உலகம் போற்றும் ஆளுமை | 20,21 |
| விந்தை உலகம் | 22 |
| அறிந்து கொள்வோம் | 24, 25 |
| கதை மூலம் ஆங்கிலம் கற்போம் | 26 |
| இம் மாத கார்டூன் | 27 |
| மருத்துவம் | 28,29,30 |
| விருந்தும் மருந்தும் | 31 |
| பார்ப்போம் பழகுவோம் | 32,33 |
| நட்சத்திர இல்லத்தரசி | 34,47,52 |
| சிறப்பு கவிஞர் | 48,49 |
| சிறுகதை | 50,51 |
| அம்முவின் பதில்கள் | 53 |
| தீபாவளி சிறப்பம்சம் | 54,55 |
| சோதிடம் | 56 |
| பிரபலமும் சமூக அக்கறையும் | 57 |
| இம்மாத மங்கை | 58 |
| கழுகுப் பார்வை | 59 |
| குறுந்தொடர் | 60,61,62 |
| நீங்கள் நலமா? | 63,64 |
| பசுமை | 65,66 |
| சிறப்பு நேர்காணல் | 68,69,70 |
| சமூக விழிப்புணர்வு | 71 ,72 |
| அறிவோம் ஆயிரம் | 73 |
| மனசே ரிலாக்ஸ் | 77,78 |


**வாசகர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்...**

# அத்தனைக்கும் ஆசைப்படு!

**புதிய தொடர் அடுத்த இதழிலிருந்து**

மதங்களும் முந்தின தலைமுறைகளும் சொன்னதையே தன் போதனைகளாக திருப்பி சொல்லும் வழக்கமில்லாத, எதையும் நேரடியாக வேர்வரை உணர்ந்து அனுபவித்து அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்பவர். **சத்குரு ஜக்கி வாசுதேவ் சுவாமிகள் (இந்தியா)**

மேன்மையான எண்ணங்களால்தான் ஒருவருக்கு சிறப்பான வாழ்க்கை அமைகிறது. சக மனிதர்களையும் நேசித்து வாழ்வதாலேயே ஆனந்தம் பிறக்கிறது. நாம் பிறருக்கு வழிகாட்டியாக அமையும்போது நம் வாழ்க்கைக்கு அர்த்தம் புரிகிறது. வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது.

''ஆசைப்படுங்கள்... உங்கள் ஆசைக் கனவுகள் நிறைவேற உங்கள் மனமும் உறுதியுடன் ஒத்துழைப்பு தரவேண்டும். உங்கள் மனமும் உடலும் நீங்கள் விரும்பியபடி செயலாற்ற வேண்டுமானால் அவற்றை உங்கள் வசப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படி வசப்படுத்திக் கொள்ள உதவுவதுதான் யோகா!'' - இப்படி கூறி வாழ்க்கையில் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்களை உணர்த்துகிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

இவரின் கருத்துக்களை 53 உப தலைப்புக்களில் எழுத்தாளர் சுபா **அத்தனைக்கும் ஆசைப்படு** எனும் தலைப்பில் புத்தகமாக 2011 ஆம் ஆண்டு ஆனந்த விகடன் மூலம் வெளியிட்டிருந்தார்.

இவற்றில் நமது கலாசாரத்திற்கு ஏற்ற நமது நாட்டிற்கு பொருத்தமான விடயங்களை அடுத்த இதழிலிருந்து ஒளிஅரசி வாசகர்களுக்காக பிரசுரம் செய்யவுள்ளோம்.

6th HAPPY TEACHER'S DAY!



# இல்லறமும் இனிமையும்

இல்லறம் என்பது இனிமையும் மகிழ்ச்சியும் நிறைந்தது. கணவனும் மனைவியும் இணைந்து இழுத்துச்செல்லும் குடும்ப வண்டியை தளம்பாமலும் தவறாமலும் பார்த்துக்கொள்ளவேண்டியது இருவரினதும் கடமையாகும். இருவரில் ஒருவர் தவறினாலும் வண்டி குடைசாய்ந்து திக்குத்திக்காக போய்விடும் என்ற உண்மை யாவருக்கும் தெரிந்ததே. கணவனைப் பற்றிப்பிடித்திருக்கும் மனைவியும் மனைவியின் அன்பில் நனைந்த கணவனும் குடும்ப வண்டியை தவறவிட்டதாக சரித்திரம் இல்லை.

வதனாவும் பிரபாகரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பு கொண்டவர்கள். இருவரும் ஒரே துறையில் வேலை பார்த்ததுடன் இயல்பாகவே இருவருக்குமிடையில் இருந்த ஒற்றுமையும் புரிந்துணர்வும் பார்ப்பவர்களை ஆச்சரியப்படவைத்தது. அவர்களின் இனிய இல்லறத்தின் ரகசியம் பலருக்குத் தெரியாது, ஆனால், அந்த ரகசியம் தான் தங்களது மணவாழ்வை மகிழ்வாக்கிய விடயம் என்பது அவர்கள் இருவருக்கும் தெளிவாகத்தெரியும்.

குழந்தை மருத்துவ நிபுணரான வதனா, நரம்பியல் மருத்துவ நிபுணரான பிரபாகரை திருமணம் செய்தபோது இருவருக்குள்ளும் பெரிய அளவில் அந்நியோன்யம் இருக்கவில்லை. அதனை வரவழைத்துக்கொண்டது பிரபாகர் தான். திருமணம் நிச்சயமானபோதே தொழில் தவிர்ந்து வதனாவிற்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்பதை அறிந்துகொண்டான். அவளுக்கு பிடித்த இடைக்கால மெல்லிசைப் பாடல்களை எல்லாம் தானும் கேட்டு அதன் மீதான பிடிப்பை வளர்த்துக்கொண்டான். செல்லப்பிராணிகளை அவளுக்குப் பிடிக்கும் என்பதால் பஞ்சு போன்ற வெள்ளை வெளேரென்ற நாய்க்குட்டி ஒன்றை வீட்டிற்கு கொண்டுவந்தான். வீட்டுத்தோட்டம் அவளது பொழுதுபோக்கு என்பதை அறிந்ததும் புல் மண்டிக்கிடந்த வீட்டின் பின்புறக் காணியை துப்புரவுசெய்து வைத்ததோடு மட்டும் நில்லாது பாகல், புடோல், பயற்றை, கத்தரி, மிளகாய், தக்காளி என்பவற்றைப் பயிரிட்டு அழகான ஒரு தோட்டத்தை உருவாக்கினான். இப்படி ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்துவைத்தபோதும், கணவனின் அன்பிற்காக ஏங்கி ஏங்கியே அது






## இல்லறம் இனித்திட

கிடைக்காமல் மரித்துப்போன தனது சகோதரியின் வாழ்க்கை தந்த பாடத்தினால் திருமணமே வேண்டாம் எனப் பிடிவாதம் பிடித்து, தந்தை தாயின் வற்புறுத்தலின் பேரில் திருமணம் செய்து வந்த வதனா ஆரம்பத்தில் இதனை எல்லாம் கண்டுகொள்ளவே இல்லை. முதல் முதலில் கணவனிடம் அவள் கூறிய வார்த்தையும் எனக்கு இந்த திருமணம் பிடிக்கவில்லை என்பதுதான். வதனாவின் மன ஓட்டங்களைப் புரிந்துகொண்ட பிரபாகர் அமைதியாய் ஒரு புன்னகையை மட்டும் பதிலாக்கிவிட்டுச் சென்றுவிட்டான். மாமனார் வீட்டிலும் தனது வீட்டிலும் மனைவியாக அவளைப் புரிந்துகொள்ள தனக்கு சில நாட்கள் அவகாசம் வேண்டும் என பழியைத் தன் மீதே போட்டுக்கொண்டான். கணவனின் இச்செயல் வதனாவைப் பெரிதும் பாதித்தது. மெல்ல மெல்ல பிரபாகரைப் பற்றி அறியமுற்பட்டாள். அப்போது தான் அந்த நாய்க்குட்டியும் அழகான தோட்டமும் வீட்டில் நிற்கும் வேளைகளில் அவன் முணுமுணுத்த மெல்லிசைப் பாடல்களும் அவளது புலனில் பதிந்தது. இரவில் பக்கத்திலிருந்த அவனது அறையில் ஒலித்த பாடல்கள் வதனாவின் மனதில் கற்பனை வண்ணம் பூசியது. மடத்தனமான தனது செயலின் பாதிப்பும் புரிந்தது. பட்டப்படிப்பை முடித்து ஆளுமையான ஒரு வைத்தியராக வலம் வந்த போதும் பெண்ணுக்கேயுரிய நாணம் அவளையும் பற்றிக்கொண்டது. அவளது சங்கடமான நிலையைப் புரிந்துகொண்ட பிரபாகர் வெளியூர் பிரயாணம் ஒன்றை ஒழுங்குசெய்தான்.

அந்தப் பயணமே அவர்களது இனிமையான இல்லற வாழ்வின் ரகசியமாகவும் மாறியது. யாருமற்ற அந்த தனிமைப்பொழுது பல விடயங்களைப் பற்றி மனம் விட்டுப்பேசவைத்தது. மணவாழ்வு மீதான தனது வெறுப்பையும் தனது விலகலின் காரணங்களையும் அவள் அடுக்கடுக்காக கூறியபோது அவளது சந்தேகங்களை எல்லாம் ஒவ்வொன்றாக நிவர்த்திசெய்தான். வரப்போகும் தனது வாழ்நாள் முழுமையையும் அவளது அன்பிலே கழிக்க ஆசைப்படுவதையும் கூறினான். அவள் மீதான தனது அன்பில் எந்தக்காலத்திலும் எந்த மாற்றமும் வராது என்பதையும் தெளிவாகக்கூறியபோது அவளது முகத்தின் மலர்ச்சி கண்டு பூரித்து நின்றான்.

**அந்தப் பயணமே அவர்களது இனிமையான இல்லறவாழ்வின் ரகசியமாகவும் மாறியது. யாருமற்ற அந்ததனிமைப் பொழுது பல விடயங்களைப் பற்றிமனம் விட்டுப் பேசவைத்தது. மணவாழ்வு மீதான தனது வெறுப்பையும் தனது விலகலின் காரணங்களையும் அவள் அடுக்கடுக்காக கூறியபோது அவளது சந்தேகங்களை எல்லாம் ஒவ்வொன்றாக நிவர்த்திசெய்தான். வரப்போகும் தனதுவாழ்நாள் முழுமையையும் அவளது அன்பிலே கழிக்க ஆசைப்படுவதையும் கூறினான். அவள் மீதானதனது அன்பில் எந்தக்காலத்திலும் எந்தமாற்றமும் வராதுஎன்பதையும் தெளிவாகக் கூறியபோது அவளது முகத்தின் மலர்ச்சிகண்டு பூரித்துநின்றான்.**

ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி கால்போன போக்கில் நடந்தனர். மாலை வேளையில் கடற்கரை மணலில் அமர்ந்து தமக்கு விருப்பமான பாடல்களை இயகோனில் கேட்டு மகிழ்ந்தனர். குக்கர் ஒன்றை வாங்கி தமக்குத் தெரிந்த விதத்தில் உணவு சமைத்து உண்டனர். அரசியல், சமூகம், சினிமா என அத்தனை விடயங்களையும் அலசி மகிழ்ந்தனர். பிச்சை கேட்டு கைநீட்டிய பையனுக்கு உடைவாங்கி அணிவித்து உணவு கொடுத்து உண்ணவைத்து அவன் சாப்பிடும் அழகை ரசித்து மகிழ்ந்தனர். இரண்டு வாரம் எப்படிப்போனது என்றே தெரியாமல் ஓடி மறைந்தது. புத்துணர்ச்சியுடனும் இல்லறம் பற்றிய புரிதலுடனும் வீடு திரும்பினர்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், ஒவ்வொரு வருடமும் தமக்கான நாட்களை ஒதுக்கி சுற்றுலா செல்வதை விடவேயில்லை பிரபாகரும் வதனாவும். குழந்தைகள் பிறந்தபோது கூட பெற்றோரிடம் விட்டுவிட்டு இருவரும் புறப்பட்டனர். வைத்தியத்தொழிலும் இயந்திரத்தனமான வாழ்க்கையும் பல நெருக்கடிகளைத் தந்தபோதும் தமக்காக அவர்கள் ஒதுக்கிய இந்நாட்களே அவர்களின் இனிய இல்லறத்தை செம்மைப்படுத்திய விடயமாக அமைந்தது. பிள்ளைகளும் வளர்ந்தனர், அவர்களுக்குத் திருமணமாகி அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்துவிட்டனர். இப்போதும் கணவனுடன் தனியே கழிக்கும் அந்த பத்து நாட்களை ஆவலுடன் தான் எதிபார்த்துக்கொண்டிருந்தாள் வதனா.

திருமதி. சந்தியா சந்தோஸ்



# பிச்சை

பிச்சையிட
முடியுமா
உன்
உதட்டோர
மச்சத்தை?

கல்லடி றொபட்

# மொட்டைக் கடிதம்

முத்துமுத்தானெழுத்தில்
என்னைப்பற்றியஅவதூறுகள்
நான் காதலிப்பதுஎன்னவோ
உலகமகாகுற்றம் போல
காரணம் வேறொன்றுமில்லை
நான் இல்லாதவள் தானே,

சொற்கள் கொண்டுகுண்டுமழை
சரமாரியாய் பொழிந்தன
ஏவுகணை இன்றியே,
எனக்குத்தெரியும்
எழுதியவர் யாரென்று

என்னவனைப் பிரிக்க
நடத்தப்பட்டபச்சைதுரோகம்,
மச்சினிக்குவேண்டும்
உன் கையால் மாங்கல்யம்
எப்படியோபோர் ஓய்ந்தது,
காதல் போராட்டமும் முடிந்தது,
நான் தான் தனிமையில்
நீசந்தேகப்பட்டதால் ----------

ஸமிலா இஸ்மத்

கல்லறையில் உறங்கும்
பிணத்தையும் கூட
உயிர்பெறச்செய்திடும்
உன்னத சக்தியும்
அன்பு தான்.

உலகையும் எம்
உடலையும் தாண்டி
உள்ளங்களை
உயிரால் மீட்டிடும்
மௌன மொழியும்
அன்புதான்.

துன்பங்கள் தந்தபோதும்
அத்தனையும் ஏற்கும்
அகிம்சை நிலையும்
அன்புதான்.

உள்ளத்திலோர்
வலியென்றால்
உயிர்கொல்லும்
வலியாய் அதனை
உணர்த்துவதும் அன்புதான்.

திருக்குறளாய்
சில வரிகள்
சொல்வதென்றால்
திரேசா அன்னை வடிவில்
அனாதைகளாய்
எவருமில்லை என்பதை
உலகிற்கு உணர்த்திய
ஒற்றைத் தீபமும்
அன்பு என்ற ஆயுதமே----

# ஆயுதம்

பா. மதனபாரதி
அல்வாய்







# எது உயர்வு

முப்பெருந்தேவிகளின் விழாவை முன்னிட்டு வழாக்கோலம் பூண்டிருந்தது தேவலோகம். துர்க்கையும் இலக்குமியும் சரஸ்வதியும் ஆசனத்தில் வீற்றிருந்தனர். சுற்றிநின்றவர்கள் சாமரம் வீசிக்கொண்டிருந்தனர். அவ்வேளை அங்கே பிரசன்னமானார் நாரதர். நாரதரைப் பார்த்ததும் அனைவருக்கும் உள்ளம் திடுக்கிட்டது என்னவோ உண்மைதான். எனினும் தம்மை சமப்படுத்திய படி புன்னகையுடன் அவரைவரவேற்றனர் மூவரும்.

**நவராத்திரி சிறப்பம்சம்**

| | |
|---|---|
| இலக்குமி | வாருங்கள், வாருங்கள் நாரதரே, |
| சரஸ்வதி | என்ன திடீரென இந்தப்பக்கம் வந்திருக்கின்றீர்கள்? |
| நாரதர் | ஏன் தேவி, நான் வரக்கூடாதா |
| துர்க்கை | இல்லை இல்லை, அக்காஅப்படிச் சொல்லவில்லை. சொல்லாமல் வந்துள்ளீர்கள் அதனால் அப்படிக்கேட்டார். தவறாகஎண்ணிவிடாதீர்கள் . |
| நாரதர் | சே---சே ---நான் அப்படிஒன்றும் நினைக்கவில்லை, சாதாரணமாகக் கேட்டேன் அவ்வளவுதான். |
| இலக்குமி | சொல்லுங்கள் நாரதரே என்ன விடயமாகவந்துள்ளீர்கள், ஏதோ ஒருகாரணம் இல்லாமல் வந்திருக்கமாட்டீர்கள், அதனால் தான் கேட்கின்றேன். |
| நாரதர் | அதுவேறொன்றும் இல்லை, முப்பெருந் தேவிகளாகியதங்களின் திருநாளை முன்னிட்டு பூலோகமெங்கும் ஒரேகொண்டாட்டம், |
| துர்க்கை | ஆமாம் நாங்களும் பார்த்துக்கொண்டுதான் உள்ளோம். |
| நாரதர் | ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை இந்தகுழப்பத்திற்குவிடைதெரியவில்லை. |
| சரஸ்வதி | என்ன குழப்பம்? |
| இலக்குமி | கல்வியா? செல்வமா? வீரமா? என்பதா |
| நாரதர் | இல்லை இல்லை ----------------எந்தசெல்வத்தைக் கொண்டவர் பெரியவர் என்பதுதான். |
| சரஸ்வதி | மிகப்பெரிய குழப்பத்துடன் தான் வந்திருக்கின்றீர் போல |
| துர்க்கை | உம்முடைய சந்தேகம் தவறான தல்ல நாரதரே, ஆனால் அதனை இங்கே கொண்டு வந்ததுதான் சந்தேகமாக உள்ளது. |
| நாரதர் | வேறொன்றும் இல்லைதேவி, அதற்கான காரணகாரியங்களைப் பற்றிதங்கள் மூவருடனும் அலசிஆராயலாம் என்றுதான். |
| இலக்குமி | அலசி ஆராயப்போகின்றீரோ அல்லது எங்களுக்குள் பிளவை உண்டுபண்ணப்போகின்றீரோ, யாமறியோம். |
| நாரதர் | என்ன இலக்குமிதேவியாரே இப்படிச் சொல்லிவிட்டீர்கள், நான் அப்படிஒன்றும் எண்ணிவரவில்லை. |
| துர்க்கை | அக்கா, யார் என்னாதான் கேட்டாலும் நாங்கள் தெளிவாக இருக்கும் போதுயாராலும் எம்மை வீழ்த்தமுடியாது. |
| இலக்குமி | துர்க்கை சொல்வதுசரிதான், நாதரின் குழப்பத்தைதீர்க்க வேண்டியது எமது கடமைதானே |
| துர்க்கை | நாரதரே நீங்கள் ஒருவிடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். கல்விகற்றவனோ, செல்வந்தனோ அல்லது பலசாலியோ பெரியவன் கிடையாது |
| சரஸ்வதி | எவனொருவனால் இந்தசமூகத்தில் நான்குபேர் நன்றாக வாழ்கின்றார்களோ அவனே பெரியவனாகிறான். |
| இலக்குமி | செல்வம் எதனைப் பெற்றவனாக இருப்பினும் அதை கொடுப்பவனே சிறப்படைகிறான் |
| நாரதர் | சரி தேவியர்களே, இப்போது எனது குழப்பம் தீர்ந்துவிட்டது, நான் புறப்படட்டுமா? |
| இலக்குமி | இவ்வளவுதூரம் வந்துவிட்டு எதுவும் அருந்தாமல் போவதா? இதோ மோர் வரவழைக்கிறேன், அருந்திவிட்டுச் செல்லுங்கள் நாரதரே. |

**சிறிதுநேரத்தில் நாரதர் புறப்பட்டார். ஒரு குழப்பத்தை முறியடித்தமகிழ்வுடன் எழுந்துகொண்டனர் முப்பெருந்தேவிகளும்**

(ஜனநாயகி)




**உண்மைச் சம்பவம்**

சிறுவர்கள் பொய் சொல்லமாட்டார்கள் எனக்கூறுவதை நாம் பல இடங்களில் கேட்டிருப்போம். இன்று வரையும் இந்த வார்த்தை அனைவராலும் ஏற்கப்படுகின்றதுதான்.

அதில் உண்மை இருப்பதனால் தான் அந்த வார்த்தை பல சந்தர்ப்பங்களிலும் உச்சரிக்கப்படுகிறது. ஆனால், சில சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் சில தவறுகளைச் செய்கிறபோது நீயா இப்படிச் செய்தாய் என்று வியப்புடன் கேட்போம். எவ்வாறான பாரிய பிழைகளைச் செய்தாலும்கூட மறைக்காமல் உண்மையை ஒத்துக்கொள்வது சிறுவர்களுக்கே உரித்தான பண்பு. இப்படிப்பட்ட சிறுவர்கள் எங்கிருந்து பிழையான விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கு சான்றாய் ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

ஸஹீட். எச். சப்ரீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.






# யார் முதலில் திருந்துவது!

தரம் 7 இல் கல்விகற்ற மாணவன் ஒருவன் மலையிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறிப்பிட்ட ஒரு பகுதியிலே இடம்பெற்றது. இந்தச் சிறிய வயதில் அவன் தற்கொலை செய்துகொள்ள என்ன காரணம் என அனைவரும் யோசிப்போம். அதற்கான விடை சம்பவத்தில் இருக்கிறது. செங்கற்கள் சுடும் சூளை வைத்திருக்கின்ற ஒரு பெற்றோரின் மகன்தான் இந்தச் சிறுவன். ஒரு நாள் தந்தையின் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்திருக்கிறது. வேலையிலே இருந்த தந்தை மகனிடம் அதை யாரென்று பார்க்கும்படி கூறியிருக்கிறார். தொலைபேசியை எடுத்து தந்தை வேலையிலிருக்கிறார் என்று பதில் கூறிய சிறுவன் அழைப்பை துண்டித்துவிட்டு தொலைபேசியில் சற்றுநேரம் விளையாடியிருக்கிறான்.




## உண்மைச் சம்பவம்


எதேச்சையாக தந்தையின் தொலைபேசியில் ஆபாசப்படங்கள் சில ஓட ஆரம்பித்திருக்கின்றன. யாரும் இல்லாததை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட சிறுவன் அதனை முழுமையாகவே பார்த்து முடித்துவிட்டு தொலை பேசியை இருந்த இடத்தில் வைத்துவிட்டான். மறுநாள் இதே எண்ணத்துடன் பாடசாலை சென்ற இவன் தனது நெருங்கிய நண்பன் ஒருவனிடம் நடந்த விடயங்களை விலாவாரியாக கூறியது மட்டுமல்லாமல் ஆபாசப்படத்தில் இவ்வாறுதான் இடம்பெறுகிறது என தெளிவாகவும் கூறியிருக்கிறான். பாடசாலை முடிந்ததும் இவர்கள் இருவரும் நாமும் அவ்வாறு செய்துபார்க்கவேண்டும் எனத் திட்டம் தீட்டிக்கொண்டு அதை மறுநாள் செய்வதென முடிவெடுத்து அடுத்தநாள் பாடசாலை கலைந்ததும் தங்களது வகுப்பு சிறுமியொருவரை வீடு செல்லும் வழியில் மறித்து தூக்கிக்கொண்டு சென்று ஒரு பற்றைக்குள் வைத்து பல விடயங்கள் செய்து அச்சிறுமியை மிருகத்தனமாக கடித்தும் இருக்கிறார்கள்.

பாதையால் சென்றவர்கள் பற்றைக்குள் இருந்து அலறல் சத்தம் கேட்டதும் ஓடி வந்திருக்கிறார்கள். ஆட்களைக் கண்ட இவர்கள் இருவரும் ஓட முயற்சிக்க துரத்தியவர்களிடம் ஒருவன் பிடிபட மற்ற சிறுவன் ஓடியிருக்கிறான். இவர்களும் பின்னால் துரத்திச் செல்ல பயந்த சிறுவன் செய்வதறியாது மலையிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டான். பிடிபட்ட சிறுவன் (இவர்தான் சம்பவத்தை விளக்கமாக கூறியவர்) பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். விசாரணைகளின் போது தற்கொலை செய்து கொண்ட சிறுவன் வகுப்பிலே நல்ல அமைதியானவன் எனவும் கெட்டிக்காரன் எனவும் ஆசிரியர்களும் சக மாணவர்களும் கூறியிருந்தனர். அப்பிரதேச மக்கள்கூட சிறுவனைப்பற்றி நல்ல விதமாகவே கூறியிருக்கிறார்கள்.

இச்சம்பவம் பல விடயங்களை எமக்குச் சொல்கின்றது எனினும், சமூகத்தில் நல்ல பிள்ளையாய் இருந்த ஒரு அப்பாவி, தன் உயிரை தானே மாய்த்துக்கொள்ள தகப்பன் காரணமாகிவிட்டாரே. பிள்ளைகளைத் திருத்த முயற்சிக்கின்ற பல தந்தைமார் இப்படித்தான் இருக்கிறார்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய உண்மை. தொலைக்காட்சி பார்க்காதே, புகைப்பிடிக்காதே, திருடாதே என பிள்ளைகளுக்கு அறிவுரை செய்கின்ற நாம் என்ன செய்கின்றோம் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் அவசியம் சிந்திக்கவேண்டும்.

பிஞ்சுகளின் மனதில் வஞ்சகங்களை விதைக்கின்ற ஒவ்வொரு பெற்றோரின் காதுகளுக்குள்ளும் இந்தச் சம்பவம் சென்றடைய வேண்டும் எனும் எண்ணத்துடனேயே பல தடைகளையும் தாண்டி இச்சம்பவத்ததை தந்திருக்கிறேன்.

பெற்றோர்கள் எனும்போது ஒருவர் மட்டுமில்லை. தாய், தந்தை இருவருமே, இவ்வாறான விடயங்களில் நீங்கள் முதலில் நல்லவராய் இருங்கள் அப்போதுதான் தைரியத்துடன் உங்களது பிள்ளையைத் திருத்தமுடியும். ஏட்டுக்கல்வியை மட்டும் கற்ற கெட்டிக்காரர்கள் என்ற பெயரிலே உலாவருகின்ற மனிதர்களை சமூகத்திற்கு பரிசாக்கவோ நல்ல விடயங்கள் விதைக்கப்படவேண்டிய உள்ளத்தில் அழுக்குகளைப்போட்டு, மிருகத்தனமான பஞ்சமா பாதகர்களை உருவாக்கவோ தயவுசெய்து முயற்சிக்காதீர்கள். தீயவனை திருத்த முயற்சிக்கும் சீர்திருத்தப்பள்ளிகளும், சிறைக்கூடங்களும் ஒன்றையுமே சாதிக்கவில்லை. தாயின் அன்பான அரவணைப்பும் தந்தையின் பண்பான அறிவுரையுமே உலகின் சிறந்த சீர்திருத்தப்பள்ளி என்பதை யாருமே மறக்காதீர்கள். அவ்வாறே, இன்றைய சினிமாக்களும், காட்டூன்களும் கூட ஆபாசப்படங்களே என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.






# ஆசானின் குரல்

ஆசானாய் வந்தவர்க்கு
ஆசானின் அறிவுரை
பள்ளி வாழ்வின் பக்குவத்தை
பட்டறிவின் ரகசியத்தை
பக்குவமாய் சொல்லப்போறேன்
பகுத்தறிந்து கேட்டிடுவீர்!

பாரினில் கிடைத்த பெருஞ்செல்வம்
பார் போற்றும் ஆசிரியன் எனும் நாமம்
விலையில்லா விழுதான பொக்கிஷத்தை
வீணென யாரேனும் உரைக்கலாமோ?

ஆசிரியம் என்பது
அளவோடு அமைந்ததல்ல,
தாயாகி தந்தையாகி
தோழனுமாய் சோதரனாய்
எண்ணில்லா பாத்திரங்கள்
எம் இந்த பதவிக்கு,

பல தரத்தில் மாணவர்கள்
பல்வேறு சிந்தனைகள்
ஒவ்வொன்றும் ஒவ்வோர் விதம்
அத்தனையும் முத்தாக
நாம் தானே அத்திவாரம்.

கனிவோடு கண்டிப்பும்
கலந்தது தான் ஆசிரியம்.
பக்குவமாய் பாராட்டி
படைத்திடுவீர் புதுச்சரிதம்

பொழுதோட்ட என்றெண்ணி
புகுந்திடாதீர் பள்ளிக்குள்,
புனிதங்கள் காத்தே என்றும்
புதுமைகள் நீர் உரைப்பீர்.

எண்ணும் எழுத்தும்
கண்ணெனக் கற்பித்து
ஆங்கிலம் உலகின்
அசைவியல் என்றுரைத்து
விஞ்ஞானம் செய்யும்
விந்தைகள் கூறி
தொழிநுட்பத்தின் பாங்கான
தொழிற்பாடு எடுத்துரைத்து
புத்தக கல்வியையும்
அரவணைத்தே அளித்திடுவீர்.


ஞாலத்தில் நாளை அவன்
செளித்தோங்க மிளிர்ந்திட்டால்
ஆசானே உன் உவகை
அளவிற்குள் அடங்கிடுமோ?

பேதையாய் அவனொருவன்
பெயரின்றி அலைந்திட்டால்
காலத்தின் கோரவடு
கண்டபடி கிழித்திடுமே.

ஏட்டுக்கல்வி அவனுக்கு
எடுத்தியம்பாவிட்டாலும்
தொழிற்கல்வி ஒன்றிற்கு
அத்திவாரம் காட்டிவிடு.

இத்தனையும் செய்துவிட்டால்
இணையில்லை உன் பணிக்கு,
வாழ்க எம் ஆசிரியம்
வளர்க நம் புகழ் உலகெல்லாம்.

கோபிகை





# ஆடற்செல்வி பிரியங்கா



கலைகள் போற்றப்படவேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு கலைஞர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே. வளர்ந்து வரும் கலைஞர்களின் திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில் ஒளிஅரசி கலை வளர்ப்போம் பகுதியை முன்னெடுத்து வருகின்றாள். அந்த வகையில் இம்மாத கலைவளர்ப்போம் பகுதியை அலங்கரிப்பவர் ஆடற்செல்வி தியாகராசா பிரியங்கா.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரியங்கா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க முன்பள்ளி ஆசிரியராகவும் சிதம்பரேஸ்வரா நடனாலயத்தின் உதவி நடன ஆசிரியராகவும் உள்ளார். இவரது குடும்ப பின்னணியே கலைத்துறை சார்ந்தது தான். தாயார் பாடசாலைக் காலத்தில் நடனம் கற்றவராக இருந்ததுடன் மாமனார் சிறந்த நடன வித்தகராக இருப்பதும் அவரது சிறு வயது முதலான நடனக்கற்கைக்கு வழிகாட்டியுள்ளது. மாமனாரிடமே தான் முறைப்படி நடனம் கற்றதாக கூறுகின்றார். பாடசாலைக்காலத்தில் ஆசிரியர் கருணாரூபினி அவர்களும் இவரைத் திறம்பட வழிநடத்தியவர் எனத்தெரிவித்தார். இலங்கையின் பல மாவட்டங்களிலும் நடைபெற்ற ஆலய மற்றும் அரச நிகழ்வுகளில் மேடையேறியுள்ள பிரியங்கா கலைஞர் வேலானந்தன் ஐயா அவர்களின் நெறியாள்கையில் குருஷேத்திரம் என்னும் நடன நாடகத்திற்காக பல அரங்குகளிலும் தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார்.



இன்றைய காலத்தில் பாடசாலைப் பாடத்திட்டத்திற்கு அமைவாக நடனம் கற்கின்ற மாணவர்கள் அதன் பின்னர் பெரும்பாலும் அதனைக் கைவிட்டுவிடும் நிலையயே உள்ளது. பரதத்தை மூச்சாக கற்பவர்கள் அரிதாகவே உள்ளனர். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கலையை தெரிவுசெய்து கற்கவேண்டும். மனதை மயக்கும் கலை பரதமாகும். மன அழுத்தம் போன்றவற்றைக் குறைப்பதற்கு இதுவும் சிறந்த வழியாகும் எனகூறிய பிரியங்கா, தரமான ஆக்கங்களைத்தாங்கி திறமானதொரு சஞ்சிகையாக வெளிவரும் ஒளிஅரசி சஞ்சிகையின் பணிகள் மேலும் வளரவேண்டும் எனவும் தானும் தனது நடனாலய மாணவிகள் பலரும் ஒளிஅரசியின் தீவிர ரசிகைகள் எனவும் மகிழ்வுடன் தெரிவித்தார். அவரது கலைப்பயணத்திற்கான வாழ்த்துக்களையும் எமது சஞ்சிகையின் சார்பில் நன்றிகளையும் தெரிவித்து விடைபெற்றோம்.

ஜயிலா


இளவாலை மயிலங்கூடல் என்னும் கிராமத்தின் விளையாட்டு முத்தான இவர், இருபதுவயதிற்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் 3.35மீற்றர் உயரம் பாய்ந்து இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார். இதுவரையும் தேசியத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த சாதனையை இவர்முறியடித்து புதியசாதனையை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். ஈட்டி எறிவதிலும் திறன்கொண்ட அனித்தா, மெய்வல்லுனர் போட்டிகள்தவிர உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளிலும் பலசாதனைகள் படைத்துள்ளார்.

யாழ் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவி செல்வி ஜெகதீஸ்வரன் அனித்தா 86வது சேர்.ஜோன். காபற் சிரேஸ்ட மாணவர்களுக்கான தேசியமட்ட மெய்வன்மைப் போட்டியில் புதிய சாதனையைப்பதிவு செய்து தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

2014 ம்ஆண்டு தேசியத்தில் பதிவான சந்தர்ப்பத்தில் எமதுஒளி அரசியினால் நேர்காணல் செய்தபோது தேசியத்தில் சாதிப்பதே தனது இலக்கு எனக்குறிப்பிட்டிருந்தார். இன்று தனது கனவை நனவாக்கி சாதனை படைத்துள்ள அனித்தாதற்போது சர்வ தேசத்தில் சாதிக்கத்துடிப்பதை உறுதிசெய்துள்ளார். அவரது அடுத்தகனவும் நனவாக வேண்டும் என்னும் எதிர்பார்ப்பு இலங்கை வாழ்விளையாட்டு ஆர்வலர்கள் அனைவருக்கும் உண்டு.

பொருளாதார வளமற்ற, தாயின் அரவணைப்பு இன்றிய ஒரு பெண்ணாக அனித்தாவின் சாதனை என்பது அபாரம். நிச்சயம் தந்தையின் கனிவான அரவணைப்பும் அம்மம்மாவின் பாசமும் பயிற்றுவிப்பாளர்களின் சிறந்த வழிகாட்டலுமே அவரைச்சாதிக்கத் துண்டியிருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது.





இதே பாடசாலை மாணவிகளான சிறிஸ்கந்தரா சாடிலானி மற்றும்சந்திரகுமார் கெரீனா ஆகியோரும் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

**எஸ்.டிலானி**

இருபது வயதுப்பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தல் போட்டியில் 2.85 மீற்றர்பாய்ந்து வெண்கலப்பதக்கம் பெற்றார்.

**சி.கெரீனா**

18 வயது கோலூன்றிப்பாய்தல் போட்டியில் 2.65 மீற்றர்பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தினையும் 16வயதுப்பிரிவிருக்கான உயரம்பாய்தல் போட்டியில் 1.45 மீற்றர்பாய்ந்து வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

இவரை வழிப்படுத்திய குடும்பத்தினரையும் பாடசாலைச் சமூகத்தினரையும் உடற்கல்வி ஆசிரியரையும் பாராட்டி அனித்தாவின் சாதனைகள் சர்வதேசத்திலும் பேசப்படவேண்டும் என ஒளி அரசியின் சார்பில் நாமும் வாழ்த்துகின்றோம்.



# சிறகு விரிக்கும் கிராமத்து புறா

ஜயிலா


# கவிக்களம்

# Oli Arazi In பேசும் படம்

## போட்டி -14

படத்தைக் கூர்ந்து பாருங்கள். உங்கள் மனதில் எழும் எண்ணங்களை சுவைபட ஆறு வரிகளுக்கு மேற்படாத சிறந்த கருத்தைக் கூறும் கவிதையாக ஒரு தபாலட்டையில் எழுதி 51ஆம் பக்கத்தில் உள்ள கூப்பனைப் பயன்படுத்தி 20.09.2016 க்கு முன்பு அனுப்புங்கள்.





## வெற்றி பெற்ற கவிதைகள்

**1**

எல்லையில்லாவானத்தைஉன்
ஏற்றமிகுகரம் கொண்டு
எட்டிப்பிடித்திட
முனைவதுஏனோ?
வானமும் ஒருநாள்
உன் வசப்படும் என்பதாலா----?

**வல்வைக் கமல்**
**வல்வெட்டித்துறை**

உள்ளங்கைக்குள்
உதித்திடும் சூரியன்
உலகத்தைவென்றிட
இன்னுமென்னதாமதம்?

**கவினயா,**
**யாழ்ப்பாணம்**

**2**

உள்ளத்தில் உரமிருந்தால்
எண்ணத்தில் துணிவிருந்தால்
சூரியனும் வசப்பட்டுவிடும்
சுகமாய் கைகளுக்குள்.

**பா.கிசானி, யா வதிரிதிரு**
**இருதயக் கல்லூரி**

**3**

தரணியில் மனிதர்கள்
தைரியம் கொண்டால்
சூரியக்குழந்தையும்
சுகமானதென்றலே.

**றிபானா**
**மொனராகலை**

கடந்த மாத வெற்றியாளர்கள் :-

01 ஆம் இடம் : வல்வைக் கமல்
02 ஆம் இடம் : பா.கிசானி
03 ஆம் இடம் : றிபானா

1 ஆம் பரிசு - 250/=
2 ஆம் பரிசு - 150/=
3 ஆம் பரிசு - 100/=

மதியோர் தினம்

மந்திரக் கடிதம்



# அன்பு நண்பி முகுந்தா...

நான் இங்குநலம், உனது நலம் அறிந்து ஆனந்தம் அடைந்தேன். திருமண விடயம் பற்றி எழுதியிருந்தாய். மிகுந்த மகிழ்ச்சி. உனது மன நிலையை நீ மாற்றிக்கொண்டது எனக்கும் சந்தோசமாக இருந்தது. படிக்கின்ற காலத்தில் ஒரு நிவாஸ் உன்னை ஏமாற்றியதற்காக ஒட்டுமொத்த ஆண்களையும் அவ்வாறு நினைப்பது தவறு என்பதை நான் பல தடவை எடுத்துச்சொல்லியும் நீ அப்போது புரிந்துகொள்ள மறுத்துவிட்டாய்.

காலங்கள் கடந்தபின்பேனும் உனக்கு இவ்விடயத்தில் தெளிவு ஏற்பட்டிருப்பது நல்லது. வாழ்க்கை வாழ்வதற்கானதே. கையிலுள்ள நாட்களைத் தவற விட்டுவிட்டு பின்னர் வருத்தப்படுவதில் பயனில்லை. இப்போதும் கூட உன் மனநிலைசரியான வகையில் மாறவில்லை என்பதை உனது கடிதத்தின் சிலவரிகள் எனக்கு உணர்த்தியது. நீநினைப்பது போல சமூகம் அந்த அளவிற்கு மோசமானது இல்லை. உன்னைப் புரிந்துகொண்டுஉன்னைஉனக்காகவேநேசிக்கின்ற வாழ்க்கை உனக்கு கிடைக்கும் எனநம்பு. எம் உள்ளத்தின் சிந்தனைகளே எம் வாழ்க்கையின் வடிவங்கள் ஆகின்றன.


திருமணம் என்பது சம்பிரதாயமான சடங்குமட்டுமல்ல, எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த இரண்டு உறவுகளை இணைக்கும் பாலம். கணவன் மனைவி என்ற இனியபந்தத்தின் மூலம் புதிதான உறவுகள் மலர்கின்றன. இல்லத்தை ஆள்பவளாக இருந்து குடும்பத்தின் நெளிவு சுழிவுகளை திறம்பட நிர்வகித்துச் செல்லவேண்டும். கணவனையும் புகுந்தவீட்டையும் அன்புடன் நேசிக்கவேண்டும். உனதுவிருப்பங்களைமற்றவர் மேல் திணிக்க முயற்சிக்காதே. முடிந்தவரை கணவனின் விருப்பங்களை நேசிக்கக்கற்றுக்கொள். மாமியார் சொல்வதைகாது கொடுத்துக்கேள். புகுந்தவீட்டினர் முன் உன் பிறந்தவீட்டைப் பற்றிகூறிக் கொண்டிராதே. அம்மா அப்படிச் செய்தார், அப்பா இப்படிச் செய்தார் எனக் கூறுவது அவர்களை அவமதிப்பது போல எண்ணிவிடக்கூடும்.

மாமியாருடன் நேரத்தைச் செலவிடு, அவர் கூறுவதைகாது கொடுத்துக்கேள். அந்தவீட்டின் பழக்கவழக்கங்களை, கணவருக்குப் பிடித்தவிடயங்களை அவரிடம் இருந்தே அறிந்துகொள். அது உனக்கும் மாமியாருக்குமான நெருக்கத்தை அதிகரிக்கும். மைத்துனிமாரிடம் அன்புடன் பழகு, மாமியை அம்மாவாகவும் மைத்துனிமாரை சகோதரிகளாகவும் நேசிக்கக்கற்றுக்கொண்டு விட்டால் எந்ததுன்பமும் இல்லை. கணவனின் அன்பும் தாராளமாக கிடைத்துவிடும்.

பிரிவைப்பற்றி ஒருபோதும் சிந்திக்காதே. பருவகாலங்கள் மாறிமாறிவருவதில்லையா? உன்னுடைய வாழ்க்கையிலும் வசந்தம் வந்துவிட்டதை உணர்ந்துகொள். கடந்தகால நினைவுகளை குப்பைகளாக நினைத்து ஒதுக்கிவிடு. வரப்போகும் நாட்களை சிறந்தமுறையில் திட்டமிடு. உன்னால் யாருடையமனமும் நோகாதபடிபார்த்துக்கொள்.

உன் மணவாழ்வு இனிதே சிறக்கவாழ்த்தி எனது மடலை நிறைவு செய்கின்றேன்.

இப்படிக்கு
அன்பு நண்பி சாருலதா



சி. நற்குணலிங்கம்




# உங்களுக்குத் தெரியுமா?

**பெண்களின் கைகளது அமைப்பை வைத்து அவர்களது குணாதிசயங்களை கண்டுபிடிக்கலாம்**

## வாழ்வியல்

**மிருதுவான கைகள்:**


கைகள் மிருதுவாக இருந்தால், அத்தகைய பெண்கள் முயலும் எல்லா வேலைகளும் தடையின்றி நிறைவேறும். லாபமும் கிடைக்கும். தர்ம காரியங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.

**வறட்சியான கைகள்:**

கைகள் வறட்சியாகவும், நரம்புகள் வெளியே தெரியும்படியும் அமைந்திருந்தால், அவளது குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் அதிகமிருக்கும். கணவனும், பிள்ளைகளுமே கூட விரோதியாவார்கள்.

**உள்ளங்கை பள்ளம்:**

உள்ளங்கைகள் சிறிது பள்ளமாக இருக்கும் பெண்கள் உத்தமிகள். உண்மையைப் பேசும் குணமுடையவர்கள். ஒழுக்கமானவர்கள். உள்ளங்கைகள் அதிக பள்ளமாகவும், முக்கியமான ரேகைகள் மட்டுமே நன்றாகத் தெளிவாகப் பிரகாசமாக இருந்தால் எந்தக்காலத்திலும் சரீர ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.



**கைகளின் நீளம்:**

பெண்களது கைகள் முழங்கால் அளவுக்கு நீண்டு தொங்கும்படி அமைந்திருந்தால், அவர்கள் சகல சவுபாக்கியங்களுடன் இருப்பார்கள். வாழ்க்கையின் சங்கடங்கள் எதையும் சிரித்த முகத்துடன் சகித்துக் கொள்வார்கள். கணவனுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பார்கள்.



**கை விரல்கள்:**

பெண்களின் கை விரல்கள் மென்மையாகவும், ஒழுங்காகவும், அழகாகவும் இருந்தால் சகல சவுபாக்கியங்களும் அமைந்திருக்கும். இத்தகைய பெண்களுக்கு புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகமிருக்கும். கணவனை மதிப்பவர்கள். எல்லோரும் பாராட்டும் வகையில் நடந்துகொள்வார்கள். இனிமையாகப் பேசி, பழகக்கூடியவர்கள். நீண்ட கை விரல்களை உடைய பெண்கள் கலையார்வமுள்ளவர்கள். இசை ஞானம் உள்ளவர்களாகவோ, இசைக் கருவிகளை வாசிப்பதில் பெரிதும் வல்லவர்களாகவோ இருப்பார்கள். சிலர் நாட்டியத்திலும், சிலர் நடிப்பிலும் சிறந்து விளங்குவார்கள். கை விரல்கள் பருமனாகவும், முரடாகவும் அமையப் பெற்ற பெண்கள், உழைத்து சம்பாதித்து வாழ்பவர்களாக இருப்பார்கள். பொறாமைக் குணமுடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்குப் புத்திர பாக்கியம் அமைவது அரிது. கை விரல்கள் நெருக்கமாக சேர்ந்திருந்தால், கஞ்சத்தனம் மிக்கவர்களாகவும், பணம் சேர்ப்பதிலேயே எப்போதும் குறியாகவும் இருப்பார்கள்.



**நகங்கள்:**

கைவிரல் நகங்கள் சொத்தையாகவும், கறுப்பாகவும் இருந்தால் ஆயுட்காலம் முழுவதும் கஷ்டமும், வறுமையும், பலரின் பழிப்பும் உண்டாகும். விரல் நகங்கள் சிவந்து, பளபளப்பாக, அழகாகக் காணப்பட்டால் அப்பெண்கள் ஆரோக்கியமானவர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பார்கள். பெண்களது கைகள் சமமாக இருந்தால், அவர்களுக்கு எல்லா சவுபாக்கியங்களும் கிட்டும். குடும்பத்தை நன்றாக நிர்வாகிப்பார்கள். பெரியவர்களிடம்





**பெண்ணுக்கு கடவுள் வழங்கியிருக்கும் மகத்தானவரம் தாய்மை! ஒரு கரு உருவான நிமிடத்தில் இருந்து, குழந்தையைப் பிரசவிக்கும் நிமிடம் வரையிலானகாலம் - உண்மையிலேயே ஒரு தாய்க்குக் கிடைக்கும் ஆனந்த அனுபவம்.**

'கருத்தரித்தல்' என்னும் அதிசயநிகழ்வினை, அறிவியல்பூர்வமாக அறிந்துகொள்ளவேண்டும். கரு உருவானதும் அதை எதிர்கொள்ளவும்,பாதுகாக்கவும் பெண்களின் கருப்பையும் உடலும் எப்படித் தயாராகிறதோ, அதேபோலமனதளவிலும் தயாராகவேண்டும். நேர்மறை எண்ணங்களும் ஆரோக்கியமான சூழலும் ஊட்டமிக்க உணவுகளும், ஒரு பெண்ணுக்கு பிரசவத்தை இனிய அனுபவமாக மாற்றுகின்றன.

க்ணவனும் மனைவியும் கலந்துபேசி மகிழ்ச்சியான மனநிலையில் ஒன்றுகலந்து கருத்தரிக்கும் போதுதான் தாயும் சேயும் ஆரோக்கியமாக இருப்பார்கள்.

முதல் மூன்று மாதங்களில்தான் குழந்தையின் உடல் உறுப்புக்கள் தோன்றுகின்றன. இந்தக் காலத்தில் தாய்க்கு எந்த உடல்நலப் பிரச்சினைகளும் ஏற்பட்டுவிடக்கூடாது. அப்படி ஏற்பட்டால் அதற்கு மாத்திரை எடுத்துக் கொள்வதும், எடுக்காமல் இருப்பதும் கூட குழந்தையைப் பாதிக்கும்.

இருவரும் உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும். பி.எம்.ஐ. 25-க்குள் இருக்கவேண்டும். முட்டை மற்றும் விந்தணுதரத்துடன் இருக்க உடல் எடைகட்டுக்குள் இருப்பது அவசியம். சராசரி உடல் எடையைப் பராமரிப்பதன் மூலம் கர்ப்பக் காலத்தில் ஏற்படக்கூடிய உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், அதிக எடையுடன் குழந்தை பிறப்பது, சிசேரியன் போன்றவற்றைத் தவிர்க்கலாம். தைராய்டு, சர்க்கரை, ருபெல்லா, சின்னம்மை, ஹெபடைடிஸ் பி, டி.பி., எச்.ஐ.வி. பரிசோதனைகள்

# தாய்மை பற்றி

ஒளிஅரசி

## ஆரோக்கியம்

செய்துகொள்ளவேண்டும். கர்ப்பகாலத்தில் ஃபோலிக் அமிலத்தின் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது. குழந்தையின் மூளை, முதுகெலும்பு, நரம்புமண்டலவளர்ச்சிக்கு ஃபோலிக் அமிலம் மிகவும் அவசியம். குழந்தை பெற்றுக்கொள்ள முடிவுசெய்துவிட்டால், ஆறு மாதங்களுக்கு முன்பே டொக்டரின் ஆலோசனையின் பேரில், ஃபோலிக் அமிலம் சத்து மாத்திரை சாப்பிடலாம். இது கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. மேலும், கரு நல்லபடியாக வளரவும், கருச்சிதைவைத் தடுக்கவும்,குழந்தை எந்தக் குறையுமின்றிபிறக்கவும் உதவுகிறது.

ஆண்கள் புகைபிடித்தல், மதுப்பழக்கம் போன்றவற்றைக் கைவிட்டு ஆரோக்கியமான மனநிலையில் இருக்கவேண்டும். இவையெல்லாம் கர்ப்பம் தரிப்பதற்குமுன்பு செய்யவேண்டியவை. கர்ப்பம் தரித்ததும், ஒவ்வொருமாதமும் நடைபெறும் மாற்றங்களையும் தெரிந்துகொள்வது, பலகுழப்பங்களையும் பயத்தையும் போக்கும். கருத்தரித்தசிலவாரங்களில் இருந்துசிலமாதங்கள் வரைகுமட்டல் நீடிக்கும். பெரும்பாலான பெண்களுக்கு இந்தப் பிரச்னை மூன்றாவது மாதத்திலேயே நின்றுவிடும். சிலருக்குகர்ப்பக் காலம் முழுவதுமேலேச ானகுமட்டல் இருக்கலாம். வெறும் வயிற்றில் இருப்பதும் குமட்டலை அதிகரிக்கச் செய்யும். காலையில் ஏதேனும் கொஞ்சமாகச் சாப்பிடவேண்டும். குறிப்பிட்டநேர இடைவெளியில் உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாம் மாத குழந்தையின் இரத்த ஓட்டமண்டலம் வளர்ச்சி அடையும். குழந்தையின் இதயம் துடிக்க ஆரம்பிக்கும். மூளை மற்றும் முதுகெலும்புத் தொடர்கள் வளர்ச்சி அடையத் தொடங்கும்.குழந்தைக்கு- தலை, கண், காது உருவாகத் தொடங்கும். கைகளும் கால்களும் அரும்பும். கரு உருவாகிய ஆறாவதுவாரத்தில், அதன் கல்லீரல், சிறுநீரகம் மற்றும் நுரையீரல் வளர்ச்சி அடையத் தொடங்கும். இந்தநேரத்தில் குழந்தையின் இதயம் நிமிடத்துக்கு 80 முறைக்கும் மேல் துடிக்கும்.

உடலில் ரத்தத்தின் அளவு அதிகரிக்கும். இந்தக் காலத்தில் சோர்வு, குமட்டல், மலச்சிக்கல், நெஞ்சுஎரிச்சல், வாயுத் தொல்லை, உணவு மீதான வெறுப்பு, தலைவலி போன்றவை ஏற்படும். வாந்தி தொடர்ந்தால், உணவை சிறுசிறுபகுதிகளாகப் பிரித்து, இரண்டுமணி நேரத்துக்கு ஒருமுறை சாப்பிடவேண்டும். அதிக காரம் கலந்த உணவுகளைத் தவிர்க்கவேண்டும். அதிகமான சோர்வு ஏற்படும். நன்கு ஓய்வு எடுக்கவேண்டும். இந்தமாதத்தில் வயிற்றில் இருக்கும் கருவின் வளர்ச்சியைக்கொண்டு, பிரசவத் தேதியைமருத்துவர் கணக்கிடுவார்.


கரு உருவாகி எட்டுவாரங்கள் கடந்தநிலையில், எலும்பு செல்கள், மென்மையான கார்ட்டிலேஜ் செல்கள் உருவாகும். இந்தக் காலத்தில் 'எம்ப்ரியோ' வளர்ச்சி அடைந்து 'ஃபியூட்டஸ்' என்ற நிலையை அடையும். குழந்தையின் முகத்தில்- மூக்கு, காது, உதடு, நாக்கு போன்றவை உருவாகும். ஈறுகளுக்கு அடியில் பற்களும் முளைக்க ஆரம்பிக்கும். கைகளில், விரல்கள் தோன்றும். கைவிரல்களில் நகமும், உள்ளங்கையில் ரேகைகளும் உருவாகும். காலில்-பாதம்,விரல்கள் உருவாகும். கையும், காலும் அசையஆரம்பிக்கும்.

இந்தச் சின்னஞ்சிறு குழந்தை சிரிக்கும், சிணுங்கும், கை விரலைசூப்பும், பனிக் குடத்தின் நீரைவிழுங்கி, அதைச் சிறுநீராக வெளியேற்றும். (இந்தப் பனிக்குடநீர் மூன்றுமணி நேரத்துக்கு ஒருமுறை முற்றிலும் மாற்றப்பட்டுவிடும்). குழந்தையின் இதயத் துடிப்பை அல்ட்ரா சவுண்டு பரிசோதனையில் துல்லியமாகக் கேட்கமுடியும். இப்போது, குழந்தை மூன்று இன்ச் உயரமும், கிட்டத்தட்ட 30 கிராம் எடையும் இருக்கும்.

குழந்தை வளர்வதால், இந்தமாதத்தில் தாயின் எடை, இரண்டேகால் கிலோ அளவுக்கு அதிகரித்து இருக்கும். சிலருக்கு உடல் எடைகுறையவும் வாய்ப்பு உள்ளது. மனதளவில் 'நாம் கருவுற்றிருக்கிறோம்' என்ற எண்ணம், பரவசத்தை ஏற்படுத்தும். பொலிவும் வசீகரமும் அதிகரிக்கும். குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு கால்சியம் மிகவும் அவசியம். கால்சியம் சத்து அதிகம் உள்ள உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். நன்கு சுத்திகரிக்கப்பட்ட பாலைப் பருகுவது நல்லது. மருத்துவரின் ஆலோசனைப்படி, 13-ஆவது வாரத்தில், 'டவுன் சின்ட்ரோம்' உள்ளிட்ட மரபணு குறைபாடு பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். வயிறுமற்றும் இடுப்புப் பகுதிபெரிதாகும் என்பதால், அதற்கு ஏற்ற ஆடைகளைத் அணியவேண்டும். லாஸ்டிக் தன்மையுள்ள ஆடையைப் பயன்படுத்தலாம்.

தமிழரசி, கிளிநொச்சி.

கடந்த அண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி மேகாலயாவில் ஒரு நிகழ்ச்சியில் பேசிக்கொண்டிருந்த இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே மேடையில் மாரடைப்பு ஏற்பட்டு நம்மை விட்டுப் பிரிந்துசென்றார்.




# யார் யாருக்கெல்லாம் அப்துல் கலாம் எதிரி?

கடந்த ஜூலை 30 ஆம்திகதி கலாம் அவர்களுக்காக நடைபெற்ற கடையடைப்பு அன்று நானும் எனது அலுவலகத்திற்கு விடுமுறை அறிவித்துவிட்டு வீட்டில் அமர்ந்து அப்துல் கலாம் அவர்களது நல்லடக்க நிகழ்ச்சியை



தொலைக்காட்சியில் கனத்த இதயத்தோடும் கண்ணீர் சிந்தும் கண்களோடும் பார்த்திருந்தேன். அவரது நல்லடக்கம் முடிந்தது. பாரத பிரதமர் நரேந்தர மோடி அவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார். அவரை தொடர்ந்து பல பிரபலங்களும் மக்களும் மாணவர்களும் இறுதி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர்.

திடீரென்று நானிருக்கும் தெருவில் பெருத்த இரைச்சலும், மகிழ்ச்சி ஆரவாரமும் கேட்டது. என்ன ஏதென்று அறிவதற்கு வெளியில் வந்து பார்த்தேன். அங்கே சிலர் பாண்ட் வாத்தியங்களும் நாதஸ்வரம் தவில் முழக்கத்தோடும் அணி வகுப்பு நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களை தடுத்து நிறுத்தி என்ன விஷயம் என்று கேட்டேன். அதற்கு அவர்கள். அப்துல்கலாம் எங்கள் முதல் எதிரி. அவர் இறந்துவிட்டார் அதனால்தான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அணிவகுப்பை நடத்தி, கொண்டாடி வருகிறோம் என்றார்கள். இதனைக் கேட்ட எனக்கு அதிர்ச்சியில் எனது இதயத்தின் இயக்கமே சில விநாடிகள் நின்று போனது போல் உணர்ந்தேன். பின்பு சுதாரித்துக் கொண்டு ஏன் இப்படி சொல்கிறீர்கள். உலகமே போற்றும் உன்னத மனிதர் மறைந்துவிட்டார் என்ற துக்கத்தில் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் துக்கத்தில் சோகத்தில் மூழ்கி இருக்கும் இந்த நிலையில் அப்துல் கலாம் தான் உங்கள் முதல் எதிரி என்று சொல்கிறீரே. நீங்கள் யார் என்று கேட்டேன்.



அந்தச் சிறு கூட்டத்தில் இருந்த 8 பேர் ஒரு குழுவாக வந்து என்முன் வரிசையாக நின்று ஒவ்வொருவரும் அதற்கான காரணத்தை தெரிவித்தனர்.

1. **ஆணும் பெண்ணுமாய் வந்த இரட்டையர்களில் ஒருவர். நான் கல்லாமை இவள் அறியாமை**




## உலகம் போற்றும் ஆளுமை

கலாம் எங்களை அவரிடம் நெருங்க விடவே இல்லை அதனால் தான் நாங்கள் அவரை எங்கள் எதிரி என்கிறோம் என்றார் கள்.

2. **என் பெயர் சோம்பல்** என்னோடு அவர் ஒரு விநாடி கூட செலவழித்தது கிடையாது அதனால்தான்.

3. **நான் கோவம்** (சினம்) நான் அவரது கண் களிலும் உதடுகளிலும் அவ்வப் போது வெளிப்பட்டு ஆதிக்கம் செய்ய முற்பட் டாலும் அவர் என் தலையில் தட்டி அடக்கி விடுவார். அதனால்தான்

4. **நான் அகங்காரம்** நான் அவரது மூளையை சர்வாதிகாரம் செய்ய நினைத்தேன் அதற்கு அவர் என்னை அனுமதிக்க வில்லை அதனால்தான்.

5. **நான் அதிகாரம்** நான் ஏழைகளையும் எளி யவர்களை ஆட்டிப் படைத்திருக் கிறேன். ஆனால் கலாம் என்னை ஆட்டிப்படைத்து அதிகாரம் செய்து விட்டார் அதனால்தான்

6. **நான் பணம்** நான் பல தலைகளில் கிரீடங் களாக அலங்கரித்திருக்கிறேன். ஆனால் அவரோ என்னை தேவைக்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டார். அதனால் தான்.

7. **நான் பதவி** சுக போகங்களையும் சலுகை களையும் அனுபவிக்கச் சொன்ன போதும் எனது பேச்சை துளியும் மதிக்காமல் எளி மைக்கு உற்ற நண்பனாக இருந்துவிட்டார் அதனால்தான்.

8. **நான் ஓய்வு** அவருக்கு என்னை யாரென்றே தெரியாது, மேலும் என்னை தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்க வில்லை அதனால்தான்.

இந்த எட்டுப்பேரது கருத்துக்களையும் நான் கேட்ட பிறகு, அப்துல்கலாம் அவர்களைப் பற்றிய புரிதலை இவர்களிடம் ஏற்படுத்தும் பொருட்டு, கலாம் அவர்கள் எழுதிய புத்தகங் கள், அவரை பற்றிய புத்தகங்கள், அவர்பேசிய ஒலித் தட்டுக்கள் போன்றவற்றை அவர்களிடம் கொடுத்து, இதைப்படித்து கேட்டு நாளை இதே நேரம் என்னை வந்து சந்தியுங்கள். அப்போது சொல்லுங்கள் அப்துல்கலாம் உங்களுக்கு எதி ரியா என்று சொன்னேன். அவர்களும் அவற்றை வாங்கிக் கொண்டு சென்றார்கள்

அடுத்தநாள் நான் குறிப்பிட்ட அதே நேரத் தில் சரியாக வந்தார்கள். வந்தவர்கள் என்னிடம் சொன்னவாசகங்கள் இவைகள்

1. **கல்லாமை-அறியாமை:** ஐயா கலாம் அவர்களது பேச்சைக் கேட்டோம். இனி நாங்களும் கல்வி கற்போம், விஷயங்களை அறிந்துகொள்வோம் என்றார்கள்.

2. **சோம்பல்:** உழைப்புக்கு தோள்கொடுத்து கடின உழைப்பிற்காக நான் பாடுபடுவேன் என்றது

3. **கோவம்:** அநீதி எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் நான் வெளிப்பட்டு நீதியை நிலைநாட்டுவேன் என்றது


4. **அகங்காரம்:** அன்புக்கு நான் அடிபணிந்து அமைதியாக இருந்து அலங்காரம் செய்வேன் என்றது

5. **அதிகாரம்:** இனி நான் எளியவரை ஆட்டிப்ப டைக்க மாட்டேன். எளியோரை காக்கவே பயன்படுவேன் என்றது.

6. **பணம்:** எல்லா மனிதர்களது அடிப்படை தேவைகளையும் நான் பூர்த்தி செய்ய முயற்சிப்பேன் என்றது

7. **பதவி:** பண்புடன் இணைந்து இன்முகத் தோடு இனி பணிவாக பழகு வேன் என்றது.

8. **ஓய்வு:** என்னை நினைப்போருக்கு, ஆலோசனை கொடுத்து வேறொரு நல்லப ணிக்கு அவர்களை திசை திருப்பு வேன்.



மேற்படி எட்டு பேரும் ஒரே குரலில் ஐயா நாங்கள் உங்களிடம் இதைச் சொல்லிவிட்டு புறப்படுகிறோம் என்றார்கள், நான் எங்கே, என்று கேட்டதற்கு, நாங்கள் எடுத்த இந்த உறுதி மொழியை இராமேஸ்வரத்தில் அப்துல்கலாம் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திற் குச்சென்று உறுதி மொழி ஏற்போம் என்றார்கள்.

எனது கண்களில் நீர் வழிந்தோடியது. அவர் களிடம் நான் அப்துல்கலாம் அவர்கள் கண்ட கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றுசொல்லி அவர்களுக்கும் நல் வாழ்த்து சொல்லி அனுப்பிவைத்தேன்.

நன்றி: விதைவிருட்சம்
சத்தியமூர்த்தி



# மர்மம் நிறைந்த ஈஸ்டர் தீவு

உலகில் மர்மம் நிறைந்த பகுதிகள் நிறைய உள்ளன. அதில் ஈஸ்டர்தீவும் ஒன்று. இங்கு அப்படியென்ன மர்மம் உள்ளது என்றுதானே நினைக்கிறீர்கள். மோவாய் என்று அழைக்கப்படும் கற்சிலைகள் இங்கு நிறைய உள்ளன. மோவாய் என்பது பறவை மனிதன் என்ற உருவத்தைச் சொல்லும் வார்த்தை. பண்டையகால மூதாதையர்களின் முகங்கள் இவை. இது தொன்மைவாய்ந்த ஒரு மனித இனத்தின் வழிபாட்டுச்சிலை. மோவாய்பற்றி இப்படி நிறையச்சொல்கிறார்கள் ஆய்வாளர்கள்.

பறவை மனிதன் சிலைவழிபாடு தென்கிழக்கு பசிபிக்பெருங்கடல் பகுதியில்உள்ள சிலி நாட்டுக்கு அருகே ஈஸ்டர்தீவில் மிகப்பிரபலமாம். இதற்காக ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பு மிகப்பிரம்மாண்டமான சிலைகளை அத்தீவு முழுவதும் நிறுவிமக்கள் வழிபட்டதாகக் கூறுகிறார்கள். சிலைகளை வைப்பதற்காகவே அத்தீவில் இருந்த மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன.
மரம் அழிக்கப்பட்டதால் ஒரு கட்டத்தில் அத்தீவில் மழைபொய்த்து விவசாயத்துக்கு வழி இல்லாமல் போனது. இதனால் உணவுப்பஞ்சம் ஏற்பட்டது. பசியைப்போக்க மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொன்று நரமாமிசம் உண்டு மடிந்தனர். எஞ்சியவர்கள் அம்மைநோயால் இறந்தனர் என இத்தீவைப் பற்றிப் பல கதைகள் உலாவருகின்றன.

உச்சக்கட்டமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் இருந்தே இத் தீவு துண்டிக்கப்பட்டு மர்மதேசமாக மாறியதாகவும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இப்படி மர்மங்கள் நிறைந்த இத்தீவு 1888-ஆம் ஆண்டுக்குப் பின்புதான் உலகின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்தது. இத்தீவு மக்களின் வாழ்க்கை முறையை முழுவதும் அறிய இப்போதும் கூடதொல்லியல் துறையினர் பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஈஸ்டர் தீவில் தற்போதுவரை 887 மோவாய் சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன.ஒவ்வொரு சிலையும் 10 மீட்டர் உயரத்திலும் 80 முதல் 250 டன் எடையிலும் உள்ளது.இந்தச்சிலைகளை எப்படி வடித்தார்கள், கற்களை எப்படித்தூக்கி நிறுத்தினார்கள் என்பதற்கெல்லம் துல்லியமான பதில்கள் இல்லை.

மனிதர்களே இல்லாமல் சிலைகளுடன் உள்ள ஈஸ்டர் தீவு மர்மதேசமாகவே இன்றும் நீடிக்கிறது.





நன்றி இணையம்

# Wedding Cards Print & Sale

## CTP & Colour Separation




# Specialized In Wedding Cards

### Available Places

Kilinochchi - Velan Printers / Siva Pathippagam
Vavuniya - Kalaimagal Printers / Vanni Quick Printers
Batticaloa - Aathavan Printers / New Keen Printers
United Book Shop
Yatiyantota - Swarna Print
Matale - VJ Printers
Thalawakala - Geetha Press / Harani Printers
Umaiyal Printers
Trincomalee - Sun Printers / New Uthayan Printers
Paruththithurai - Jeevan Printers
Kaludawalai - Maaruthi Printers
Nuwara Eliya - Nuwara Eliya Printers / Apeksha Offset Printers
Laxmi Printers
Puttalam - Serendip Printers
Kandy - Vino Printers

**United Creation**

51A, Negombo Road, Peliyagoda.
Tel : 0112 938 083, 0115 767 309
Mobile : 0777 347 452
Email : unitprintek@gmail.com



அறிந்து கொள்வோம்

# பாத்திரம் அறிந்து சமைப்போம்

நம் முன்னோர்கள் மட்பாண்டத்தில் தான் உணவு சமைத்தனர். நாம் இன்று நொன் ஸ்டிக் பாத்திரங்கள் வரை வளர்ந்திருக்கின்றோம். மண் சட்டியில் கீரையை வேகவைத்து அகப்பையால் நன்றாகக் கடைந்து பாத்திரத்தில் எடுத்துவைத்தது போக மீதியாக இருக்கும் கீரைச்சட்டியில் சோற்றைப்போட்டுப் பிசைந்து இயல்பான வாசத்துடன் சாப்பிட்ட சுக அனுபவம் பலருக்கு வாய்த்திருக்கும். இன்றைய நொன் ஸ்டிக் பாத்திரங்களில் உணவு ஒட்டாமல் சமைக்கப்பட்டு தயாராகிறது. பாத்திரத்தில் ஒட்டாதது போலவே அதன் சுவையும் சத்தும் கூட உடலில் ஒட்டாமலே போய்விடுகின்றது என்ற ஏக்கம் பலருக்கு உண்டு. சமையல் முறைகளும் அடுப்புகளும் ஏன் சமையல் அறைகளும் கூட சவீனத்திற்கு மாறிவிட்ட இக்காலத்தில் மண்பாண்டத்தை தேடிச்சென்று வாங்குவது அனைவருக்கும் சாத்தியமில்லை எனினும் எந்தப்பாத்திரத்தில் சமைப்பது ஆரோக்கியமானது?

### மண்பாண்டம்

எளிதில் உடைந்துவிடும், சுத்தம் செய்வது சிரமம், அதிக இடத்தை அடைத்துக்கொள்ளும், எல்லா இடங்களிலும் எல்லா அளவுகளிலும் கிடைப்பதில்லை என பல பிரச்சினைகளைக் கொண்டிருந்தாலும் சமையலுக்கு பயன்படுத்தும் பாத்திரங்களிலேயே மிகச்சிறந்தது மண்பாண்டங்களே. மண்சட்டிகளில் உள்ள நுண்துளைகள் வழியாக நீராவியும் காற்றும் ஊடுருவி உணவை சரியான பதத்தில் சமைக்கவைக்கும். இதில் சமைத்த உணவு கூடுதல் சுவையுடனும் பல மணி நேரம் கெடாமலும் இருக்கும்.பாத்திரத்தின் வேதிப்பொருட்கள் வினைபுரிந்து அமிலத்தன்மை போன்ற பாதிப்பை ஏற்படுத்தாது.





### அலுமினியம்

விலை மலிவாகக்கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அருமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்துவோர் அதிகம். எளிதில் வெப்பத்தைக் கடத்தும் தன்மைகொண்டது என்பதால் அலுமினியப் பாத்திரங்களில் சமைக்க அதிக எரிபொருள் செலவாவதில்லை. ஆனால் இது ஏற்படுத்தும் பாதிப்புகளும் மிக அதிகம். அலுமினியப் பாத்திரங்களில் புளிப்பு சுவையுடைய உணவுகளைச் சமைத்தால் அமிலத் தன்மையுடன் வினை புரிந்து உணவுப்பொருட்களில் எளிதில் அலுமினியத்தாது கலந்துவிடக்கூடும். எனவே புளிப்பு சுவை உணவுகள், தயிர் போன்றவை அலுமினியத்திற்கு ஆகாது. கீரைகளை அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கும் போது உடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒக்ஸலேட் போன்ற இரசாயனங்கள் உருவாகக்கூடும். தொடர்ச்சியாக அலுமினியப் பாத்திரங்களில் சமைத்து உண்போருக்கு அல்ஸீமர் மற்றும் டிமன்சியா போன்ற மறதி நோய்கள் காக்கும் அபாயம் உள்ளகு.



அறிந்து கொள்வோம்




## எவர்சில்வர்

மட்பாண்டத்திற்கு அடுத்து எவர்சில்வர் பாத்திரங்கள் உணவு சமைக்கச்சிறந்தவை. இதன் உள்ளே எந்த உலோகம் இருந்தாலும் மேல் பூச்சு இரும்பாக உள்ளதால் இதிலிருந்து நச்சுகள் ஏதும் உணவில் கலப்பது இல்லை. எந்த அமில வினை புரியும் திறனும் எவர்சில்வர் பாத்திரங்களுக்கு இல்லாததால், உணவின் சுவையையோ இயல்பையோ மாற்றுவதில்லை. எனவே, சமைத்த உணவுகளை இதில் பலமணிநேரம் வைத்திருக்கலாம். இதில் ஒரே குறை என்னவென்றால், சமைக்கும்போது உணவு அடிபிடித்துக்கொள்ளும் என்பதால் அதிக எண்ணெய் பயன்படுத்தவேண்டியிருக்கும். எவர்சில்வர் சமையல் பாத்திரம் வாங்கும் போது செப்பு அடிப்பாகம் உள்ளதா எனப் பார்த்து வாங்கவும். செப்பு வெப்பத்தை எளிதில் கடத்தும் என்பதால் உணவில் விரைவாகவும் சீராகவும் அனல் பரவி, சமையல் சீக்கிரம் முடியும்.

## வார்ப்பிரும்பு

பல குடுமுபங்களில் ஆண்டுக்கணக்கில் பாரமான தோசைக்கல்லை வைத்திருப்பார்கள். இவை வார்ப்பிரும்பில் செய்தவை. சிலர் சட்டிகளையும் இப்படி வைத்திருப்பதுண்டு. இந்த இரும்பு பாத்திரங்கள் உணவு சமைக்க ஏற்றவை. சுமைத்த உணவில் வெப்பத்தை பல மணிநேரம் சீராகத் தக்கவைக்கும் திறன் கொண்டவை. பாரம் அதிகமாக இருப்பதால் பராமரிப்பது சிரமம். ஆரம்பத்தில் சமையலுக்கு பழக்குவதற்கு அதிக எண்ணெய் சேர்த்து சிரமப்படவேண்டும். ஆனால் எண்ணெய் சேர்த்து சேர்த்து இயல்பான ஒரு நொன்ஸ்டிக் கோட்டிங் கிடைத்த பிறகு, இதிடி; சமைக்கும் உணவிற்கு அலாதி சுவை கிடைத்துவிடும்.



## செப்பு

செப்பு எனப்படும் கூப்பர் நம் உடலுக்கு தேவைப்படும் மினரல்களில் ஒன்றாக இருக்கிறது. நூறு சதவீதம் செப்பில் செய்யப்பட்ட பாத்திரங்களில் சமைக்கும் போது மிகக் குறைந்த அளவே உணவில் செப்பு சேர்கிறது. எனவே அதனைப் பொருட்படுத்தத்தேவையில்லை என்கிறார்கள் நிபுணர்கள். எளிதில் வெப்பத்தை கடத்தும் என்பதால் இவ்வாறான பாத்திரங்களில் சமையலை விரைவாக முடித்துவிடலாம். ஆனால் அமிலத்தன்மை உள்ள உணவுடன் இது வினைபுரியும் என்பதால் ரசம், புளிக்குழம்பு என்பவற்றை இதில் சமைக்கக்கூடாது.

## பீங்கான்

மைக்ரோவேவ் அவன்களில் சமைக்கப்பயன்படும் பீங்கான் பாத்திரங்களால் எந்தப்பிரச்சினையும் ஏற்படாது. ஆனால் மலிவான பீங்கான் பாத்திரங்கள் உயர்வான கொதிநிலையில் தயாரிக்கப்படுவதில்லை என்பதால் அவை உணவில் நச்சுத்தன்மையை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது. எப்போதும் தரமான பீங்கான் பாத்திரங்களையே பயன்படுத்த வேண்டும்.


## நொன் ஸ்டிக்

இந்த வகைப் பாத்திரங்களில் டெப்லோன் என்னும் பொலிமர் பூச்சு பூசப்படுகின்றது. இதே போல இதர கோட்டிங்குகளும் உண்டு என்றாலும் இவை எல்லாமே நச்சுக்கள். உணவில் கலக்கும் போது பல பிரச்சினைகளைத் தரும் அபாயம் உள்ளவை. நொன் ஸ்டிக் பாத்திரங்களில் அதிக எண்ணெய் சேர்க்காமல் ஆரோக்கியமாக சமைக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அதற்கு மிகுந்த கவனம் தேவை. இந்த வகை பாத்திரங்களில் எப்போதும் குறைவான சூட்டிலேயே சமைக்கவேண்டும். அடிப்பாகத்தில் கீறல் விழாமல் இருக்க மரக்கரண்டிகளையே பயன்படுத்தவேண்டும். சூடாக இருக்கும் போது சுத்தம் செய்யக்கூடாது. சோப் போட்டு பிரஸ் பயன்படுத்தாமல் கைகளால் தான் கழுவவேண்டும்.

**எந்த வகைப் பாத்திரமாக இருந்தாலும் அதில் கீறல், பழுது ஏற்பட்டால் அதை உபயோகிக்கக்கூடாது. எல்லா சமையல் பாத்திரங்களையும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றிவிடுவது சிறந்தது.**

நன்றி பசுமை

# The wise judge



Two women were brought before king Solomon. Both these women had a quarrel over a single baby. Each women was saying that she was the baby s mother.


One lady said oh king iam the baby is mother.

The other lady said oh king believe her not. She is not the mother. I am the mother of the child.

King Solomon was confused. After a deep thought he said. Cut the baby into two and give one part to each mother. one women was silent. the other cried oh king let she have the baby. Let the baby live the king have the child to the crying mother.

**Truth always triumphs**

தமிழ்மொழி பெயர்ப்பு - 74 ஆம் பக்கத்தில்



**டீச்சர்:- உங்கப்பாவுக்கு எத்தனை வயசாகுது?**
**மாணவன்:- 6 வயசு டீச்சர்?**
**டீச்சர்:- என்னடா சொல்ற...?**
**மாணவன்:- ஆமா டீச்சர். நான் பிறந்ததுக்கு அப்புறம்தானே அவர் அப்பா ஆனார்.**

## போட்டிகளுக்கான கூப்பன்

முழுப்பெயர் : ........................................

........................................

முகவரி : ........................................

........................................

தொலைபேசி இல.: ........................................


ஒப்பம் : ........................................

போட்டியின் பெயர் : ........................................

........................................

முதியோர் தினம்

## இது எப்படி இருக்கு?




## இம் மாத போட்டிப்பரீட்சைக் கையேட்டுக்கான விடைக் குறிப்புக்கள்

### பொது விவேகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2,3 | 08. 1,3 | 15. 3 | 22. அ | 29. அ |
| 02. 2,4 | 09. 2,5 | 16. குறுக | 23. இ | 30. இ |
| 03. 3,4 | 10. 1,3 | 17. கூதல் | 24. இ | 31. 2 |
| 04. 2,3 | 11. 2 | 18. ஏனம் | 25. இ | 32. 1 |
| 05. 1,4 | 12. 3 | 19. நத்து | 26. ஈ | 33. 2 |
| 06. 2,5 | 13. 4 | 20. காதம் | 27. இ | 34. 3 |
| 07. 2,4 | 14. 2 | 21. இ | 28. ஆ | 35. 4 |

### பொது அறிவு

01. ஒக்டோபர் 09ஆந்திகதி 02. பியாஜே 03. 1984 ஆம் ஆண்டு நேபாளத்தின் காட்மாண்டு நகரில் 04. நைதரசன் ரூ 78.03% ஒட்சிசன் ரூ 20.99% காபனீரொட்சைட் ரூ 0.03% வேறு வாயுக்கள் ரூ 0.95% 05. லைபீரியாவின் நாட்டின் முன்னாள் அதிபர் சார்ல் டெயிலர் 06. லிய் சீசர் 07. 2005ம் ஆண்டிலாகும். 08. ஐக்கிய இராட்சிய அமீரகம் (UAE) 09. 03.03.2016 புற்றுநோய் காரணமாக மரணம் அடைந்தார். இறக்கும்போது வயது 53 10. கியுறியோசிற்றி 11. 1987 இல் 12. சோல்பரி அரசியலமைப்பு 13. பண்டா ரூ செல்வா ஒப்பந்தம் எனும் பெயரில் 14. 1956ம் ஆண்டு 15. 1948 இல் 16. சர்வதேச ஒளிவருடம் (Year of Light) சர்வதேச மண்வருடம் (Year of Soil) 17. சர்வதேச குடும்ப விவசாய வருடம். 18. ரேடியத்தைக் கண்டுபிடித்த மேரி கியூரி அம்மையாரின் குடும்பமாகும். 19. வலகம்பா. 20. கண்டியைச் சேர்ந்த திருமதி சந்திரா ரண ராட.





# சலரோகம்

**சலரோகவியாதி இருப்பவர்களுக்கு காலில் உணர்ச்சி குறைதல் மற்றும் கால் விறைப்பு ஏற்படுவதற்கான காரணம் என்ன?**

நீண்டகாலமாக சலரோகம் கட்டுப்பாடின்றி இருக்கின்றபோது, உடலில் மிகச்சிறியகுருதிக்குழாய்களில் இரத்தஓட்டமானது சீராகநடைபெறாமல் தடைப்படுகின்றது. இதனால் பல உடற்றொகுதிகள் பாதிக்கப்படுகின்றன. இவற்றுள் நரம்புத்தொகுதியும் ஒன்றாகும். கால்களுக்குச் செல்லும் நரம்புகள் ஆரம்பத்திலேயே பாதிக்கப்படும். இதனால் காலில் உணர்ச்சி குறைவு மற்றும் விறைப்புபோன்றவைதோன்றும். சிலருக்குகாலில் மற்றும் அடிப்பாதங்களில் எரிவு என்பனவும் காணப்படும். கிட்டத்தட்ட 25 சதவீதமான சலரோகநோயாளிகளில் சலரோகம் இருப்பது கண்டுபிடிக்கப்படும் போதே அவர்களின் நரம்புகளும் பாதிக்கப்பட்டிருக்கும்.

**சலரோக நோயாளிகளில் நரம்புகளை தாக்கும் காரணிகள் (risk factors) எவை?**

நீண்டகாலத்திற்கு இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படுத்தப்படாமல் அதிக அளவில் காணப்படுவதே மிகப்பெரியகாரணியாகும். ஏனைய காரணிகளாக புகைப்பிடித்தல், அதிக குருதி அமுக்கம் (high blood pressure) கூடிய உடற்பருமன், அதிக கொழுப்பு (cholesterol) இருதயகுழாய்களில் அடைப்பு (coronany artery disease) போன்றவற்றைச் சொல்லலாம். இவ்வாறான பிரச்சினைகள் இருப்பவர்களுக்கு விரைவாக நரம்புத்தொகுதி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.






## மருத்துவம்

### சலரோக நரம்பு வியாதிக்கான (diabetic neuropathy) அறிகுறிகள் என்னென்ன?

பொதுவாக பாதங்களில், எரிவு, வலி, விறைப்பு, முள்குத்துதல் போன்ற உணர்வு, மெல்லிய தொடுகைக்கு அதிகளவானவலி போன்ற அறிகுறிகள் தென்படும்.

கால்வலி, ஓய்வு நிலையில் அதிகளவாகவும் வேலைசெய்யும் போது அல்லது நடக்கும் போது குறைவாகவும் காணப்படும்.


இந்த அறிகுறிகள் முதலில் கால்விரல்களையோ அல்லது அடிப்பாதத்தையோ தாக்கும். இரண்டு கால்களையும் பொதுவாக ஒரேநேரத்தில் தாக்கும். சலரோகம் தொடர்ந்தும் கட்டுப்பாடின்றி இருக்கு மாயின் இவ் அறிகுறிகள் காலின் மேற்பகுதியையும் தாக்கும். பொதுவாக இவ் அறிகுறிகள் முழங்கால் பகுதிக்குவரும் போதுகைகளையும் தாக்க ஆரம்பிக்கும்.

### சலரோக நரம்பு வியாதியினால் ஏற்படக்கூடிய நீண்டகாலப் பிரச்சினைகள் எவை?

காலில் உணர்ச்சி குறைவதனாலும் விறைப்பு உண்டாவதாலும் காலில் ஏதாவதுகாயங்கள் ஏற் பட்டால், உதாரணமாக முள் குத்தினால் அல்லது கூரானபொருட்கள் ஏதாவதுகாலைக் கிழித்தால் பொதுவாக வலிதெரியாது. இதனால் காலில் உண்டானகாயம் தெரியாமல் அல்லதுகவனிக்கப்படாமல் போய்விடும். எனவே ஒருசிறியகாயம், மருந்து போடப்ப டாததால் அல்லது சுத்தப்படுத்தப்படாததால் பெரியகாய மாகமாறும் சந்தர்ப்பம் உண்டாகிறது. பின்னர் கிருமிகள் இதனூடாக உட்சென்று சீழ் கட்டி பெரிய புண்ணாகமாறி விடும்.

Dr. M.ஜெவோன் யுதிஷ்டிரன்
விசேட பொதுவைத்திய நிபுணர்
(யாழ் போதனா வைத்தியசாலை)

---





# இரத்தக் குழாய் அடைப்பு

### இரத்தக்குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்தின் வகை

மூளைக்கு குருதியை விநியோகிக்கின்ற இரத்தக்குழாய்களில் ஏற்படுகின்ற குருதிக்கட்டிகளினால் ஏற்படுகின்ற பாரிசவாதம். (Thrombotic stroke) இரத்தக்கட்டிகள் உடலின் வெவ்வேறுபகுதிகளில் உருவாகி இரத்தஓட்டத்துடன் மூளையைஅடைந்து மூளைக்கானகுருதிவிநியோகத்தைதடைசெய்வதனால் ஏற்படுகின்றபாரிசவாதம். (Embolic stroke)

இதயத்தின் குருதியை உடற்பகுதிகளுக்கு விநியோகிக்கின்ற தொழிற்பாடு குறைவதால் மூளைக்கான குருதிவிநியோகம் குறைவடைந்து ஏற்படுகின்ற பாரிசவாதம். (systemic hypoperfusion) இது பெரும்பாலும் மாரடைப்பின் (heart attack) பின்னர் உண்டாகிறது.



### இரத்தக்குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்தினை கண்டறிதல் எப்படி?

பாரிசவாதத்திற்கான அறிகுறிகள் காணப்படின் வைத்தியர் பின்வருவனவற்றை கவனமாக மேற்கொள்வதன் மூலம் கண்டறியலாம்.

1. நோய் பற்றிய சுயவிபரம்
2. தேவையான உடல், நரம்புசம்பந்தமான பரிசோதனைகள்
3. இரத்தச்சோதனை
4. CT ஸ்கான்

### இரத்தக்குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்திற்கான சிகிச்சைமுறைகள்

இவ்வகையான பாரிசவாதத்திற்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் மூளையில் பாதிக்கப்படுகின்ற பகுதியின் அளவினைக் குறைக்கலாம்.

உலகளாவியரீதியில் பல்வேறுஆய்வுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்ட மருந்தானது (TPA) இரத்தக்கட்டியை கரைப்பதற்கு உதவுகின்றது, இம் மருந்தானது பாரிசவாதத்திற்கான குணங்குறிகள் ஏற்பட்டு 4 1/2 மணித்தியாலயங்களிற்குள் ஊசிமூலம் வழங்கப்படல் வேண்டும். மேலும் பாரிசவாதத்தினால் மூளையின் பகுதி வீக்கமடைந்திருப்பின் அதற்கான சிகிச்சையும் வழங்கப்படல் வேண்டும்.

### இரத்தக்குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்தினை தடுப்பதற்கான வழி முறைகள்.

ஒருவர் ஒருமுறைபாரிசவாதத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் பாரிசவாதத்தினால் பாதிக்கப்படுவதற்குசந்தர்ப்பம் உண்டு. இதனால் பாரிசவாதத்திற்கான அபாயகாரணியை கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகள் வழங்கப்படல் வேண்டும்.

**உதாரணமாக.**

குருதி கட்டிபடுவதனைக் குறைத்தல். இதற்கு Asprin (*அஸ்பிரின்*), Clopidogrel போன்றமருந்துகள் பயன்படுகின்றது.

உயர்குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளைப் பயன்படுத்தல்.

குருதியில் உள்ளகொலஸ்ரோலின் அளவைகுறைப்பதற்கானமருந்துகளைப் பயன்படுத்தல்.

**இவை குருதிக்குழாய்களில் ஏற்படுகின்ற பாதிப்பினையும் குறைக்கிறது.**

**Dr.அஜினிஅரசலிங்கம்**
**விசேடநரம்பியல் வைத்தியநிபுணர்**
**யாழ் போதனாவைத்தியசாலை**

விருந்தும் மருந்தும்

முதியோர் தினம்



# சர்வரோக நிவாரணியான முருங்கைக்கீரை

முருங்கைகீரையானது சோபஞ்சனம், கிரஞ்சனம், சிக்குருஎனவும் அழைக்கப்படுகின்றது. இதன் பயன் கருதிசித்தர்கள் இதனைபிரம்மவிருட்சம் எனச் சிறப்பித்துக்கூறியுள்ளனர். முருங்கைகீரை, முருங்கை பூ, முருங்கைகாய் என்பன உணவாகப் பயன்படுவதோடு அற்புதமான மருத்துவகுணம் கொண்டவையாகவும் விளங்குகின்றன. அத்துடன் முருங்கைப் பிஞ்சு, விதை, பிசின், வேர், பட்டை முதலியனவும் மருந்திற்கு உதவுகின்றன. முருங்கை மரத்தை ஏழை எளியவர்களின் மரப்பயிர் என்று கூறுவர். முன்னைய காலங்களில் இதனை உணவாக உண்டு பலர் உயிர்வாழ்ந்திருக்கின்றனர். அதனால் இதனைபஞ்சம் தாங்கி உணவு என்றும் சொல்வதுண்டு. முருங்கை இலையைப் பறித்துசுத்தமாக்கிவடை செய்யும் போது போட்டால் நன்றாக இருக்கும்.

ஏழைகளின் உணவாக கூறப்படும் கீரைவகைகள் ஒவ்வொன்றும் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்தவை. பக்கவிளைவுகள் அற்றவை. மிகமலிவாக அதாவது இலகுவாகவும் இலவசமாகவும் கிடைக்கக்கூடிய முருங்கை கீரைபற்றி அறிந்து கொள்வோம்.

முருங்கைகீரை பலவிதமான நோய்களையும் குணமாக்கும் கை கண்டமருந்தாக உள்ளது. முருங்கைகீரையை சாப்பிட்டுவந்தால் உடலுக்கு குளிர்ச்சியும் வலிமையும் கிட்டும். உடல் வறட்சியைப் போக்கும். மலத்தை இழக்கிமலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும். முடி உதிர்வதைத் தடுத்துவாய் துர்நாற்றத்தைவிரட்டும். சிறுநீரைப் பெருக்கி உடலில் உள்ள கழிவுகள் வெளியேற உதவும். வயிற்றுப் பூச்சி, புளுக்களைக் கொல்லும். கைக்குழந்தை உள்ளதாய்மாருக்கு ரத்தவிருத்திக்கு உதவி இரத்த சோகையைக் கட்டுப்படுத்தும். காமாலையைக் குணமாக்கும். கண் பார்வையைத் தெளிவுபெறச்செய்யும்.

முருங்கை இலைச்சாற்றுடன் கரட் சாறு சமஅளவு பருகினால் சிறு நீர் நன்றாகப் பிரியும். மேலும் குடல், சிறுநீர் கோளாறுகளினால் உடலில் ஏற்படும் நீர்ச்சுரப்பு, வீக்கம் என்பனகுணமாகும். முருங்கை இலையைசூப் வைத்து அருந்தினால் ஆஸ்துமா, மார்புச்சளி, கபம் ஆகியவைகட்டுப்படும்.

முருங்கை இலைச்சாறுடன் சிறிது சுண்ணாம்பும் தேனும் கலந்துதொண்டைக் குழியில் தடவினால் இருமல், குரல் கம்மல் குணமாகும். கர்ப்பிணிப் பெண்கள் முருங்கை கீரையை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இதனால் கர்ப்பப்பையின் மந்தத்தன்மைநீங்கிபிரசவத்தை எளிதாக்க துணைசெய்யும். முருங்கைக் கீரையுடன் வேர்க்கடலையைச் சேர்த்துசாப்பிட்டுவந்தால் கர்ப்பப்பைவலுவடையும். இது கொழுப்பைகுறைக்கவும் நீரிழிவுநோயைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. வெண்ணெயைக் காய்ச்சிநெய்யாக்கும் போது அதில் முருங்கை இலையைப் போட்டுக் காய்ச்சினால் நெய் அதிகவாசனையுடனும் நீண்டநாள் கெட்டுப்போகாமலும் இருக்கும்.

முருங்கை இலைச்சாற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்துகாய்ச்சிவைத்துக்கொண்டு அதனைகாயத்தில் பூசசொறி, சிரங்குகாயம் என்பனகுணமாகும். அடிபட்டதால் ஏற்படும் ரத்தக்கட்டு, ரத்தக்கசிவு ஆகியவற்றுக்கும் நல்லநிவாரணம் கிடைக்கும். முருங்கை இலைச்சாற்றுடன் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துதடவிவந்தால் முகப்பருக்கள் மறையும். பருக்களால் ஏற்படும் கரும்புள்ளிகளும் நாளடைவில் மறைந்துவிடும். முருங்கைகீரைசாற்றுடன் மிளகுசேர்த்து அரைத்து நெற்றியில் தடவிவந்தால் தலைவலிதீரும்.

தொகுப்பு- மகதி



## பார்ப்போம் பழகுவோம்

தையற் கலையானது பெண்களின் சுயதொழில் முயற்சியின் சிறந்த தெரிவாகும். மனித வாழ்க்கையில் ஆடைகளின் தேவை என்பது இன்றியமையாத ஒன்றாகும். காலநிலை மாற்றத்துக்கும் நாகரீக மாற்றத்துக்கேற்ப ஆடைகளின் தன்மைகளும், வடிவங்களும் மட்டுமே மாற்றமடைகின்றன.

தையற் கலையானது இல்லத்தரசிகளின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யவும் ஓய்வு நேரங்களை பயன்மிக்கதாக்கவும், வீட்டிலிருந்தபடியே வருவாயை ஈட்டிக்கொள்ளவும் உறுதுணைபுரிகின்றது.

ஒவ்வொருவரும் தங்கள் சுயதேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவேனும் தையற்கலை பற்றிய விடயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அடிப்படையிலிருந்து சிறந்த விளக்கங்களோடு இப் பகுதியைத் தருகிறேன்.


தையற்கலையை பயில ஆர்வமுள்ளோருக்கு சிறந்த ஆசானாக இத்தொடர் அமையும்.

அடிப்படை விடயங்கள், பயன்பாட்டுக் கருவிகள், தையல் வகைகள், ஆடை வடிவமைப்புக்கான அளவீடுகள் அவற்றைப் பெறும் முறைகள், அமைப்புகள், வெட்டும் முறைகள், தைக்கும் முறைகள, அலங்காரத் தையல் வகைகள் மற்றும் அலங்கார வடிவங்கள், ஆடைகளின் மாதிரிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத் தொடர் அமையும்.

**அடிப்படைத் தொழில்**


**1. பெரிய நூலோட்டம்**

இது ஆடைகளைப் பொருத்துவதற்கு முன்பாகவும், மடிப்புகளைத் தைப்பதற்கு முன்பாகவும் அளவாக மடித்து நூலோடிக் கொள்ளுதலாகும். இது ஒரு ஆதாரத் தையலாக அமையும்.



தைக்க ஆரம்பிக்குமிடத்தில் 3 விஸ்பம் தைத்து தொடர்ந்து மேற்பக்கம் 0.5 உம் கீழ்ப்பக்கம் 0.25 ஆகவும் நூல் வருமாறு தைத்து இறுதியில் 03 விஸ்பம் தைத்து முடித்துக்கொள்ள வேண்டும்.

படத்தில் காட்டியவாறு ஊசியை மேலும் கீழுமாக செலுத்துதல் வேண்டும்.




**2. சிறிய நூலோட்டம்**

இத் தையலானது பெரிய நூலோட்டம் போலவே அமைந்தாலும் தையல் மேலும் கீழும் சம அளவிலேயே இருத்தல் வேண்டும்.

தையலை தொடங்கும்போதும் முடிக்கும்போதும் விஸ்பம் தைத்துக்கொள்ளல் வேண்டும்.

இது ஒரு நிலையான தையலாகும்.

அலங்கரிப்புத் தையல்களை உருவாக்குவதற்கும், ஆடைகளைப் பொருத்துவதற்கும், கருக்குகளை அமைப்பதற்கும் பயன்படும்.



**விஸ்பம்**

ஆடைகளைப் பொருத்திக்கொள்வதற்கும் மடிப்புகளைத் தைத்துக்கொள்வதற்கும் சக்திவாய்ந்த தையலாக அமைகிறது. தையல் பூர்த்தியாகும்போது மேற்புறம் இயந்திரத் தையல்போலவும் கீழ்ப்புறம் நரம்புத் தையல்போலவும் தோன்றும்.

6th HAPPY TEACHER'S DAY!

பார்ப்போம் பழகுவோம்

# தையற்கலை



**தையல் ஆசிரியருடனான**
**தொடர்புக்கு (071 862 8369)**

திருமதி சுமித்ரமலர்
போதனாசிரியர்
தையற்கலை.

**தைக்கும் முறை**

துணியின் கீழ்புறமிருந்து ஊசியைக் குற்றி மேலெடுத்து படத்தில் காட்டியவாறு பின் தள்ளிக் குற்றி கீழ்ப்புறம் செலுத்தும் ஊசியை முதல் தையலின் முன்னால் மேலெடுத்து தொடர்ந்து தைக்கவேண்டும்.

**ஊசி வகைகள் பற்றி அறிவோம்.**

துணிகளின் தன்மைக்கேற்ப பயன்படுத்தக்கூடியவாறு அளவு, வகைகளில் ஊசிகள் தயாரிக்கப்படுகின்றன.

இவற்றில் தையல் இயந்திரம் பின்னல் வேலைப்பாடுகள் என்பவற்றுக்கான ஊசிகளில் அதன் இலக்கம் பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால், கைத் தையல்களுக்குப் பயன்படுத்தும் ஊசிகளுக்கு அதைப் பொதி செய்திருக்கும் காகிதத்திலேயே இலக்கமிடப்பட்டிருக்கும்.

## துணிகளின் வகைகளும் ஊசி இலக்கங்களும்

| துணிகளின் வகை | கைத்தொழில் ஊசி இலக்கம் | தையற் பொறி ஊசி இலக்கம் |
|---|---|---|
| மிகவும் மென்மையான துணிகள் பட்டு ஜோயெற், நெற், லேஸ், ஓகன்ரி, வொயில் போன்றன அலங்காரத் தையல்கள் | 09, 10 | 9.11 |
| மென்மையான துணிகள் வூல், வெலோனா, சலஞ்சர், இன்ரகூலர் பட்டசில்க், பப்ளின், கொட்டன் | 7<br>8, 0 | 11, 14 |
| பெற்லுக் | 9, 10 | 11 (பெற்லுக் ஊசி) |
| கடினமான துணிகள் டெனிம், வெல்வெற் பெற்சீற், சூட்டிங்ஸ் | 6, 7 | 14, 16 |
| மிகவும் கடினமான துணிகள் கன்வஸ், லெதர் கோட்டிங் | 5, 6 | 16, 18<br>21 |




# மாறுபட்ட சிந்தனைகளே மாற்றத்திற்கு வழிகோலும்







**சு**யதொழில் என்பது முன்னையகாலங்களில் தரக்குறைவான ஒன்றாக நோக்கப்பட்டபோதிலும் இன்றையகாலத்தில் அதுமிகப் பிரமாதமான தாகவே கருதப்படுகின்றது. ஏனெனில், யாருடைய கட்டுப்பாடுகளும் இன்றி சுயமாக தமது எண்ணங்களின் போக்கிற்கு தொழில் புரிய முடிவதுடன் காலத்தின் தேவைக் கேற்பதயாரிப்புகளையும் மேற்கொள்ள முடியும். இவர்கள் சிறந்த தொழில் முயற்சியாளர்களாக பாராட்டப்பட்டு இவர்களின் கண்டு பிடிப்புகளுக்கான அங்கீகாரமும் வழங்கப்படுகின்றது. அரசின் இத்தகைய பாராட்டுகளே பல்வேறான சுயதொழில் தயாரிப்புகளையும் பலதரப்பட்டதொழில் முயற்சியாளர்களையும் உருவாக்கியுள்ளது என்பது அனைவரும் அறிந்தவிடயமே.

இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக சிறந்ததொழில் முயற்சியாளரான முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் திருமதிசாஜிராணி அவர்களை ஒளி அரசிக்காக நேர்காணல் செய்தவேளை அவர் எம்மோடுபகிர்ந்துகொண்டகருத்துக்கள் வாசகர்களாகிய உங்களுக்காக.

**எமது வாசகர்களுக்காக உங்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றைத்தாருங்கள்?**

நான் சாஜிராணி கிருஷ்ணதாஸ். எனக்கு ஒரு மகன் உள்ளார். கணவர் கடந்தயுத்தத்தில் இறந்துவிட்டார்.

**சுயதொழிலில் ஈடுபாடுவரக் காரணம் யாது?**

ஈடுபாடு என்பதற்கப்பால் மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏதாவது ஒருதொழில் செய்தே ஆகவேண்டும் என்றகட்டாயம் இருந்தது. எனது மகனை விடுதியில் இணைத்துவிட்டு பலவேலைகளுக்கு ச் சென்றேன். அவற்றில் நிலைத்து வேலைசெய்ய முடியவில்லை. ஒருவிதவைப்பெண்ணாக நான் பல துன்பங்களை அனுபவித்தேன். அதன் பின்னர்தான் சுயமாக ஒரு தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. மீள்குடியேற்றத்தின் பின்னரான

01. இவ் வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச் செய்து 4ஆம் பக்கத்தில் உள்ள எமது கொழும்பு முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ் வினாத்தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு தபால் இடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட ஒரு மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

02. ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தால் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களின் பெயர் விபரங்கள் ஒளியரசி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு உதயன், சுடர்ஒளியில் பாராட்டி வாழ்த்தப்படும்.

03. வகுப்பறையில் சாதாரணமாக உங்கள் பிள்ளைக்கு இருக்கும் போட்டியைவிட பரந்த மாணவர்களுக்கிடையிலான போட்டியாக இது அமையும். அத்துடன் முகமறியாத மூன்றாம் நபர் ஒருவர் திருத்தும் ஒரு நடுநிலையான புள்ளி மதிப்பீடாக இருக்கும்.

04. இவ் வினாத்தாள் இலங்கையின் மூத்த முன்னணி ஆசிரியர் P.அம்பிகைபாகன் ஒளியரசிக்காக தயாரிக்கப்பட்டதாகும். (26ஆம் பக்கத்தில் உள்ள போட்டிக்கான கூப்பனை பயன்படுத்துவது அவசியமாகும். அக் கூப்பனில் போட்டிக்கான தலைப்பு எனும் வெற்றிடத்தில் தரம் 5 பரீட்சைத் தொடர் என எழுதவும்.)

தொடர்புகளுக்கு : - 0716850005 / 0714273035

(பக்கம் 35 தொடக்கம் 46 வரை வந்துள்ள வினாத்தாளைப் பிரித்தெடுக்கவும்)

# ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 02

## தரம் 4

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 4 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2017

**வினாத்தாள் - I , II** **ஆசிரியர் P.அம்பிகைபாகன் (கொழும்பு)**

முழுப்பெயர்: - ..............................................................................

பாடசாலை: - ..............................................................................

தொ.பே. இல. ..............................................

**வினாத்தாள் -I புள்ளிப் பதிவு**

| ப.இலக்கம் | புள்ளிகள் |
|---|---|
| 35 | |
| 36 | |
| 37 | |
| 38 | |
| 39 | |
| 40 | |
| 41 | |
| | |

**வினாத்தாள் -II புள்ளிப் பதிவு**

| பக்க இலக்கம் | புள்ளிகள் |
|---|---|
| 42 | |
| 43 | |
| 44 | |
| 45 | |
| 46 | |
| | |

**மொத்தப்புள்ளிகள்**

| |
|---|
| |

**முக்கிய குறிப்பு**

**கடந்த மாதப் பரீட்சை -1இல் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் விபரங்களும் பாராட்டுக்களும் ஒளிஅரசியுடன் இலவசமாக இணைக்கப்பட்டுள்ள போட்டிப்பரீட்சை வழிகாட்டியின் 7,8,9 ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.**

.................................. மேற்பார்வையாளர்

.................................. பொறுப்பாசிரியர்

# தரம் 4 படிமுறை மாதிரி வினாத்தாள் 2017

வினாத்தாள் I நேரம் : 45 நிமிடங்கள்


◆ **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பின்வருவனவற்றில் ஒருவரின் மனதிற்கு உவமானமாக அமையாதது எது?
 1) பாறாங்கல் போன்று அசையாதது.
 2) இடியப்பச்சுருள் போன்று சிக்கலானது.
 3) நீராவி போன்று கடினமானது.

02. ஒருவர் கோபப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது முகபாவத்துக்கு உகந்த உவமானம் பின்வருவனவற்றுள் யாது?
 1) தீப்பந்தம் போன்று சிவப்பானது.
 2) காலையில் மலர்ந்த மலர் போன்று பிரகாசமாகியது.
 3) கவலையில் வாடி வதங்கியது.
 4) பால் போன்று வெண்மையானது.

03. "மேலிருந்து போட்ட பொருள் கீழே விழ நேரிடும்" என்பதை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
 1) கீழிருந்து போட்டால் மேலே போகும்.
 2) மேலிருந்து போட்டால் கீழேயும் வரும் அதேவேளை மேலேயும் போகும்.
 3) மேலிருந்து போட்ட எதுவும் கீழ்நோக்கியே வரும்.
 4) கீழிலிருந்து மேலே வீசிய பொருள் கீழே வராது.

04. ஒரு மாணவன் பரீட்சை செய்யும்போது வெறுப்போடு செய்வதை காட்டுவதற்கு உகந்த உவமானம் யாது?
 1) இனிப்பான பானத்தை விரும்பி குடிப்பது போல் காணப்படல்.
 2) கசப்பான மருந்தை சுவைத்து உண்பது போல் காணப்படல்.
 3) கசப்பான மருந்தை முகஞ்சுழித்து உண்பது போல் காணப்படல்.
 4) கடுங்கோபத்துடன் சட்டி பானை உடைப்பது போல் காணப்படல்.




ஒரு குறித்த நகரில் A, B, C, D, E எனும் ஐந்து மாணவர்களின் வீடுகள் அமைந்துள்ள விதமும் அவற்றை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன அத்தகவல்களுக்கு ஏற்ப 5, 6, 7 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

05. E என்பவர் தனது வீட்டிலிருந்து ஆரம்பித்து ஏனைய நான்கு வீடுகளுக்கும் சென்று தனது வீட்டுக்கு மீள வருவதற்கு குறைந்த அளவு தூரத்தில் செல்லத்தக்கதாக இருக்கும் வழிப்பாதை எது?

1) E → D → A → B → C → D → E
2) E → B → A → C → D → E
3) E → D → A → B → D → C → D → E
4) E → B → A → C → D → E




06. அருகருகே உள்ள இரு வீடுகள் எவை?
1) A யும் B யும் 2) A யும் D யும் 3) D யும் E யும் 4) C யும் D யும்

07. அதிகளவு தூரங்களில் உள்ள இரு வீடுகள் எவை?
1) A யும் B யும் 2) A யும் C யும் 3) D யும் E யும் 4) C யும் D யும்



08. ஒரு புகைவண்டி 10 ஆவது கிலோ மீற்றர் கல்லிலிருந்து 16 ஆவது கிலோ மீற்றர் கல்லைக் கடப்பதற்கு 6 நிமிடங்கள் எடுத்தது. புகைவண்டி 16 ஆவது கிலோ மீற்றர் கல்லிலிருந்து முதல் ஓடிய வேகத்தின் இரு மடங்கு வேகத்தில் ஓடினால் 32 ஆவது கிலோ மீற்றர் கல்லைக்கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்?
1) 4 2) 8 3) 16 4) 32

09. அமலா கமலாவின் மகள் ஆவாள். விமலா கமலாவின் தங்கை. பாலன் விமலாவின் மகன் ஆவான். பாலனும் அமலாவும் சந்திக்கும்போது பாலன் என்ன உறவு முறையைக் கூறிக்கொண்டு அமலாவுடன் பேசுவான்?
1) அக்கா 2) சித்தி 3) பெரியம்மா 4) மாமி

◆ **வினாக்களில் நான்கு அடைப்புக்களில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவுசெய்து கோடிடுக.**

10.

1)

2)

3)

4)

11.

1)

2)

3)

4)

2kg சீனியின் விலை = 1kg கடலையின் விலை
2kg கடலையின் விலை = 1kg பால்மா பைக்கற்றின் விலை

12. பின்வரும் அட்டவணைக்கேற்ப கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?


| அஜித் | கமல் | குமார் | மயூரன் |
|---|---|---|---|
| 2kg சீனி<br>1kg கடலை<br>1kg பால்மா | 1kg சீனி<br>2kg கடலை<br>3kg பால்மா | 2kg சீனி<br>2kg கடலை<br>2kg பால்மா | 3kg சீனி<br>3kg கடலை<br>1kg பால்மா |

1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

13. மேலுள்ள அட்டவணைக்கேற்பக் குறைந்தளவு பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?
1) அஜித் 2) கமல் 3) குமார் 4) மயூரன்

1 போத்தல் நல்லெண்ணெயின் நிறை = 2 போத்தல் தேங்காய் எண்ணெயின் நிறை
1 போத்தல் தேங்காயெண்ணெயின் நிறை = 2 போத்தல் மண்ணெண்ணெயின் நிறை

14. அவ்வாறாயின் எந்தப்பைகளில் சமனான நிறைகள் உள்ளன?




1) 2) 3) 4)


1) 1உம், 2உம் 2) 2உம், 3உம் 3) 3உம், 4உம் 4) 1உம், 4உம்

15. மேலுள்ள அட்டவணைக்கேற்ப குறைந்தளவு நிறையுள்ள பை எது?
1) 1 ஆவது 2) 2 ஆவது 3) 3 ஆவது 4) 4 ஆவது

◆ **ஒரு நகரத்தில் பாடசாலை, வைத்தியசாலை, வாசிகசாலை, பஸ் நிலையம் அமைந்துள்ள திசைகளும் தூரங்களும் :-**

**பாடசாலை வைத்தியசாலைக்கு ஈசான (வடகிழக்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வாசிகசாலை பாடசாலைக்கு வாயு (வடமேற்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்தில், பஸ்நிலையம் வாசிகசாலைக்கு நிருதி (தென்மேற்கு) மூலைத்திசையில் 80 மீற்றர் தூரத்தில், வைத்தியசாலை பஸ் நிலையத்துக்கு அக்கினி (தென்கிழக்கு) மூலைத்திசையில் 100 மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளன.**

16. வரைபடத்தில் உள்ள பெட்டிகளுக்குள் சேவை நிலையங்களின் பெயர்களை எழுதுக.



17. வரைபடத்தின் பக்கங்களில் உள்ள புள்ளிக் கோடுகளில் தூரங்களைக் குறிக்குக.

◆ **ஒரு வகுப்பிலுள்ள ஐந்து பிள்ளைகளின் ஒரு மாதத்திற்கான வகுப்பு வரவு ஒழுங்கு கீழே காணப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| கமலன் 21 நாட்கள் | இந்திரா 22 நாட்கள் | அகமட் 18 நாட்கள் |
| சந்திரா 17 நாட்கள் | நிரோசா 19 நாட்கள் | |

18. வகுப்பு வரவின் ஏறு வரிசையில் பெயர்கள் உள்ள வரிசையைத் தெரிவு செய்க.
   1) கமலன், இந்திரா, நிரோசா, அகமட், சந்திரா
   2) சந்திரா, இந்திரா, நிரோசா, அகமட், கமலன்
   3) சந்திரா, நிரோசா, அகமட், இந்திரா, கமலன்
   4) சந்திரா, அகமட், நிரோசா, கமலன், இந்திரா

அவ்வைந்து மாணவர்களின் பிறந்த தினங்கள்

| | |
|---|---|
| கமலன் 2003 - 07 - 26 | நிரோசா 2003 - 03 - 04 |
| அகமட் 2004 - 06 - 18 | இந்திரா 2003 - 12 - 16 |
| சந்திரா 2004 - 01 - 10 | |

19. இதற்கேற்ப சரியான கூற்று யாது?
   1) அகமட் சந்திராவிலும் மூத்தவன்
   2) இந்திராவிலும் கமலன் மூத்தவன்
   3) நிரோசா அகமட்டிலும் இளையவள்
   4) கமலன் சந்திராவிலும் இளையவன்

20. இதற்கேற்ப பிழையான கூற்று யாது?
   1) அனைவரிலும் மூத்தவள் நிரோசா
   2) அனைவரிலும் இளையவன் அகமட்
   3) அனைவரிலும் இளையவள் இந்திரா
   4) மூவரிலும் மூத்தவன் கமலன்

◆ **2013 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும்.**

21. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே.
   1) 4, 5, 5   2) 4, 5, 4   3) 5, 4, 5   4) 4, 4, 5


22. 2013 ஆம் ஆண்டு சாதாரண வருடம் ஆகும். அதன்படி அவ்வாண்டிலுள்ள திங்கள், செவ்வாய்க்கிழமைகளின் எண்ணிக்கைகள் முறையே
1) 53, 52 2) 52, 52 3) 52, 53 4) 53, 53


23. 2013 ஆம் ஆண்டு 21 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தமாகும். இதற்கேற்ப 2009 இல் பிறந்த உமது தங்கை எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தத்தில் பிறந்தாள்?
1) 20 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம்
2) 21 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்
3) 21 ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தம்
4) 20 ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்


◆ **ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.**


24. A - கடன் வாங்கி B - கார் வாங்க C - கமலனுக்கு கார் விருப்பம்
D - பணம் இல்லை E - கார் வாங்கினான்
1) B, D, C, A, E 2) D, B, A, E, C 3) C, B, D, A, E 4) C, B, A, E, D


25. A - இன்றைக்கு மட்டும் B - வாங்குங்கள் நாளைக்கு C - வாங்க முடியாது
D - உடனே விரைந்து வந்து E - மலிவு மலிவு
1) D, B, A, E, C 2) E, D, C, B, A 3) E, A, D, B, C 4) A, E, D, C, B

26. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு


27. 
முழு உருவின் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின்
1) இரு மடங்கு 2) மூன்று மடங்கு
3) நான்கு மடங்கு 4) ஐந்து மடங்கு

28. 
முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1) 20 மடங்கு 2) 8 மடங்கு
3) 12 மடங்கு 4) 16 மடங்கு

29. 
இவ்வுருவை அரியம் ஆக்குவதற்கு இன்னும் தேவையானது?
1) 1 சதுரம், 1 முக்கோணி
2) 2 செவ்வகங்கள், 1 முக்கோணி
3) 1 செவ்வகம், 1 முக்கோணி
4) 2 செவ்வகங்கள், 2 முக்கோணிகள்


30. 

இவ்வுருவை கனவுரு ஆக்குவதற்குத் தேவையானது
1) 2 சதுரங்கள், 2 செவ்வகங்கள்
2) 2 சதுரங்கள், 1 செவ்வகம்
3) 1 சதுரம், 1 செவ்வகம்
4) 1 சதுரம், 2 செவ்வகங்கள்


31. 

இவ்வுருவை அமைப்பதற்கு கம்பியொன்றில் வளைக்கவேண்டிய சரியான முறை


1) 


2) 


3) 


4) 

32. 

1) 

2) 

3) 

4) 

◆ **அடைப்பில் உள்ள பொருத்தமான உவமானம் குறிக்கும் இலக்கத்தை தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**1. கண்சிமிட்டும் குழந்தையைப் போல்**
**2. பெருக்கெடுத்த ஆறு போல்**
**3. நீல வர்ண ஆடை விரித்தாற் போல்**
**4. பச்சைக் கம்பளம் விரித்தது போல்**
**5. குவித்து விட்ட பஞ்சுக் குவியல்கள் போல்**
**6. பால் போல் வெண்மையாக.**

33. தேயிலைத் தோட்டங்கள் ........................................ காட்சியளித்தது.
34. பெருமழை வெள்ளம் ........................................ பாய்ந்தது.
35. பூரண சந்திரன் ........................................ காட்சியளித்தது.
36. ஆகாயம் ........................................ காட்சியளித்தது.
37. வானில் தோன்றிய முகில் ........................................ தோன்றியது.
38. நட்சத்திரங்கள் ........................................ மின்னியது.

◆ **39 ஆம் 40 ஆம் வினாக்களில் உள்ள சொற்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் எழுதுக.**

39. அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, நான், தங்கை, தம்பி ........................................
40. மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா ........................................

# தரம் 4 படிமுறை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் II 2017

நேரம் : 1 மணி 45 நிமிடங்கள்

◆ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

இலங்கை இயற்கை வளம்கொழிக்கும் செழிய நாடு. இலங்கையில் இயற்கை கூறுகள் மலைகளாகவும், காடுகளாகவும், வயல்களாகவும், கடல்களாகவும், ஆறுகளாகவும், குளங்களாகவும் பிரிந்தும் தொடர்ந்தும் வளம் செய்கின்றன. இலங்கை நாற்புறமும் நீலக்கடலால் சூழப்பட்ட அழகான தீவு. நாற்புறக் கடலும் அலைகளாக எழுந்து இலங்கையை ஆசீர்வதிக்கின்றன. மலையகம் பச்சைக் கம்பளத்தால் போர்த்தது போல் தேயிலைச் செடிகளால் செழித்தோங்கிக் காணப்படுகின்றது.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. இலங்கைத் தீவில் காணப்படும் கூறுகள் எவை?

.......................................................................................................................

02. "செயற்கை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

03. 'வாழ்த்துகின்றன' என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

04. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.

.......................................................................................................................

05. பெருந்தோட்டப் பயிர் ஒன்று எழுதுக.

.......................................................................................................................

06. கடலுக்கு கூறும் அடைமொழிகள் இரண்டையும் எழுதுக.

.......................................................................................................................

07. 'காணப்படுகின்றன' என்னும் சொல்லின் திணை, பால், எண், இடத்தை முறையே எழுதுக.

.......................................................................................................................

08. 'எமது நாடு இலங்கை' எனும் வாக்கியத்தில் எமது என்ற சொல்லின் திணை, பால், எண், இடத்தை முறையே எழுதுக.

.......................................................................................................................

09. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வநதேன் | கதிரை | மலைகள் | வந்தோம் | சிறுவர்கள் | சிறுமி |

1) உயர்திணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ............................................................ )

2) அஃறிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ............................................................ )

3) தன்மை, பன்மை, வினைச்சொல் ( ............................................................................. )

10. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1) மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட நிலம். ( ........................................................ )

2) ஆகாய விமானத்தை செலுத்துபவன். ( ................................................................ )

3) யானையைப் பயிற்றுவித்து வழி நடத்துபவன். ( ..................................................... )

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) MAY I GO HOME ..........................................................................





2) YOU WILL COME TOMORROW ......................................................

3) WHAT IS YOUR NAME? ...............................................................

12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

தயவு செய்து அமைதியாக இருங்கள். ..............................................................

13. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

1)  2)  3)  4) 

.............................. .............................. .............................. ..............................

14. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1) எமது நாடு இலங்கை ..............................................................

2) நாம் தமிழ் நன்றாகப் பேசுவோம்.............................................................

15. பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) கடே கீயட்டத வாஹன்னே ..........................................................

2) ஒயா மட்ட கியல தெனவத?.........................................................

16. பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

1) விளையும் பயிரை ............................................................ தெரியும்.

2) இரக்கப் போனாலும் ............................................................ போ.

3) இளமையிற் கல்வி ............................................................ எழுத்து.

17. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.
   1) 1. வல்லரசு 2. வல்லறசு 3. வள்லரசு
   2) 1. நாடேங்கும் 2. நாடெங்கும் 3. நாடொங்கும்
   3) 1. வறியவர்கள் 2. வரியவர்கள் 3. வறியவர்கல்

◆ **18 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையை தரப் பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

18. உணவுப் பொருளொன்றை வாங்கும்போது கண்டிப்பாக அவதானிக்க வேண்டியது யாது?
   1) பொருளின் விலை 2) பொருளின் காலாவதியாகும் காலம்
   3) பொருளின் அளவு
19. இனப்பரம்பல் அடைவதற்காக கொழுக்கி கொண்ட வித்துக்கள் எவை?
   1) எருக்கலை, குருவிச்சை 2) புலிநகம், நாயுருவி
   3) ஆடையொட்டி, காசித்தும்பை
20. தண்ணீரில் மிதந்து சென்று இனப்பரம்பல் அடையாத வித்து யாது?
   1) தேங்காய் 2) மாங்காய் 3) பாக்கு
21. முலையூட்டி விலங்கு அல்லாதது எது?
   1) பல்லி 2) பூனை 3) நாய்
22. மண்ணெண்ணெய்க்குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றினால் அதை அணைப்பதற்கு உகந்ததல்லாதது எது?
   1) நீர் 2) ஈரச்சாக்கு 3) மணல்
23. தோகை விரித்து அழகாக ஆடும் மயில் இனம் எது?
   1) ஆண்மயில் 2) பெண்மயில் 3) ஆணும், பெண்ணும்
24. நீந்துவதன் மூலம் இடம்பெயரக்கூடிய பறவை எது?
   1) கொக்கு 2) வாத்து 3) நீர்க்காகம்
25. உரோமங்களால் மூடப்படாத பிராணி எது?
   1) முதலை 2) முயல் 3) செம்மறிஆடு
26. மரங்களில் கூடு கட்டி வாழாதது எது?
   1) அணில் 2) காகம் 3) குயில்
27. இலங்கையில் மிருகக்காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?
   1) கண்டி 2) யால 3) தெகிவளை
28. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?
   1) யால 2) பின்னவல 3) தெகிவளை
29. தோலினால் சுவாசம் நடாத்தும் பிராணி எது?
   1) மீன் 2) மண்புழு 3) பாம்பு
30. கண்களை மூடுவதற்கு இமை இல்லாத பிராணி எது?
   1) மீன் 2) தீக்கோழி 3) கிவி

◆ **தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

31. எண்கோலங்களில் அடுத்து வரும் இரு எண்களையும் முறையே எழுதுக.
   1) 3030, 3020, 3010, ................ , ..........................
   2) 1234, 2345, 3456, ................ , ..........................
   3) 1909, 1906, 1903, ................ , ..........................


32. பின்வரும் பின்னங்களுக்கு பொருத்தமான இரண்டு சமவலுப் பின்னங்களை எழுதுக.


1) $\frac{1}{3}$ = ................ , ................


2) $\frac{1}{2}$ = ................ , ................

3) $\frac{1}{4}$ = ................ , ................

33. பின்வரும் வடிவங்களில் அதற்கெதிரே தரப்பட்டுள்ள பின்னப்பகுதிகளை நிழற்றுக. அவற்றில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதி பின்னத்தில் எழுதுக.

1) $\frac{2}{6}$ =  ................

2) $\frac{5}{8}$ =  ................

3) $\frac{1}{4}$ =  ................

34. ஐந்து நண்பர்கள் ஆளுக்கு ரூபா 150 வீதம் சேர்த்த பணத்தில் ரூபா 325 இற்குப் பழங்களும், ரூபா 150 இற்குப் பானங்களும் வாங்கி மீதிப் பணத்தை தம்மிடையே சமமாகப் பங்கிட்டார்கள்.

1) பழங்களும் பானங்களும் வாங்கச் செலவிட்ட பணம் யாது? ரூபா ..........................................

2) மீதிப் பணத்தில் மூவருக்கு கிடைத்த பணம் எவ்வளவு? ரூபா ..........................................

35. அமலன் பரீட்சை ஒன்று செய்வதற்காக காலை 6.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு கண்டி சென்று திரும்பி வந்தான். கொழும்பிலிருந்து கண்டி செல்ல மூன்று மணித்தியாலங்களும். திரும்பி வர நான்கு மணித்தியாலங்களும், பரீட்சைக்காக ஐந்து மணித்தியாலங்களும் செலவாகின.



1) அமலன் கண்டியிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியால கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

..........................................................................


2) அமலன் கொழும்பிற்குத் திரும்பி வந்த நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக.

..........................................................................

36. அட்டவணையிலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்திசெய்க.


| திண்மம் | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | விளிம்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1)  | | | |
| 2)  | | | |
| 3)  | | | |


37. 1) வரைபிற்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை பூர்த்திசெய்க.
 2) அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூர்த்திசெய்க.




| தினங்கள் | செலவான பணம் |
|---|---|
| திங்கள் | 300 |
| செவ்வாய் | ........... |
| புதன் | 400 |
| வியாழன் | ........... |

38. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.




39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுக.

1) நாய் கடித்தாலும் ..................... ( கடிக்கும் / கடிக்கலாம் )

2) அம்மா ஒவ்வொரு ................ ( தோசைகளாக / தோசையாக ) சுட்டாள்.

3) மைதானத்தில் சனக் கூட்டம் .................... ( அலைமோதியது / அலைமோதியன )

4) மைதானத்தில் பார்வையாளர்கள் ................ ( நிறைந்திருந்தனர் / நிறைந்திருந்தது )

5) என்னால் ............ ( பேசிய / பேசப்பட்ட ) கருத்துக்களை சபையோர் வரவேற்றனர்.

6) நாங்கள் .............. ( எழுதிய / எழுதப்பட்ட ) கவிதைகளை வாசித்தார்கள்.

7) எருது முன்னே செல்ல பசு அதனைப் பின் ........... ( தொடர்ந்தது / தொடர்ந்தன )

40. 'கிளி' என்னும் தலைப்பில் நான்கு வரிகள் கொண்ட சிறு கவிதை ஒன்றை எழுதுக.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................




## நட்சத்திர இல்லத்தரசி

உதவித்தொகையில் முதலில் எனது வீட்டிலேயேசிறியபெட்டிக்கடைஒன்றை ஆரம்பித்தேன். அதிலிருந்துவந்த சொற்ப வருமானத்தில் கச்சான், மிக்ஷர் போன்ற பொருட்களைத் தயாரித்தேன். ஓரளவான வருமானமும் வந்தது. எமது அன்றாட உணவை உண்ண முடிந்தது. அதன் பின்னரே எனது தொழிலை விருத்தி செய்துகொண்டேன்.





### நீங்கள் தயாரிக்கும் தயாரிப்புகள் எவை?

கரட், பீற்றூற், வல்லாரை போன்றவற்றில் அப்பளம் தயாரிக்கின்றேன். நீரிழிவு நோயாளர்களுக்கான நெல்லிகோடியல், பிட்டுகளி என்பவை தயாரிக்கும் குறிஞ்சாமா, சாதாரணகோடியல் குழந்தைகளுக்கான வல்லாரை சத்துமா, மூலிகைத் தேயிலைவகை, தலைசார்ந்த எட்டுவகைநோய் நிவாரணியான எண்ணெய் என்பவற்றுடன் பாரம்பரிய வழிமுறையில் கையால் இடித்த அரிசி மா மற்றும் தூள் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன.

### இவ்வாறு இயற்கை முறையில் மூலிகைகள் மூலம் தயாரிப்பது சிரமமாக இல்லையா?

சிரமம் தான். ஆனாலும் இன்றைய உலகில் உடனடி உணவுகளால் நோய்கள் தான் அதிகமாக மலிந்துள்ளன. அவற்றில் இருந்து எம்மையும் எமது சந்ததியையும் காத்துக்கொள்ள வேண்டிய பாரியதேவை அனைவருக்கும் உள்ளது. அதனை எண்ணியே பல சிரமத்தின் மத்தியிலும் இதனைச் செய்துவருகின்றேன்.



### உங்கள் தயாரிப்புகள் ஒவ்வொன்றும் வித்தியாசமாக உள்ளதே, அதுபற்றி சற்று கூறமுடியுமா?

ஆம், முதலில் நான் மிக்ஷர், கச்சான் என்பவற்றைத் தயாரித்தபோது விற்பனை அதிகளவில் இருக்கவில்லை. ஏனெனில், பலரும் இத்தயாரிப்புகளைச் செய்துவந்தனர். அதனால்தான் வித்தியாசமாக எதையாவது செய்யவேண்டும் என எண்ணினேன். அதன்படி டிபிடிப் தயாரிக்க முடிவுசெய்து பல முயற்சிகளை மேற்கொண்டபோதும் எதுவும் சாத்தியப்படவில்லை. அக்கலவையே தற்செயலாக இவ்வாறு அப்பளமாக தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர்தான் வித்தியாசமான தயாரிப்புகள் பற்றி யோசித்து கலவைகளைச் சேர்த்தேன். இன்றையகாலத்தில் எமது நாட்டில் அதிக மக்களை அச்சுறுத்தும் நோய்களான நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கான நிவாரணியாக அமையும் மூலிகைகளைச் சேர்த்து குளிர்பானம், புட்டுமா என்பவற்றைத் தயாரிக்கத் தொடங்கினேன்.

### உங்கள் தயாரிப்புகளிற்கான வரவேற்பு எப்படி உள்ளது?


எமது மக்களின் வரவேற்பானது எதிர்பார்க்காத அளவிலேயே உள்ளது. அதுமட்டுமன்றி எனது தயாரிப்புகளுக்கு வெளிநாட்டிலும் அதிகமான வரவேற்பு உள்ளது. மாதாந்தம் கணிசமான அளவில் இப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதுமட்டுமன்றி வவுனியா, மன்னார் போன்ற இடங்களிற்கு நானே முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்று கொடுத்துவிட்டு வருவேன். தற்போது, நிறுவனம் கட்டுவதற்காக நகர்ப்பகுதியில் ட ஏக்கர் காணியும் பயிர்ச்செய்கைக்காக 10 ஏக்கர் காணியும் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.




### அண்மைய தயாரிப்பு எது? அதுபற்றி?

இளநரை, பொடுகு, தலைமயிர் உதிர்தல், நீண்ட காலத்தலைவலி, போன்றவற்றினை கட்டுப்படுத்தும்முகமாகலேகா, என்னும் பெயர் கொண்ட எண்ணெய் ஒன்றைத் தயாரித்தேன். அது கடந்த மகளிர் தினவிழாவை ஒட்டி நடைபெற்ற வணிகக்கண்காட்சியில் 2000 போத்தல்கள் வரை விற்பனை செய்யப்பட்டது. அதன் படி தற்போது அது சிறந்த தயாரிப்புக்கான கௌரவத்தைப் பெற்றுள்ளது.

தொடர்ச்சி 52 ஆம் பக்கத்தில்




## சிறப்பு கவிஞர்

**கவிஞர்கள், படைப்பாளிகளின் உள்ளத்து கருத்துக்களை சமூகத்தின் ஏனைய தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில் சிறப்புகவிஞர், கவிஞர் அறிமுகம் என்னும் பகுதிகளைப் பிரசுரித்துவரும் ஒளிஅரசி இம்மாத சிறப்பு கவிஞராக பொலிகையூர் சிந்துதாசன் அவர்களின் நேர்காணலை வாசகர்களுக்காக தருகின்றாள்.**

# படைப்பாளி வாசகனில் இருந்தே பரிணமிக்கிறான்

### 1. உங்களைப் பற்றிய அறிமுகம்.

எனது இயற்பெயர் கந்தசாமி முருகதாஸ். யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டியைச் சொந்த இடமாகக்கொண்டநான், சு.க.சிந்துதாசன் என்ற புனைப்பெயரில் தொண்ணூறுகளின் தொடக்கத்திலிருந்து இலக்கியமுயற்சிகளில் ஈடுபட்டுவருகிறேன்.

### 02. இலக்கிய உலகில் நுழைந்தகாலம்? சுவாரஸ்யமான சம்பவங்கள் பற்றி?

ஏற்கனவே குறிப்பிட்ட காலப்பகுதியில் எனதுமாணவப் பருவத்திலேயே இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கானஎன் எத்தனங்கள் ஆரம்பித்திருப்பினும் அக்காலங்களில் இருந்த என் அதீதவாசிப்பு மற்றும் தேடல் போன்றனவும் நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களின் தட்டிக்கொடுப்புகளுமே நான் உறுதியாக இத்துறையில் நுழைவதற்கும் தொடரியக்கம் பெறுவதற்கும் காரணமாயிற்று எனலாம். அந்தவகையில் தொண்ணூறுகளின் தொடக்க காலங்கள் என்றென்றும் எனக்கு சுவாரஸ்யமான வையாகவே காணப்படுகின்றன. பல கவிதைகளை எழுதிநானே எனக்கு வாசகனாயும் எனக்கு நானே கவிஞனாயும் இருந்த அக்காலம் என்பது இன்றும் இனிமையாகவே இருக்கிறது.

### 03. யாருடைய எழுத்துகள் உங்களை அதிகமாகக் கவர்ந்திருந்ததாகக் கருதுகிறீர்கள்?

உண்மையைச் சொன்னால் அக்காலத்தில் எல்லோர் வாய்களும் யாருடையகவிதைகளை உச்சரித்ததோ அல்லது யாருடைய கவிதைகள் எல்லோரையும் ஆட்கொண்டிருந்ததோ அவருடைய கவிதைகள் மீதான ஈர்ப்பே என்னையும் அதிகம் இயக்கியது. அவர்தான் புதுவையண்ணை, அவருடைய அந்தக் கவிதைகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. பின் வாசிக்கத்தூண்டின. தொடர்ந்து எழுதவும் தூண்டின. ஆனால், இன்று இலக்கிய வெளிப்பயண அனுபவ உணர்நிலையில் எந்த படைப்பாளியினுடைய படைப்புகளையும் புறமொதுக்காது என் வாசிப்பனுபவத்தைப் பெருக்கிவருகிறேன். எழுதும்போதும் எனக்கான தனித்துவத்தை உறுதிசெய்ய முயல்கிறேன்.

### 04. உங்கள் படைப்புகள் பற்றி? எந்தப் படைப்பை அதிகம் நேசிக்கின்றீர்கள்?

என் படைப்புகள் பற்றிக் கூறுவதானால் நான் கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், நாடகம் போன்ற பல்லிலக்கிய வகைகளில் இயங்கி வருகின்றேன். இருப்பினும், அதிகம் என்னைக் கவர்ந்ததும் நான் அதிக ஈடுபாடு கொண்ட துறையுமாகவிளங்குவது கவிதை இலக்கியமே. ஆரம்பகாலங்களில் மரபு சார்ந்தசந்தக் கவிதைகளை அதிகம் எழுதிவந்தேன். தற்போதுகவிதைப் பரீட்சயம் அல்லதுதொடரியக்க உணர்நிலை மாற்றத்துக் கூடாக குறியீடு சார்ந்த கவிதைகளையும் எழுதிவருகின்றேன். இதுவரை ஓரிடம் (2004) கடலின் கடைசி அலை (2013) காணாமற்போன காற்று (2014) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளேன். ஆக்கங்களை அவ்வப்போது எழுதியிருப்பினும் கூட எழுதியவை அனைத்தையும் நூலாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறு எழுதிய அனைத்தையும் நூலாக்குவதென்பதையும் பொருத்தமற்ற ஒரு செயலாகவே நான் உணருகிறேன். எனக்குப் பிடித்த இலக்கிய வகை கவிதை என்பதில் எந்தமாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், எனக்குப் பிடித்தபடைப்பு எதுஎன்று கூறுதல் கடினமாகவேயுள்ளது. ஏனெனில், பொருண்மை மீதான ஆர்வமேலீடு என்பதும் பிடித்தபடைப்பு போன்றது தான். எண்ணுநதல்கள், எல்லாம் உணர்வு வெளிப்பாடாய் இலக்கிய வடிவில் வெளிப்படுகிறபோதுஅவைஎனக்குப் பிடித்தேபோகிறது. எனவே, என் படைப்புகள் எல்லாம் எனக்குப் பிடித்தவைதான் என்பதோடு மற்றையோரின் படைப்புகளுக்கும் நான் முக்கியத்துவம் கொடுப்பதால் எல்லாப் படைப்பும் எனக்குப் பிடித்தவைதான்.






# கவிதை என்பது ஒரு உணர்மொழி

## சிறப்பு கவிஞர்

**05. உங்கள் கவிதைகள் குறியீட்டுக் கவிதைகளாக உள்ளதாக உணர்கிறீர்களா?**

அதைவாசகர்கள்தான் முடிவுசெய்யவேண்டும். இருப்பினும், குறியீடு என்பது தற்காலிக கவிதைகளில் இன்றியமையாதவொரு விடயமாகும். பொருண்மை பலவற்றைக் கொண்டியங்குகின்ற கவிதைகள் இந்தவகையைச் சார்ந்தவை. வாசகரது உணர்நிலைக்கேற்ப வெவ்வேறான பொருண்மைகளைப் புலப்படுத்தவல்லன. அந்தவகையில் எனக்கிருக்கின்ற பரீட்சயம் மற்றும் விருப்பு இவ்வாறான கவிதைகளோடு நான் பயணிக்க காரணமாயின என்பதுடன் புரிதல் தடைகளற்றமொழிக் கையாளுகை என் கவிதைகளை அனைவரும் புரிந்துகொள்ள வழி சமைப்பதாய் உணர்கிறேன்.

**06. உங்கள் கவிதைகளில் நீங்கள் அதிகம் நேசிக்கும் கவிதையெது? கவிதை என்பதைநீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?**

என் கவிதைகள் எல்லாவற்றையுமேநான் நேசிக்கிறேன். நான் அதிகம் நேசிக்கும் கவிதையை இன்னும் எழுதவில்லை. முயற்சிக்கிறேன். கவிதை என்பது ஒரு உணர்மொழி, புரிதல்களை ஏற்படுத்தவல்ல ஊடகம். கவிதைக்குக் காலத்துக்குக் காலம் பல்வேறு பட்டவிளக்கங்களைக் கூறிவரினும் இலக்கியத்தினுடைய தோற்றுவாயென்று அல்லது இலக்கியத்தின் அரசி என்று கூறப்படுகின்ற இந்தக் கவிதை இலகுவில் எந்தக் கட்டுகளுக்குள்ளும் அடக்கிவிடமுடியாத ஒருபரந்தவெளி. அனுபவம், அறிவு, உணர்வு, கற்பனை, உருவம் போன்வற்றோடு பல்வேறு உத்திமுறைகளையும் தன்னகத்தே கொண்டியங்கும் உச்சப் பெறுமானம் கொண்ட இலக்கியவடிவம் என்றே கவிதையை நான் உணர்கிறேன்.

**07) இன்றைய சமூகம் படைப்பாளிகளுக்கான சரியான அங்கீகாரத்தை வழங்குகிறது என எண்ணுகின்றீர்களா?**

இயந்திர மயமாகிவிட்ட சமகால உலகில் படைப்புகள் அவசியமற்ற ஒருவிடயம் எனக் கருதுகின்ற ஒருகாலத்தில் படைப்பாளிகளுக்கான ஒரு அங்கீகாரத்தை ஒட்டுமொத்த சமூகத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஆனால் இலக்கியம் சார்ந்தவர்களாலேயே இலக்கியம் வாழ்வதோடுபடைப்பாளிகளுக்கான அங்கீகாரமே கிடைக்கிறதென்பதே உண்மை.

**08. இன்றையபடைப்புகள் பற்றி?**

எப்போதும்போல் படைப்புகளை காத்திரமானவை என்றும் காத்திரமற்றவை என்றும் பகுத்து நோக்கலாம். இருவகைப் படைப்புகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. படைப்பாளிகள் நல்ல படைப்புகளை தருவதற்காகன முயற்சிகளை எடுக்கவேண்டும். அதேபோலவாசகரும் நல்லபடைப்புகளைத் தேடிப்படிக்கவேண்டும்.

**09. ஓர் இலக்கியப் படைப்பாளியாக ஏனைய படைப்பாளிகளுக்குநீங்கள் கூற விரும்புவதுயாது?**

ஒருநல்லபடைப்பாளிஎன்பவன் ஒருநல்லவாசகனிலிருந்தேபரிணமிக்கிறான். எனவே, ஒவ்வொரு படைப்பாளியும் நல்லவாசகனாக இருக்கவேண்டும் என்பதேஎன் கருத்து.

**10. வாசிப்பென்பது இன்றையசமூகத்திடம் குறிப்பாக, மாணவர்களிடம் மிக அருகிவிட்டஒன்றாகக் காணப்படுகின்றதே. இதுபற்றிய உங்கள் கருத்துயாது?**

உண்மைதான். தொழில்நுட்பக் கருவிகளினுடைய அதிகவரவும்,பெருக்கமும் இன்றைய சமூகத்தினரிடையே குறிப்பாக, மாணவர்களிடையே அதிகதாக்கம் செலுத்திவருகிறது. பயன்மிக்கவிடயங்கள் பலவற்றை இவற்றுக்கூடாகப் பெற்றுக் கொள்ளினும் பாதகத் தன்மைகளும் இவற்றில் அடங்குகின்றன.

ஒப்பீட்டடிப்படையில் தற்காலத்தில் வாசிப்புஎன்பது குறைவடைந்தே காணப்படுகின்றது. இதன் காரணமாக ஒரு பூரணத்துவ அறிவுநிலையை எட்டுவதில் இடர்பாடு ஏற்படுகின்றது. எனவே, வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வை சம்பந்தப்பட்டவர்கள் செய்யவேண்டும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

**11. வேறுஏதாவது?**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இலக்கியம் இருக்கிறது. ஒவ்வொருமனிதனும் இலக்கியத்துடனேயே பயணப்படுகிறான். மனிதனுக்கும், மொழிக்கும் இருக்கிற தவிர்த்துவிட முடியாத உணர்வு போன்ற தேமனிதனுக்கும் இலக்கியத்துக்கும் இருக்கிற உறவும். எனவே,மொழியையும் இலக்கியத்தையும் வாழவைப்பதன் மூலமேநாமும் வாழமுடியும், வாழவைப்போம் வாழ்வோம்.

நேர்காணல் - ஜயிலா

# எந்தவழி போகுமோ???

காலைத்தென்றல் மெதுவாக உடலை வருட, மறுபக்கம் புரண்டு மெதுவாகத்தன் தேவதையை மனக்கண்ணில் நிறுத்தி உதட்டில் சிறு புன்னகையுடன் கண்களை விழித்துக்கொண்டான் கார்த்திக்.

சிறிது நேரத்துக்குள் குளித்துவிட்டு வர தேநீரும் தேடி வந்தது. பருகவே நேரமின்றி அவசர அவசரமாக பயணப் பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ''ஐயோ ரைம் ஆகிடிச்சே...'' என்றபடி வண்டியொன்றை அழைத்து ''ஏர்ப்போட் போங்க'' என்று கூறிக்கொண்டே அமர்ந்துகொண்டான். அரை மணிநேர பிரயாணத்துக்குப் பின்னர் வண்டி விமான நிலையத்தை அடைந்தது. உள்ளே விரைந்து அத்தனை சோதனைகளையும் முடித்துவிட்டு விமானத்துக்குள் சென்று தனது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான்.

மனதில் ஏதேதோ ரணங்கள் வந்தாலும்கூட நித்யா என்ற ஒரு வார்த்தை அவனை நிம்மதிக்கு கொண்டுவந்து சேர்க்கும். தன் வாழ்வையே அவளுக்காக அர்ப்பணம் செய்தவன் கார்த்திக். அழகுக்கு எவ்வித பஞ்சமும் இருக்கவில்லை. கோடி அழகைக் கொட்டிக்கொடுத்திருந்தான் பிரம்மன் அவளுக்கு. அந்த ஊரிலே இவர்கள் காதல் பற்றி தெரிந்திருக்காதவர்கள் எவருமே இல்லை என்றுதான் கூறமுடியும்.

அறியாத வயதில் ஆரம்பமான இவர்கள் காதல் காலம் தாண்டியும் வாழ வேண்டும் என கார்த்திக் - நித்யா விரும்பினர். ஆனால், விதியின் விளையாட்டை வென்றவர்கள் உண்டா?



சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த கார்த்திக், பணக்கார வாழ்வு வாழவேண்டும் என விரும்பி வறுமையின் பிடியிலே சிக்கிக்கொண்டிருந்த நித்யாவை காதலைத் தவிர, வேறேதும் காரணமே இன்றி உருகி உருகிக் காதலித்தான். பாடசாலைக் காலம்வரை பணத்தின் முக்கியம் இவர்களுக்குத் தெரியவே இல்லை.

வயது இருபதை எட்டும்போதே வாழ்வில் காதல் மட்டும் முக்கியமல்ல, பணமும் முக்கியம் என உணர்ந்துகொண்டாள். இருவர் வீட்டுக்கும் இவர்கள் காதல் தெரிந்திருந்தபோதும் அதுவரை அவர்கள் எவ்வித எதிர்ப்பும் காட்டிவரவில்லை.

ஒருநாள் கோவிலில்

நித்யாவைப் பார்த்து காதல் கொண்டான் என் மகன் எனக் கூறிக்கொண்டு ஒரு குடும்பத்தினர் நித்யாவை வரன் கேட்டு வந்தனர். பார்க்கவே மிகவும் வசதியானவர்களாய் - பகட்டான வாழ்வு வாழ்பவர்கள் போலிருந்தனர். எந்த வேலையுமே இல்லாமல் முழு நேரமாய் தம் மகளை காதல் செய்யும் கார்த்திக்கை விட இந்த சம்மந்தம் பொருத்தமாய் இருக்கும் என எண்ணிய நித்யாவின் பெற்றோர்கள் எப்படியாவது மகளை சம்மதிக்க வைத்துவிட வேண்டும் என பலவாறாகப் பேசினார்கள். அவர்கள் கூறியதை நித்யா காது கொடுத்துக்கூடக் கேட்கவில்லை. இது தொடர்பாக கார்த்திக்கிடம் பேசினாள் நித்யா.

''கார்த்திக்... நாம இப்படியே இருக்கிறது சரியா? லைப்ல அடுத்த கட்டத்துக்குப் போகவேணாமா?''

''ம்ம்... நானும் யோசிச்சன். நான் உன்ன நல்லாப் பாத்துப்பன். நீ என்னை முதல்ல நம்பணும்''.

''அதெல்லாம் நிறையவே இருக்கு. நீ ஏதாச்சும் சாதிக்கணும். நான் உனக்காக எப்பவும் காத்திட்டு இருப்பன்''.

''எனக்கு நீ மூணு வருஷம் டைம் கொடு. அதுக்குள்ள நீ விரும்புற லைப் ஐ உனக்கு நான் கொடுப்பன்.

வாழ்க்கையில் எப்படியாவது முன்னேறவேண்டும் என முடிவெடுத்து வெளிநாடு புறப்பட்டான். அன்றிலிருந்து இரவுபகலாக உயிரைக் கொடுத்து உழைத்தான். அத்தனையும் நித்யாவுக்காக. இன்று மூன்று வருடங்களின் பின் தன் நித்யாவைக் காண ஆசையா ஓடோடி வருகிறான். ஆனால், அவன் மனதில் ஏதோவொரு சொல்லமுடியாத காயம் இருந்தே வருகிறது. கார்த்திக் வெளிநாடு புறப்பட்டு ஒரு வருடங்கள் அவனுடன் நன்றாகப் பேசியவள் இன்று இரு வருடங்கள் ஆகின்ற நிலையில் கார்த்திக்குடன் பேசியதே கிடையாது. இருந்தும் அவளுக்கு ஏதாவது பிரச்சினையாக இருக்கும். அதனாலதான் அவ என்கூட பேசமுடியலபோல என்று தன்னைத்தானே ஆறுதல் செய்துகொள்வான்.

விமானம் தரையிறங்குகின்றது. அதனுடன் சேர்ந்தே வானிலே பறந்த அவன் கனவுகளும் தரையைத் தொட்டன. ஆசையாக ஓடோடிச் சென்றான் நித்யாவிடம். சென்றவன் சுற்றும் முற்றும் பார்த்தபோதுதான் சுவரிலே தொங்கிய நித்யாவின் புகைப்படமும் அதற்கு இட்ட மாலையையும் கண்டு மயிர்கூச்செறிய அசைவற்று நின்றான். காரணம் அறிந்தபோது கதறித் துடிக்கின்றான்.

''உன்கூட இரண்டு வருஷத்துக்கு முன்னாடி போன்ல பேசிட்டு வீட்டுக்கு வரும்போது யாரோ காமவெறி பிடிச்ச பாவிங்க என் மகளை சிதைச்சிட்டாங்க. இத உன்கிட்ட சொன்னா நீ உன் உயிருக்கு ஏதாச்சும் பண்ணிடுவாய் என்றுதான் நாங்க எல்லாத்தையுமே மறைச்சிட்டம். எங்கள மன்னிச்சிடிப்பா''.

அனைத்து ஞாபகங்களும் அவனை உருக்கிப் போட நித்யா.... நித்யா... என்றபடியே நிலத்திலே வீழ்ந்தான். அன்று வீழ்ந்தவன் இன்னும் எழுந்திடவே இல்லை. வருடம் பதினைந்தை எட்டுகின்றது. அந்த நாற்காலியில் அசைவற்ற ஜடமாய் நித்யாவின் நினைவுகளை சுமந்துகொண்டு வாழ்கின்றான் மாறாக் காதலுடன்.

மானிப்பாய் சுதா (சுதர்ஷினி)



## நட்சத்திர இல்லத்தரசி

(47 ஆம் பக்கத்தில் தொடர்ச்சி)

**ஒரு சிறந்த தொழில் முயற்சியாளரான உங்கள் வழிகாட்டியாக யாரைக் கருதுகின்றீர்கள்?**

எனது அம்மாதான். அவர் அதிகம் படித்தவரல்ல; ஆனாலும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் துணிச்சலும் கொண்டவர். இன்றுவரை தானே சுயமாக உழைத்துவாழ்பவர். அவரிடம் இருந்தே இப்பண்புகளை வளர்த்துக்கொண்டேன்.

**நீங்கள் பெருமை அடைந்த சந்தர்ப்பம் பற்றி?**

நான் வறுமை காரணமாக அதிகம் கற்கவில்லை. பல்கலைக்கழக மாணவர்களிற்கான கருத்தரங்கு ஒன்றில் எனது தொழில் முயற்சி பற்றிய அனுபவங்களை உரையாற்றி உற்சாகப்படுத்தியபோது என்னை நானே பெருமையாக உணர்ந்தேன்.

**உங்கள் சமூகப்பணிகள் குறித்து?**

என்னால் முடிந்தவரையில் சமூகப்பணியாற்றிவருகின்றேன். அதாவது எமது ஊரை அண்டியபகுதியிலுள்ள ஆதரவற்ற முதியோருக்கு தினமும் ஒருவேளை உணவை எனதுதொழிற் சாலைப் பணத்திலிருந்து கொடுத்துவருகின்றேன். முன்பள்ளி மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள், பாடசாலை மாணவர்களிற்கான கல்வி ஊக்குவிப்பு பணம் வழங்கல் போன்றவற்றைச் செய்கின்றேன்.

**இன்றைய பெண் சமூகத்திற்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

ஒவ்வொரு பெண்களிற்குள்ளும் ஏதோ ஒருதிறன் ஒளிந்துள்ளது. அதனைச் சரியாகப் பயன்படுத்தினால் நிச்சயம் வெற்றிபெறலாம். தனது தேவைகளுக்கான பணத்தை தானே சம்பாதிக்கவேண்டும். இன்றையகாலத்தில் அதிக குடும்பபிளவுகளுக்கு பொருளாதாரப் பிரச்சினையே பிரதான காரணமாக உள்ளது. கணவனுக்கு உதவியாக மனைவியும் சம்பாதித்தால் அனேக பிரச்சி னைகள் குறைந்துவிடும்.

**நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி?**

மாவட்ட விருது, சிறந்த பெண் முயற்சியாளருக்கான வட மாகாண விருது, சிறந்த கண்டுபிடிப்பாளருக்கான தேசியவிருது.

**நீங்கள் நன்றி கூறவிரும்புபவர்கள்?**

முல்லைமாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள், முன்னாள் அரச அதிபர் திரு. வேதநாயகன் அவர்கள், முன்னாள் பிரதேசசெயலர் பிரதாபன், பிரதேசசெயலர் பிரணவநாதன், care, world vition, swisslaber போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் யாழ் பல்கலைக்கழகம், மற்றும் இந்நேர்காணலை செய்தஒளி அரசிசஞ்சிகைக்கும் எனது நன்றிகள்.


நேர்காணல் - ஜயிலா







# இறந்த அறிஞர்களின் மூளை எங்கே?



**அம்மு, ஊழலுக்கும் சின்னஞ்சிறு கொசுக்களுக்கும் இடையில் ஏதாவது ஒற்றுமை உண்டா? (பாரிராஜ் - மட்டுவில் தெற்கு)**

பாரிராஜ், விடை தெரிந்துகொண்டேதான் என்னை செக் பண்ண இந்த வினாவை கேட்டுள்ளீர்கள் போலும். நீங்கள் வாசித்துள்ள அதே புத்தகத்தை பல வருடங்களுக்கு முன்பு நானும் வாசித்தது எனக்கு நினைவில் உண்டு. இருப்பினும், வாசகர்களுக்காக இங்கே பதிலை தரவேண்டியுள்ளது.

பதில்:- ஆம்.

அறிவியலும், தொழில்நுட்பமும் எவ்வளவோ வளர்ச்சி பெற்றிருக்கும் இன்றைய சூழலில் சின்னஞ்சிறு கொசுக்களை முழுமையாக ஒழிக்க முடியாதா என்று ஒரு அதிகாரியிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

''ஊழல் எப்படியோ அப்படியேதான் கொசுவும். இரண்டையும் நம் நாட்டில் அவ்வளவு எளிதில் ஒழக்க முடியாது'' என்றார் அந்த அதிகாரி.

.......................................

**அம்மு, காலங்கள் கடக்கையில் எத்தனையோ அறிஞர்களும் ஞானிகளும் இறந்து மறைந்துள்ளனரே, அவர்களின் மூளை எங்கே உள்ளது? (சிந்துஜா கொக்குவில்)**

அவர்கள் எழுதிய புத்தகங்களில் தான் சிந்து

.......................................

**அம்மு, இன்றைய இளைஞர், யுவதிகளுக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன? (ச. பாரதி, கொழும்பு - 14)**

சிந்திக்கத் தெரியாதவன் முட்டாள். சிந்திக்க மறுப்பவன் கோழை. சிந்தித்து தெளிவுபெற்ற பின்பும் பணத்துக்காக தவறை செய்பவன் துரோகி என்றார் ஷேக்ஸ்பியர். இளைஞர்களே, தயவுசெய்து சிந்திக்கத் தொடங்குங்கள்.

**அம்மு, பான் கீ-மூனின் வரவு எமக்குத் தெளிவுபடுத்தியுள்ள விடயம் என்ன அம்மு? (எஸ்.கார்த்திகா, கிளிநொச்சி.)**

பிச்சை வேண்டாம், நாயைப் பிடி என்ற மாதிரி தங்கத்தமிழ்த் தலைவனின் வீழ்ச்சிக்குப் பின்பும் தமிழ் மக்களின் உச்சக்கட்ட அழிவுக்குப் பின்பும் அரசியலே வேண்டாம் என்றுதான் 'அரசியல், பாலியல் கலக்காத படைப்பு' என்ற நிபந்தனையுடன் சமூக மாற்றத்தை நோக்கி ஒளிஅரசியை மிகுந்த சிரமப்பட்டு வெளியிட்டு வருகின்றோம்.

இருப்பினும், பதில் தெரியாது என சொல்ல எனது பேனா மறுக்கின்றது.

நேரடியாக தெளிவுபடுத்தியுள்ள விடயம்:-

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஐ.நா. தவறு இழைத்துள்ளதை பத்திரிகையாளர்கள் முன் அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

மறைமுகமாக தெளிவாகும் விடயம்:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ஏன் என்று கேட்கிறீர்களா?


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உயர் நிர்வாக அங்கத்தவர்கள் அனைவரும் ஓர் இடத்தில் அவரை சந்திக்க - ஒரே கருத்தை வலியுறுத்த மிக அதிக வாய்ப்பிருந்தும் பல கோணங்களில் தனித்தனியாக சந்தித்தமை எதை எமக்குத் தெளிவுபடுத்துகின்றது என்பதை கார்த்திகா நீங்களே யோசியுங்கள்.

.......................................

**அம்மு, சொந்தம் பந்தம் இரண்டிற்குமான வேறுபாடு என்ன (நித்தியா நானாட்டான்)**

சொந்தம் என்பது கூடிப்பிறந்த இரத்த உருத்துள்ள உறவுகள், பந்தம் என்பதுவந்துசேரும் உறவுகள்

குறிப்பு - வாசகர்களே! உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள் அல்லது Oli Arazi என்ற முகநூலில் பதிவிடுங்கள்.



# அறுபத்து மூவர் கதைகள்

தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் குடிமரபில் பெரியபுராண காவிய ஆசிரியரான சேக்கிழார் பிறந்தார். அவரின் இயற்பெயர் அருண்மொழி இராமதேவர். சேக்கிழாரின் அறிவுத்திறன் அறிந்து அநபாய குலோத்துங்க சோழன் அவரை முதலமைச்சராக்கினான். மன்னன், சேக்கிழாருக்கு உத்தமச்சோழப் பல்லவர் பட்டம் கொடுத்து வைத்திருந்தான். அநபாய சோழன் கலாவினோதன் என்பதால் சீவக சிந்தாமணிக் காப்பியத்தை விரும்பிப் படித்துவர அதனை சேக்கிழார் கவனித்து வருந்தி மன்னனிடம், ''நீங்கள் படிப்பது அவகதை.'' ''சிவகதை உண்டு'' எனக் கூறி திருத்தொண்டர்களின் வரலாறுகளையும், அவர்களின் செயல் பெருமைகளையும் கூற அக்கதையைக் கேட்ட மன்னன் நெஞ்சம் உருகி, ''இச் சிவனடியார்களின் புண்ணிய வரலாறுகளை ஒரு பெரும் காவியமாக தந்தருளவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். மகா காவியம் இயற்ற ஆள்வசதி, பொருள், பொன் வசதிகளை வாரி வழங்கினார்.

அதன்பின்னர் சேக்கிழார் தில்லைக்கூத்தரின் திருவருள் பெற்றே காவியம் எழுதவேண்டும், அரங்கேற்ற வேண்டும் என விரும்பி சிதம்பரம் சென்று சிவனிடம், ''ஆண்டவனே! உம் அடியார்களின் வரலாற்றைக் காவியமாகப் பாட நீரே பாடலின் முதல் அடியை எடுத்துத் தரவேண்டும்'' என வணங்க, நடராஜப்பெருமான், 'உலகெல்லாம்' என முதல் அடியை வானில் அசரீரியாகக் கூற சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்ற பெருங்காப்பியத்தை எழுதத் தொடங்கினார்.

இறைவனின் 'உலகெல்லாம்' என்ற அசரீரியால் தில்லைவாழ் அந்தணர்கள் அதிசயித்து இறையருளை நினைந்து உருகி சேக்கிழாருக்கு திருமாலையும், திருநீரும், பரிவட்டமும் கொடுத்து தமது மண்டபத்தில் தவநெறியோடு அமர்ந்து இறைவனின் திருவருளோடு பெரியபுராணக் கவிதை எழுத ஆவன செய்தார்கள். அதை அறிந்து மன்னனும் பரிவாரத்தோடு வந்து தலைமீது கைகுவித்து சேக்கிழாரை வணங்கி உள்ளூர மகிழ்ந்தான். அவ்வேளை, மீண்டும் வானில் அசரீரி கேட்டது. ''உலகெல்லாம் என அடியெடுத்துக்கொடுக்க என் அன்பன் சேக்கிழான் நல்ல புராணம் இயற்றியுள்ளான் அதன் திறன்களை நீ கேட்பாயாக'' என சிலம்பொலியுடன் வானொலி எழுந்தது.

மன்னன் மகிழ்ந்து, ''அன்பர்கள் எல்லாம் விரைந்து வருக'' என தூதர்களை அனுப்பி அழைப்பு விடுத்தான். சிவபக்தர்கள் திருப்பதிகம் ஓத, அரகரா! என்ற பேரொலி எழும்ப மாவேந்தர்கள், மந்திரிகள் திரண்டு வந்தார்கள். வேதியர்கள் வேள்விப் புகை வளர்க்க, மாதர் அகிற்புகை மணம் பரப்ப, வீதிகள், வீடுகள் கோலமிட்டு தோரணங்கள், பொன்னரி மாலைகள் தொங்கவிடப்பட்டு நகர் அலங்கரிக்கப்பட்டது.

திருச்சிற்றம்பல முன்றலில் கோமயம் கொண்டு மெழுகி வெண்கதையால் பீடம் அமைத்து பசும்பட்டு விரித்து மலர் தூவி திருத்தொண்டர் புராணத்தை வைத்தார்கள். சித்திரை திருவாதிரை நாளில் சேக்கிழார் தம் புராணத்தை அரங்கேற்றி மறு ஆண்டு அதே சித்திரை திருவாதிரையில் முடிப்பதாகக் கூறினார்.

அன்றிலிருந்து புராண பிரசங்கம் நடைபெற்று கதைகளை சோழ மன்னனும் கேட்டு வந்தான். பின் பெரிய புராண நூலை மந்திர அர்ச்சனைசெய்து, ஆரத்தி எடுத்து ஐந்தாவது வேதம் என்று கூறி பசும்பட்டினால் போர்த்தி பொன் தட்டி வைத்து சோழனின் பட்டத்து யானையில் ஏற்றி சேக்கிழாரையும் ஏற்றி தானும் ஏறி சேக்கிழாருக்கு வெண்சாமரம் வீசி வீதியில் ஊர்வலம் வரச் செய்தான். பின்பு திருச்சிற்றம்பலத்தில் நடராஜப்பெருமானின் சந்நிதி முன்பு வைக்கப்பட்டது. சேக்கிழாருக்கு 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பெயரையும் சூட்டினார்.

| | நாயன்மார் பெயர் | குலம் | நாடு | பிறந்த ஊர் | வழிபாடு நட்சத்திரம் | மாதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அதிபத்தர் | பரதர் | சோழநாடு | நாகை பட்டினம் | லிங்கம் | ஆவணி - ஆயில்யம் |
| 2. | அப்பூதியடிகள் | அந்தணர் | சோழநாடு | திங்களூர் | குரு | தை - சதயம் |
| 3. | அமர் நீதியார் | வணிகர் | சோழநாடு | பழையாறை | சங்கம் | ஆனி - பூரம் |
| 4. | அரி வாட்டாயர் | வேளாளர் | சோழநாடு | கணமங்கலம் | லிங்கம் | தை - திருவாதிரை |
| 5. | ஆனாயர் | இடையர் | மழநாடு | மங்காவூர் | லிங்கம் | கார்த்திகை - ஷஸ்தம் |
| 6. | இசைஞானியார் | ஆதிசைவர் | நடுநாடு | திருநாவலூர் | லிங்கம் | சித்திரை |
| 7. | இடங்கழியார் | சிற்றரசர் | கோனாடு | கொடும்பாளூர் சங்கம் | ஐப்பசி - | கார்த்திகை |
| 8. | இயற்பகையார் | வணிகர் | சோழநாடு | காவிரிப்பூம்பட்டினர் | சங்கம் | மார்கழி - உத்திரம் |
| 9. | இளையான்குடிமாறன் | வேளாளர் | சோழநாடு | இளையான்குடி | சங்கம் | ஆவணி - மகம் |
| 10. | உருத்திரபசுவதியார் | அந்தணர் | சோழநாடு | திருத்தலையூர் | லிங்கம் | புரட்டாசி - அஸ்வினி |
| 11. | எறிபத்தர் | - | சோழநாடு | கருவூர் | லிங்கம் | மாசி - அஸ்வினி |
| 12. | ஏயர்கோன் கலிக்கோன் | வேளாளர் | சோழநாடு | திருப்பெருமங்கலம் | லிங்கம் | ஆனி - ரேவதி |
| 13. | ஏனாதிநாதர் | சான்றார் | சோழநாடு | எயினனூர் | சங்கம் | புரட்டாதி - உத்திராடம் |
| 14. | ஐயடிகள் காடவர்கோன் | அரசர் | தொண்டைநாடு | காஞ்சிபுரம் | லிங்கம் | ஐப்பசி - மூலம் |
| 15. | கணநாதர் | அந்தணர் | சோழநாடு | சீர்காழி | குரு | பங்குனி - திருவாதிரை |

**முகவுரை**

பெரியபுராணம் உலகியல், உயிரியல், கடவுள் இயல் ஒருங்கே கொண்டது. இன்பம், அன்பு, அகவாழ்வு கொண்டது. இந்நூல் தமிழ்மொழியிலேயே முதல் நூலாக மலரும். தமிழகத்து பக்தி வரலாறு, அடியார் சரித்திரம் என்பவற்றை வித்தாகக்கொண்டது. 4,253 செந்தமிழ்ப் பாடல் கொண்டது. இது 'மாக்கதை', 'அறுபத்து மூவர் கதை' எனவும் பெயர்பெறும்.

திருமதி.ஜெ.குகநேசன்
(சிரேஷ்ட ஆசிரியர், கொ/விவேகானந்தா கல்லூரி)

**மேடம்**

கைவிடப்பட்டிருந்த வெளியூர் பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல், வழக்கின் முடிவு சாதகமாக வரும் என நம்பிக்கை பிறத்தல். நிலுவையின் ஒருபகுதி வந்து சேர்ந்தமையையிட்டு திருப் திப்படல், சொத்துப் பங்கிடு பிதாவின் நடுநிலையால் சுமுகநிலைக்குவரல்.

**இடபம்**

பொறுப்பின்றி கொடுத்தபணம் தெய்வச்செயலால் கைக்குவந்து சேரல். பேதம் காரணமாக தடைப்பட்டவிவாகம் கைகூடுதல், மதியாதார் உறவினைக் கைவிடும் படி துணைவி வேண்டுதல். வாஸ்து சாஸ்திரப்படி புதியமனைகோல ஆயத்தமாதல்.

**மிதுனம்**

நோய் குணமடைய குடும்பசகிதம் தெய்வஸ்தலம் சென்றுவர விரும்புதல். அவசரச் செய்கையினால் பொருட்களைத் தவறவிட்டு பின்னர் கிடைத்தல், பகிரதப் பிரயத்தனத்தின் காரணமாக தொழில் கிட்டிவிடல்

**கடகம்**

நட்டநிலைப்பாடு காரணமாக செய்தொழிலில் மாற்றம் கொண்டுவர எண்ணுதல், புதிய வெளியீட்டில் ஆர்வம் காரணமாக மீள்முயற்சியில் ஈடுபடல், பெற்றோரின் நோய் நிலைப்பாட்டின் காரணமாக விடுப்பில் நிற்றல், வெளியூர் பிரயாணம் இடைத்தங்கல் நாடொன்றில் சேர்த்துவிடல்.

**சிம்மம்**

வியாழசுகம் இருப்பதைக் கண்டு விவாக முயற்சியில் ஈடுபடல், கணக்கு வைத்திருந்ததில் தில்லுமுல்லைக் கண்டு வாடிக் கையை முறித்தல், பங்குத்தொழிலைக் கைவிட்டு தனித்தியங்க ஆயத்தமாதல்.

**கன்னி**

காணாமல்போனவர் உயிருடன் உள்ளார் எனத்தகவல் அறிதல். குடியுரிமைபெறும் நோக்கில் காகித திருமணத்தை மேற்கொள்ளவிரும்புதல், கண்டும் காணாமல் சென்றதினால் எதிரியின் தொல்லை அற்றுப்போதல், கல்விப்புல முன்னேற்றம் கருதி தொலைக்காட்சிப் பெட்டியை மூடிவைத்தல்.

**துலாம்**

எதிர்பாராது சுபகாரியம் ஏற்பட்டவேளை பணத்தட்டுப்பாடு ஏற்படல்,குடும்பத்தில் புதிய ஜீவன் உண்டான செய்திகேட்டுஆனந்தம் அடைதல், புதியன கொள்வனவில் நம்பகத் தன்மையைக் கைவிடா திருத்தல், நீண்ட நாட்களாக வருத்தியநோய் குணமடைதல்.

**விருச்சிகம்**

ஜென்ம சனி நிலவுவதால் பிள்ளைகளின் நடவடிக்கையை பவ்யமாக கண்டிக்கவேண்டியமை, பரீட்சைசித்தியினால் பதவி உயர்வு, சம்பள ஏற்றம் ஏற்பட்டுவிடல், இடைத்தங்கல் நாட்டில் நின்றுகொண்டுசகோதரர் உதவியினால் குறிக்கோளை அடைதல், மூத்தசகோதரர் மூலம் அதிஸ்டம் ஏற்படல்.

**தனு**

எதிர்பாராத இடமாற்றத்தினால் பதகளியும் கவலையும் ஏற்படல். வெளிநாட்டைக் கைவிட்டு தாயகத்தில் குடியேற நடவடிக்கை எடுத்தல். இலக்கின்றித் திரியும் பிள்ளைகளை எண்ணிகவலையுறல்.

**மகரம்**


நண்பர் உதவியினால் மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை கிட்டுதல், திகதி தப்பிய மருந்து வில்லைகளைப் பாவித்தமையினால் தேகநலன் குன்றுதல், குழந்தைப்பேற்றுக்காக வெளிநாட்டுப் பண உதவியை எதிர்பார்த்தல், நிலுவைகள் அதிகரித்ததினால் தொடர்புகள் தற்காலிகமாக துண்டிக்கப்படல்.

**கும்பம்**

ஈகோ மனப்பாங்கின்றி இருப்பதால் சக ஊழியர்கள் ஒத்துழைத்தல், உடையவன் பாராவிட்டால் ஒருமுழம் கட்டை என்பதை மறக்காதுதொழிலில் கவனமெடுத்தல், வெளிநாட்டினின்றும் இரத்த உறவுகள் மனைக்கு விஜயம் செய்தல், கள்ளநோட்டுக்கள். போலியான நாணயத்தாள்கள் வந்துசேரலாம்.

**மீனம்**

ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருப்பதினால் திருட்டுப்போகாது தடுத்தல், நீண்டகாலத்தின் பின்னர் சொந்த நிலத்தில் கால்பதித்தல், பிதாவின் தேக நலன் பாதிக்கப் படுவதினால் மனக் கவலை வாட்டுதல், தொழில் மற்றும் பயணம் காரணமாக குடும்பத்தை விட் டுச்செல்லும் நிலையுண்டாதல்.



சோதிட வித்யா ரத்னா வி.ஏ. சிவராசா, யாழ்.

## பிரபலமும், சமூக அக்கறையும்







| | |
|---|---|
| பெயர் | : காஜல் அகர்வால் |
| பெற்றோர் | : சுமன் அகர்வால் வினய் அகர்வால் |
| வயது | : 31 (19.06.1988) |
| முதல் ஹிந்தி படம் | : ஹோகயாநா |
| முதல் தமிழ் படம் | : பழனி |
| வேறுபடங்கள் | : துப்பாக்கி, பொம்மலாட்டம், நான் மகான் அல்ல, ஜில்லா, ஆல் இன் அழகுராஜா, மாரி, மாற்றான், மோதி விளையாடு, மாவீரன் |
| உடன்பிறப்பு | : நிஸா அகர்வால் (நடிகை) |
| கல்வி | : B.M.M. |

இந்தியாவின் பிரபல ஊடக நிறுவனமான யுபிஎம் அதன்வருடாந்த கோர்ப்பரேட்கடப்பாட்டு நிகழ்வான கிவிங்பாக் இந்தியா என்ஜிஓ 2014 இன் விளம்பர தூதுவராக செயற்படுவதற்கு நடிகை காஜல் அகர்வாலை நியமித்தது. இதில் உலக நாடுகளை சேர்ந்த 120 அரசசார்பற்ற அமைப்புகள் பங்கெடுத்திருந்தன. இந்நிகழ்வு மும்பாயில் இடம்பெற்றது. விளம்பர தூதுவர் என்ற அடிப்படையில் அவர் சமூக விவகாரங்கள், மற்றும் சமூகத்தின் பல தரப்பட்ட பிரிவினரின் கரிச னைகள் குறித்தவிடயங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வார், இன்று நிலையான இந்தியாவை கட்டியெழுப்புவது குறித்து சினிமா தொழிற்துறையினர் உட்பட சமூகத்தின் பல பிரிவினர் மத்தியில் இந்த விழிப்புணர்வு காணப்படுகின்றது, கிவிங்பாக் இந்தியா செயற்திட்டம் மூலம் சமூகத்தின் இந்த பல்வேறுபட்ட பிரிவினரை ஒன்றிணைப்பதே அவர்களின் நோக்கம், இந்தியாவின் திரையுலகத்தின் ஒரு உறுப்பினர் என்ற வகையிலும், கிவிங்பாக் இந்தியா என்ற அரச சார்பற்ற அமைப்பின் விளம்பர தூதுவர் என்ற வகையிலும் சமூக விடயங்களை நோக்கி மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு உதவுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் எனத் தெரிவித்த காஜல் அகர்வால் சமூக ஒருமைப்பாடு அவசியமானது எனவும் இன்று முதியோர் சிறுவர் பராமரிப்பு என்பது மிக அரிதாகிவிட்டது எனவும் இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

- நன்றி இணையம் -



# சமூக ஒருமைப்பாட்டை விரும்பும் காஜல்






இன்றையகாலத்தில் பெண்கள் இயலாமையுடன் முடங்கிவிடும் அளவு என்பது மிகமிக குறைவாகவே உள்ளது. வாழ்வின் துணை யானவர்களை இழந்துவிட்டபோதும் ஏதோ ஒருவகையில் போராடி வெல்லவேண்டும் என்னும் எண்ணம் தலைதூக்கிவிடுகின்றது. வறுமையோடு போராடி வாழ்வை வென்றுவிடுகின்றார்கள். அவ்வாறு வாழ்க்கையை வென்ற பெண்கள் எத்தனையோபேர் உள்ளனர்.

அந்தவகையில் இம்மாத மங்கையாக தெரிவுசெய்யப்பட்டுள்ள முத்துராசா செல்வராணி என்பவரும் பெரும் வறுமையுடன் போராடி தனக்கான ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டவர் தான். இவர் நாட்டின் கொடூர யுத்தத்தில் கணவனை இழந்தவர், அதன் பின்னர் பல இடப்பெயர்வுகள் அவரைத் துன்புறுத்தியது. பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தெடுப்பது எனத் திணறியபோது அவர் கற்றயதையற்கலையே அவருக்கு கைகொடுத்தது. அதனை மெல்லமெல்ல வளர்த்து தனது தேவை களைக் கவனித்துக்கொண்டார். ஒருவாறாக தனியாககடை ஒன்றை ஆரம்பித்து வேலைக்கும் சிலரை அமர்த்தி அதன் மூலம் தனக்கான வருவாயைத் தேடிவாழ்வை அமைத்துக்கொண்டார். பிள்ளைகளிற்கும் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொடுத்துள்ளார்.

தற்போது யுத்தம் முடிந்தகாலப்பகுதியில் தமது சொந்தநிலத்திற்குச் சென்றதால் அங்கே கோழிப்பண்ணை அமைத்து அதனையும் நிர்வகிப்பதுடன் தோட்டச் செய்கையையும் முன்னெடுத்துவருவதுடன் கிராமத்து அமைப்புகளில் தானும் இணைந்து அதன்மூலம் பல்வேறு செயற்பாடுகளில் பங்குகொண்டு சமூகசேவை காரியங்களிலும் ஈடுபட்டுவருகின்றார். மிகப் பெரிய தென்னஞ்சோலை ஒன்றை உருவாக்கி தெங்குப்பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் வரப்போகும் சந்ததிக்கு பசுமை உலகொன்றை விட்டுச்செல்ல வேண்டும் என்பதே தனது அவா எனவும் கூறுகின்றார்.

இவ்வாறு பெண்கள் தமது வாழ்வை போராடியே வெல்லவேண்டும் எனக்கூறும் அவரது முயற்சி களுக்கு எமது வாழ்த்தினைத் தெரிவித்து மகிழ்வுடன் விடைபெற்றோம்.

# வாழ்வோடு போராடுவோம்



ஒளிஅரசி செய்தியாளர்
அ.அச்சுதன்







முத்தரப்பினரும் சிந்திப்பார்களா?

# மாறுவோம் மாற்றுவோம்

புலமைப்பபரிசில் பரீட்சை என்பது இன்று பெற்றோருக்கான கௌரவப் பரீட்சையாக மாறிவிட்டது என்றே கூறலாம். பிள்ளைகளை மாறிமாறி ஏற்றி இறக்குவதும் ஏனைய நேரங்களை படிப்பிலேயே கழிக்க வைப்பதுமாக, வதைக்கூட செயற்பாடுகளை ஒத்ததாக நடந்து கொள்ளவைக்கின்றது. சிறார்கள் இப்பரீட்சைக் காலங்களில் ஒருவிதமன இறுக்கத்துடன் வாழ்கின்றார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

பரீட்சைகள் மாணவர்களின் தரத்தினைக் கணிப்பதற்கே தவிர எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு அல்ல, இவ்விடயத்தை பெற்றோர் புரிந்துகொள்ளவேண்டும். இது தவிர, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கின்ற முறையும் சற்று அதிகமானதே.

பட்டமளிப்பு விழாவைப்போன்று மேலங்கி, தொப்பி என்பன அணிவிக்கப்பட்டு அதற்கான விருதினை வழங்கும் போது ஒருவித மெத்தனத்தை மாணவர்களிடம் தோற்றுவித்து விடுகின்றோம். தொப்பி, மேலங்கி என்பன அணிவிக்கப்படுவது தொழில் துறைக்கு ஒருவர் தயாராகிவிட்டார் என்பதைகாட்டும் அடையாளமே ஆகும். இச்செயற்பாடானது இனிமேல் தாங்கள் சாதிப்பதற்கு எதுவுமே இல்லை என்னும் எண்ண த்தை அவர்களிடம் உண்டாக்கிவிடும். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய பலர் சாதாரணதரம், உயர்தரம் என்பவற்றை கைவிட்டசந்தர்ப்பங்களும் அதிகமாகவே உண்டு. இதனை முன்னெடுப்பவர்கள் கல்விகற்ற சமூகத்தினரே ஆகும். இச்செயற்பாடானது அதிபர் ஆசிரியர்களுக்கு சில நன்மைகளைக் கொடுத்தாலும் சில விளைவுகளுக்கும் காலாகின்றது.

ஒன்றிரண்டு புள்ளிகளால் வாய்ப்பினைத் தவறவிடும் மாணவர்களுக்கு இச்செயல் பாரிய அளவிலான மனப்பாதிப்பை உண்டு பண்ணிவிடும் என்பதையும் இவ்வாறான நிலையில் உள்ளமாணவர்கள் இச்சந்தர்ப்பத்தில் பெற்றோரால் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதையும் அனைவரும் உணர்ந்தே ஆகவேண்டும். பாடசாலைச் சமூகத்தினர் முயன்றால் இதன் விமரிசையைக் குறைத்து பாராட்டு விழாவை நடாத்தலாம் என்பதுடன் அதிபர், ஆசிரியர்களும், அபிவிருத்திசங்கமும் பெற்றோரும் இவ்விடயத்தை நன்கு சிந்தித்து தீர்மானிக்க வேண்டும் என்பது இன்றையகாலத்தின் தேவையாகும். அல்லது எதிர்மறையான விளைவுகளை கல்விச்சமூகம் சந்திக்கநேரிடும்.

(ஜன[ர]ரஞ்சகன், கொழும்பு)

### குறுந்தொடர்



ஆவர்த்தனா இப்படி அவசரமாக எழும்பவேண்டாம் எண்டு எத்தனை தடவை சொன்னனான் என்றாள் செல்லக் கண்டிப்புடன். அந்தவார்த்தையில் தாய்மையின் அன்பும் பற்றுதலும் இருந்ததை உணர்ந்தாள் ஆராதனா.

அந்த இல்லத்தில் நின்றநாட்களில் குழந்தை புளோ, காரூரனிடம் மிகவும் நெருக்க மாகிவிட்டிருந்தாள். அங்கிள் அங்கிள் என் அவனையே சுற்றிச்சுற்றிக் கொண்டிருந்த குழந் தை மீது காரூரனும் அளவில்லாத நேசத்ததுடன் பழகினான். அங்கிருந்து புறப்படும் கடைசிநிமிடம் வரை அவனுடனேதான் விளையாடிக்கொண்டிருந்தாள். கண்களில் பார்வை இல்லாதபோதும் கரம் போட் காய்களை அவன் லாவகமாக அடித்தவிதத்தில் ஒவ்வொருதரமும் கைக ளைத் தட்டி ஆர்ப்பரித்தாள். தனது மகள் என்றும் இல்லாத ஆனந்தத்துடன் இருப்பதைக் கண்ட ஆராதனாவும் மகிழ்சியில் திழைத்துப் போனாள். தோழி யின் வேண்டுகோளுக்கிணங்கி மீண்டும் தாய் வீட்டிற்குப் புறப்பட்டாள்.



மறுநாள் அவள் சிந்தனையில் லயித்திருந்தவேளை அம்மா செல்போன் பிளீஸ் என்றாள் எதுக்கு? என்றுகேட்டதும் அங்கிளிடம் பேசணும் என்றாள். கேள்வியாய் நோக்கியதாயிடம் நம்பர் தெரியும், என்றபடி போனை வாங்கி நம்பரைத் தட்டினாள். எதிர் முனையில் குட்டிம்மா.. காரூரனின் கொஞ்சலில் குதுகலித்த குழந்தையை அன்புடன் பார்த்த ஆராதனாவின் எண்ணங்கள் திட்டம் ஒன்றைத்தீட்டியது. ஒருசங்கீத ஆசிரியராக இருக்க வேண்டியகாரூ ரன் யுத்தத்தில் கண்களை இழந்ததால் ஆவர்த்தனாவின் உங்களுக்காகவில் வாழ்ந்துவருவதையும் அவனது சிகிச்சைக்கு பலலட்சங்கள் தேவைப்படுவ தாகவும் அறிந்தபோதே அவளுக்கு வேதனையாக இருந்தது. தான் எண் ணியதைச் செயற்படுத்த ஆவர்த்தனாவிடம் தொடர்புகொண்டாள். ஆராத னாவும் மகளும் கொழும்பிற்குப் புறப்பட்டனர். அன்றுதான் ஆரூரனுக்கு கண்ணுக்கான சத்திரசிகிச்சை நாள் குறிக்கப்பட்டிருந்தது. குழந்தை புளோ அவனைப்பார்க்க வேண்டும் என அடம்பிடித்தாள். நேரடியாக வைத்தியசாலைக்கே சென்றபோது ஆவர்த்தனாவும் அங்கேதான் இருந்தாள். ஆரதனாவின் சேமிப்பில் இருந்து அரை வாசி சேமிப்பை காரூரனின் சிகிச்சைக்காக அவள் கொடுத்தபோது பெருமையுடன் தோழியைப் பார்த் தாள் ஆவர்த்தனா. குழந்தையைக் கட்டியணைத்த காரூரன் கைகள் இரண்டையும் கைகூப்பிநன்றி எனக்கூ றியபோது ஆராதனா, என் மனத்திருப்திக் குத் தான் செய்தேனே தவிர இப்படி உங்களை கஸ்ரப்படுத்த இல்லை. ஏதோ என்னால முடிஞ்சசின்ன உதவி, இதைச்செய்யிறதில எனக்கு ஒரு ஆத்மதிருப்தி. நன்றிசொல்லி என் னைப் பெரிய ஆளாக்கிடாதைங்கோ என்று சொல்லி விட்டுச்சிரித்தாள்.

என்னதான் சொன்னாலும் எனக்கு கண்கொடுத்த தெய்வம் நீங்க, உங்களுக்கு என்ன கை மாறு செய்யப்போகிறேன்? என அவன் கூறியபோது, காரூரன் உங்களால செய் யமுடிஞ்ச கைமாறொன் றை நான் கேட்கிற போது செய்ய

# அவளும் நானும்


— ஒளிஅரசி

## குறுந்தொடர்

முடிந்தால், செய்தால் சரி என்ற தோழியை ஆராதனா ஆச்சரியமாயப் பார்க்க, சின்னப்புன்னகையை மட்டும், விடையாயித், தந்தாள் ஆவர்த்தனா. காரூரனுக்கான சத்திரசிகிச்சை முடியும்வரை அங்கேயே காத்திருந்த மூவரும் அவனைமீண்டும் விடுதிக்குமாற்றும் வரை இருந்து அவனுக்கான நீராகரம், உணவு எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு அவனோடு கூட ஒருபராமரிப்பாளரையும் தங்கவைத்துவிட்டு வந்தார்கள்.

மறுநாள் அவனுக்கு கண்கட்டு பிரிப்பதாகக் கூறப்பட்டது. தனது கண்கட்டுக்கள் பிரிக்கப்படும் போது குழந்தை புளோவைத்தான் முதலில் பார்க்கவேண்டும் என்ற அவனது ஆசைக்காக காலையிலேயே மூவரும் வைத்தியசாலைக்குச் சென்றனர். உலகைமீண்டும் பார்த்த காரூரன் ஆவர்த்னாவின் கைகளைப்பற்றி குழந்தைபோல தேம்பி தேம்பி அழுதான். கிடைக்காதது என எண்ணிய ஒன்றுகிடைத்துவிட்ட மகிழ்ச்சியினாலும் உறங்கிப் போன தனது இலட்சியத்தை உயிர் பெறவைக்கலாமென்ற நம்பிக்கையினாலும் உண்டான அழவில்லா ஆனந்தம் கண்ணீராகப் புரண்டது. அவனைச் சமாதனப்படுத்தி விட்டுவருவது பெரும் வேலையாகிப் போனது ஆவர்த்தனாவிற்கு. மதிய உணவு ஆயத்தம் செய்யவும் மூவரும் வந்துசேரவும் சரியாக இருந்தது.

சாதாரண அவியல் முறையில் தயாரிக்கப்பட்டிருந்த உணவுவித்தியாசமான சுவையுடன் இருந்தபோதும் அங்கிருந்தசிலர் சிறியமுகச்சுழிப்புடன் அதனைப் பெற்றுச் செல்வதையும் கண்டாள். தினமும் அதே உணவு உண்பதனால் ஒருவிதவெறுப்பு அவ்வுணவின் மீது ஏற்பட்டுவிட்டதென்பதை அவள் உணர்ந்துகொண்டாள். இதுபற்றி ஆவர்த்தனாவிடம் பேசியபோதுதற்போதைய பட்ஜெட்டேமாத முடிவில் தட்டுப்பாடானநிலையைத் தருவதாகக்கூறியபோது இந்நிலை பற்றிதீவிரமாகச் சிந்தித்தாள் ஆராதனா.




காரூரனுக்குச் சத்திரசிகிச்சை முடிந்து இரண்டுவாரங்கள் சென்றுவிட்டன. போவதற்கு இடம் ஏதுமற்றவன் என்பதால் மீண்டும் விடுதிக்கே வந்திருந்தான். ஆனாலும் அங்கு அதிக நாட்கள் இருக்கமுடியாது என்பது அவனுக்குத் தெரியும் வேறுவழியின்றியே அங்குவந்திருந்தான். மறுநாள் அதிகாலையிலேயே புறப்பட்ட காரூரனைத் தடுத்து நிறுத்திய ஆவர்த்தனா தனது இருப்பிடம் வருமாறு கூறிவிட்டுச் சென்றாள். குழப்பம் நிறைந்தமனதுடன் உள்ளே வந்து என்ன எனக்கேட்டவனிடம் ஆவர்த்தனா பதில் சொல்லவில்லை. அங்கு ஆராதானவும் இருந்தாள். ஆச்சரியம் நிறைந்தவனாய் ஆவர்த்தனா காட்டிய இருக்கையில் அமர்ந்தான் காரூரன்.



மெல்ல தொண்டையைச் செருமிய ஆவர்த்தனா, காரூரன், நான் சொல்லப்போறதைபொறுமையாய் கேளுங்கோ, எந்த உதவிக்கும் பிரதி உதவியாய் இதைச்செய்யச்சொல்லிக்கேக்கேல்லை. மனசாரபிரியப்பட்டா மட்டும் நீங்க இதைச் செய்யுங்கோ. எந்தக் கட்டாயமும் இல்லை, எனப்பீடிகையுடன் கூறியபோது வியந்து பார்த்தவன், அவள் கூறியதைக் கேட்டதும் அதிர்ந்துபோனான். அடக்கடவுளே, இத்தனை நல்ல மனங்கொண்ட ஆராதனாவிற்கா இப்படிஒருநிலைமை?



## குறுந்தொடர்



சற்றுநேரம் அங்கு அமைதிநிலவியது. ஆராதனா குனிந்ததலை நிமிரவே இல்லை. இவ்விடயம் பற்றி ஆவர்த்தனா கூறியபோது முதலில் மறுத்தாள். பின்னர் தோழி கூறியபலகாரணங்களை சிந்தித்துப்பார்த்து சம்மதம் கூறியபோதும் மனதின் சிறுஓரம் அவனதுபதிலை ஆவலோடு எதிர்பார்த்துத் துடித்தது.

இத்தனைவருடம் உறுதியோடு வாழ்ந்துவிட்ட அவளது மனம் காரூரனின் பதிலுக்காக ஏன் இப்படித்தவிக்கின்றது? ஓ இதைத்தான் பெண்ணின் பேதமை என்பதா, என்றயோசனையில் ஆழ்ந்துவிட்ட அவளை குழந்தை புளோவின் சிரிப்பு நடப்பிற்கு அழைத்துவந்தது.

புளோ, பெரியவங்க கதைக்கேக்க உள்ளே வரக்கூடாது என்றுசொல்லி இருக்கிறன் இல்லையா, போய் வெளியில விளையாடுங்கோ என்ற ஆராதனாவிடம் சொறி மம்மி எனமொழிந்த படி காரூரனிடம் திரும்பி அங்கிள் வாங்கவிளையாடுவம், என அவன் கரம் பற்றி இழுத்தாள்.


சட்டெனகுழந்தையை இழுத்து அணைத்துக் கொண்ட காரூரன் அங்கிள் என்று சொன்னால் வரமாட்டன், என்றான். அப்பஎப்படி என்று நீலமணிக்கண்களை உருட்டிக் கேட்டதுகுழந்தை. அப்பா என்ற படிநிமிர்ந்து ஆராதனாவை குறும்புடன் பார்த்தான். வெட்கத்தில் சிவந்து போனமுகத்தை திருப்பிக் கொண்டவளின் இதயமோ இறக்கை கட்டி வானத்தில் பறந்தது. ஆராதனா என்றபடிஅருகில் வந்ததோழியின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் உரிமையுடன்.

இப்பொழுதெல்லாம் உங்களுக்காகசிறப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதன் முழுச் செலவிற்கான பொறுப்பையும் காரூரன் ஆவர்த்தனா தம்பதிகள் பார்த்துக்கொண்டனர். மாதாமாதம் தமது வருமானத்தின் சரிபாதியை உங்களுக்காகவிற்கு அனுப்பிவிடுவதுடன் வேறு வசதி படைத்தவர்களிடமும் பெற்று அனுப்பிவந்தனர்.

சிலமணித்துளிகளுக்கு முன்னர் பிறந்த தங்கள் மகளுக்கு ஆவர்த்தனா எனப்பெயர் சூட்டி உள்ளதாக ஆராதனா கூறியபோது நெகிழ்ந்து போனாள் ஆவர்த்தனா. அழகான புன்னகையுடன் அவளும் நானும் என உச்சரித்தது

**முற்றும்**

**கோபிகை**





# உளவியல் ஆலோசனை

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனத் தைரியம் அவரவரிடமே உண்டு. திடீரெனத் தோன்றும் பிரச்சினைகளைப் பெரிதாகக் கருதி மனம் சோர்ந்து போகும் வேளைகளில் தட்டிக்கொடுக்கவும் தைரியப்படுத்தவும் யாரோ ஒருவருடைய ஆலோசனை தேவையாகவே உள்ளது. அவ்வாறான வேளைகளில் உங்கள் உள்ளம் தேற்றும் நல்ல தோழியாக இருந்து உளவியல் ஆலோசனை களை வழங்குகின்றாள் ஒ்ளிஅரசி. மனம் கனக்கும் கணங்களை ஒளி அரசியுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**கேள்வி:**

எனக்கு முப்பது வயது. நான் உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் படித்திருந்தேன். திருமணம் செய்து பிள்ளைகள் இருவர் இருக்கின்றார்கள். நான் எது செய்வதாக சொன்னாலும் எனது கணவர் வேண்டாம் செய்யவேண்டாம் எனத்தடை சொல்கிறார், ஆனால் என்மீது நல்ல அக்கறையாக இருக்கிறார். எந்த குறையும் வைத்ததில்லை. அன்பாக நடக்கின்றார். நான் வேலைக்குப் போவதற்கும் அவர் விரும்பவில்லை, அழகுக்கலைகள் படித்திருக்கிறேன் நன்றாகச் செய்வேன், அதனைத் தொழிலாகச் செய்வதற்கும் விரும்புகிறார் இல்லை. உனக்கு, அது செய்வது கஷ்டம் என்கிறார், இவ்வாறு நான் எடுக்கும் முயற்சிகளுக்கு எல்லாம் தடை போடுகிறார். அவர், தான் விரும்புவதுபோல் தான் இருந்துகொள்கிறார் ஆனால் நான் விரும்புவது போல என்னால் இருக்கமுடியவில்லை. அதனால் கணவர் மீது மிகவும் கோபம் வருகிறது, அழுகை வருகிறது, இதனால் தலையிடி கூட அடிக்கடி வருகிறது. இரவில் நித்திரை வருவதில்லை. என்னசெய்வதென்று புரியவில்லை. நிம்மதி இல்லாதது போல் இருக்கின்றேன். தூக்க மாத்திரை இரவில் போட்டுக் கொள்கின்றேன். இல்லாவிட்டால் நித்திரை வருவதில்லை. என்னால் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

**பதில்:**

எமது விருப்பப்படியே எல்லாம் செய்யவேண்டும் என்பது ஆண் பெண் இருபாலருக்கும் இருக்கின்ற அடிப்படை எண்ணம். இவ்வாறு செய்வதில் அலாதியான ஒரு சந்தோசம் ஆனால் அதனைச் செய்யவிடாது தடுப்பது குற்றம். அதனால் தான் குழந்தைகளின் வளர்ப்பு மற்றும் கற்பிக்கும் முறைகளில் கூட பிள்ளைகளின் உணர்வுகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. வெளிநாடுகள் அதனை செயற்படுத்தவும் செய்கிறது. ஆண்களுக்கு இருக்கும் விருப்பங்கள் ஆசைகள் பெண்களுக்கும் உண்டு என்பதை அதிகளவிலான ஆண்கள் நினைப்பதில்லை. இங்கே உங்கள் கணவருக்குத்தான் சில ஆலோசனைகள் வழங்கவேண்டியுள்ளது. உங்கள் தேவைகளை நிவர்த்திசெய்து அன்பாக இருக்கின்றார் என்றால் நல்ல கணவராக இருக்கின்றார். ஆனால் அவரை அறியாமலே உங்களை கூழ்நிலைக் கைதிபோல நடத்துகின்றார், சிலஆண்கள், வேலைக்குப் போவதால் பெண்கள் பல கஷ்டங்களை அனுபவிப்பர்கள் எனவும் சில விடயங்களை செய்ய முற்படும் போது பல சங்கடங்களை எதிர்நோக்க வேண்டும் எனவும் நினைப்பார்கள். மனைவியை நன்றாக வசதியாக வைத்திருக்கின்றேன் பிறகு எதற்காக இவைகளைச் செய்யவேண்டும், இந்த கஸ்டங்கள் உனக்குத் தேவை இல்லை எனக்கூறி ஒரு கட்டமைப்புக்குள் முடக்கிக்கொள்கிறார்கள். ஒரு பெண் தன் சொந்த முயற்சியில் உழைக்கவேண்டும் வேலைக்குப் போகவேண்டும் என எண்ணுவது பணத்தையும் வசதிகளையும் தாண்டி ஒரு வித தன்னம்பிக்கை உணர்வையும் தைரியத்தையும் கொடுக்கின்றது. அதனை தடை செய்வது என்பது தேவையற்ற ஒரு விடயமே, குடும்ப எல்லைக்குள் நின்றுகொண்டு இலக்குகளை அமைக்கும் போது அவரது பாதைக்கு வழிகாட்டுவதே நல்ல கணவனின் இயல்பு. அதனால் உங்கள் கணவர் இவ்விடயத்தில்




## நீங்கள் நலமா?

உங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினால் தான் உங்களால் சாதிக்கமுடியும்.
அவருடன் மனம் விட்டுப்பேசி உங்கள் நிலமையைப் புரிய வையுங்கள்,
அப்போது தான் உங்கள் உள்ளத்திலும் தெளிவு ஏற்படும்.

**கேள்வி:**

எனது மகளுக்கு ஆறுவயது. பாடசாலை செல்கின்றாள். முன்பள்ளியில் படிக்கும் போது மிகவும் சுறுசுறுப்பாக குதூகலமாக இருந்தாள். தற்போது பாடசாலையில் அவளது செயற்பாடுகள் மிகக்குறைவு. ஆசிரியர்கள் என்னை அழைத்து குழந்தை எதற்கும் பயப்படுகிறாள், எப்பொழுதும் நகம் கடித்த படி உள்ளதுடன் பாடங்களைக் கவனிப்பதில்லை என்று கூறுகின்றனர். எனது கணவர் அதிகமாக மது அருந்தி விட்டு வீட்டில் எப்போதும் பிரச்சினை செய்வார். அவளையும் பல தடவை அடித்திருக்கின்றார். இந்நிலை பல வருடங்களாக இருக்கின்றது. ஆனால் அவள் தற்பொழுது தான் இவ்வாறு நடந்துகொள்கின்றாள். இந்நிலையில் இருந்து எனது மகளை மீட்க நான் என்னசெய்யவேண்டும்?

**பதில்:**

பெற்றோர்களிடமிருந்து போதிக்கபடுவதை விட நடப்பவற்றை கவனித்தே குழந்தைகள் அதிகமாகக் கற்றுக்கொள்கின்றார்கள். பெற்றோர்கள் குழந்தைகளை நடத்தும் முறை குழந்தைகளின் பண்புகளில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பெற்றோர்களின் அன்றைய குழந்தைப் பருவ வாழ்க்கை முறையை ஒப்பிடும் போது, இன்றைய வாழ்க்கை முறையும், குடும்பம் என்ற சமூக நிறுவனமும் பற்பல மாற்றங்களைச் சந்தித்துள்ளன. குழந்தைகளின் ஐந்து ஆண்டுகளுக்குள் மூளையின் வளர்ச்சியின் வேகம் அதிகம். அவ்வயதுக்குள் குழந்தைகள் நன்கு சிந்திக்கும் திறனைப் பெற்று வளரவளர அத்திறனைத் தன் சுற்றுச்சூழல், தன்னைச் சார்ந்தோர் ஆகியோரிடமிருந்தும் பெற்றுக்கொள்கின்றனர். நிபுணர்களின் கணக்கின்படி, குழந்தைக்கு 4 வயதாக இருக்கும் போதே சிந்தனைத்திறனானது குழந்தைகளின் வளர்ச்சியில்; 50 சதவீதத்தை அடைந்துவிடுகிறது. 8 வயதில் 80 சதவீதத்தையும் 13 வயதில் 92 சதவீதத்தையும் அடைந்துவிடுகிறது. 17-19 வயதில் ஏறக்குறைய முழுமையான திறமைகள் வெளியாகிவிடுகின்றன, அல்லது வெளியாக ஆரம்பித்துவிடுகின்றன. இவ்வாறான காலங்களில் அவர்களின் மனதில் நல்ல விடயங்கள் பதிவாகவேண்டும். தன்னைச் சுற்றி நடக்கும் விடயங்களில் இருந்தே பலவற்றையும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். இதனால் பெற்றோர் டென்ஷனை தவிர்ப்பது அவசியம். குழந்தைகளின் மனம் மென்மையானது. பல பெற்றோர் தாம் விரும்பிய விடயம் நடக்காத போது மனஉளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

அத்தருணங்களில் தாங்கள் சொல்வதை குழந்தை அப்படியே கேட்கவேண்டும் என பெற்றோர் நினைப்பது தவறு. அடித்து துன்புறுத்துதல், குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டுதல், பள்ளியில் அதிக பாடச்சுமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குழந்தைகளை உளவியல் சிக்கலுக்கு ஆளாக்குகின்றது. பெற்றோர், தங்கள் பதற்றத்தை பிள்ளைகள் மீது காட்டக்கூடாது. இதன் விளைவாக சில குழந்தைகள் வழக்கத்துக்கு மாறாக அமைதியாகிவிடுகின்றனர். 6, 7 வயதிலேயே,நான் டென்ஷனா இருக்கேன்என்றுசொல்லி சில பெற்றோர் பிள்ளைகளை மிரளவைக்கின்றார்கள். எந்த விடயமும் குழந்தைகள் மனதில் பசுமரத்து ஆணிபோலப் பதிந்துவிடுகிறது. இவ்வாறான வயதில்தான் உங்கள் குழந்தையும் இருக்கின்றாள், தந்தை மது அருந்திவிட்டு வீட்டில் போடும் சண்டையால் குழந்தை மிகவும் பயந்துள்ளதுடன், தந்தை தன்னைஅடிக்கப்போகிறார், மிரட்டப்போகிறார் என்ற எண்ணம் மனதில் வியாபித்து இருக்கின்றது. உங்கள் கணவர் சாதாரணமாக இருக்கும் தருணத்தில் பிள்ளைகளின் மனநிலை பற்றி அமைதியாக எடுத்துச்சொல்லுங்கள். அதனைஅவர் செவிமடுக்காத பட்சத்தில் வேறு அமைதியான சூழலுக்கு சிறிது காலம் குழந்தையை மாற்றி வளர்க்கவேண்டும் குழந்தைகளுக்கு ஏற்படும் மன அழுத்தத்தை புரிந்துகொண்டு சிகிச்சை எடுக்காமல் விட்டால் அது அவர்களது வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிடும் என மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். நடத்தை மாற்றங்கள் மட்டுமே இதற்கு சரியான தீர்வாக அமையும். அதற்கான முயற்சிகளில் பெற்றோராகிய நீங்கள் இருவருமே இணைந்து செயற்படவேண்டும்.

**குறிப்பு: அன்பு வாசகர்களே, உங்கள் பிரச்சினைகளை எமக்கு எழுதி அனுப்பினால் உங்கள் விபரங்கள் வெளியிடப்படாது இரகசியம் பேணப்பட்டு உங்கள் கேள்விகளுக்கான ஆலோசனைகள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

திருமதி.தனுஷா சுதாகரன் [உளவியலாளர் - கண்டி]



- பசுமைத் தமிழன் -

# காளானின் மகத்துவம்

போசணை மிக்க உணவுவகைகளில் காளான் உணவுகள் மிகுந்த பங்களிப்பை வழங்குகின்றன. காளான்கள் எனப்படுபவை மனிதனது கண்களுக்கு வெளிப்படக்கூடிய அகாரிகசு (agaricus) எனும் ஒருவிதபங்கசுவின் கனியுடலங்களாகும். இவைகள் பல்வேறு வகைகளிலும் நிறங்களிலும் பல்வேறுமணத்துடனும் வேறுபட்டவடிவங்களிலும் காணப்பட்டாலும் குறிப்பிடக்கூடிய சிலவகைகாளான்களையேநாம் உணவிற்காகப் பயன்படுத்தமுடியும் என ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாகவைக்கோற் காளான்,சிப்பிக்காளான்,மொட்டுக்காளான் போன்றசிலவகைகளைமேலைநாடுகளில் உணவுக்காகப் பயன்படுத்திவருகின்றனர். இது போன்றே இலங்கையிலும் காளான்களை சிறந்த உணவுப் பொருளாகக் கருதிபயன்பாட்டில் சேர்த்துள்ளனர். இதன் பல்வேறுபயன்பாட்டினால் தற்போதுமுக்கியத்துவம் பெற்றுவருகின்றது.

அண்மைக்காலம் வரையாக இவைகளை ஒருகொழுப்புணவாககருதிவந்தனர். வாசனையும் சுவையுணர்வும் கொண்டகொழுப்புணவாகக் கருதப்பட்டகாளான்கள் புரதங்களைப் பிரதான கூறுகளாகக்கொண்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்றைய புதிய தொழிநுட்ப வளர்ச்சியாலும் பெருமளவு உற்பத்தித்திறன் முறைமைகளினாலும் இக்காளான் பயிர்ச்செய்கை

அறிமுகப்படுத்தப்பட்டதனால் பெருமளவில் உற்பத்திசெய்யப்பட்டு நியாயமானவிலையில் மக்களுக்குசந்தைப்படுத்தப்படுகின்றன. இவை பலபோசணை உள்ளடக்க சத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இவற்றில் உலர்வகைகாளான்களின் 35 வீதத்தையும் புதியவகைகாளானகளில்; 3-4 வீதத்தையும் புரதங்கள் உள்ளடக்குகின்றன. இவை பாலினதும் சோயா அவரை யினதும் புரதக்கொள்ளளவுக்குஈடானவையாகக் கருதப்படுகின்றன. பொதுவாககாளான்கள் ஏனைய காய்கறிகளைவிட இருமடங்கு புரதக் கொள்ளளவைக் கொண்டு காணப்படும். எனினும் ஏனைய பயிர்தாவரங்களுடன் ஒப்பிடும் போதுகாளான்களில் மிகக்குறைவான காபோவைதறேற்றே காணப்படுவதால் குறைவான கலோரியினையே வழங்குகின்றது.

இதனால் நீரிழிவுநோயாளர்களுக்கும் இருதய நோயாளர்களுக்கும் மிகச்சிறந்தஉணவாக இது சிபாரிசுசெய்யப்படுகின்றது. இது தவிரகனியுப்பு, போலிக் அமிலம், நார்ச்சத்துஎன்பனவும் காணப்படுகின்றன. சிலவகையானகாளான்களை நாட்டுப்புற வைத்தியங்களுக்கு ஆண்டாண்டு காலமாகப் பயன்படுத்திவருவதும் அதன் மூலம் பலநோய்களைக் குணமாக்குவதும் நடந்துகொண்டே உள்ளது.

பண்டைக்காலத்திலிருந்து அண்மைக்காலம் வரையிலாககாளான்கள் பற்றியதகவல்கள் மிகமுக்கியபோசணைச் சத்துக்களின் மூலகங்களாககாணப்பட்டுவருகின்றன. அவசியமானபுரதத்தின் மூலகங்களாகவும் கனியுப்பு, விற்றமின் ஆகியவற்றின் பதார்த்தங்களாகவும் இக்காளான்கள் காணப்படுகின்றன. இவை இலகுவாக உடலில் சமிபாடு அடைகின்றன. எனவேகாளான்களைக் கிரமமாக உண்ணும் மக்கள் பல்வேறுபட்ட நோய்களுக்கான எதிர்ப்புசக்தி கொண்டவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதுநம்பகமானஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது யாழ் குடாநாட்டில் மக்களிடையே காளான் உணவைப் பயன்படுத்தும் வழக்கம் அதிகரிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளிலும் விவசாயப் பண்ணைகளிலும் இவற்றின் கேள்வி அதிகரித்திருப்பதனையும் விவசாய விரிவாக்கத் துறையினரும் ஏனைய பலநிறுவனங்களும் காளான் உற்பத்தியில் முனைப்புடன் செயற்படுவதனையும் இதற்குசான்றாககொள்ளலாம்.




PRO
DIGITAL PRINTING
All Your Printing Needs
high Quality
printing
service
Digital Offset Printing
Graphic Designing
Personalized Gifts
Plastic Identity Cards
Digital Banner
Large format
Digital
Printing
indoor & outdoor
good quality banne
printing for you
A 50/54, Jampettah Street, Colombo - 13.
T 0112 447 399 E prodigitalprinting@ymail.com

ஆசிரியர்
தின
றப்பம்சம்
க்டோபர்
6

சிறப்பு நேர்காணல்



# செந்தமிழ் சொல்லருவி விரிவுரையாளர் ச.லலீசனின் கருத்துப்பகிர்வு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றும் ச.லலீசன் அரச கல்வித்துறையில் இருபது வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். இலங்கை ஆசிரிய சேவையில் ஓர் ஆசிரியராக, இலங்கை அதிபர் சேவையில் ஒரு பாடசா லையின் அதிபராகப் பணியாற்றி இன்று இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையில் கலாசாலையின் விரிவுரையாளராகப் பணியாற்றும் ச.லலீசன் அவர்களை ஆசிரியர் தினத்தையொட்டி ஒளிஅரசி நேயர்களுக்காகச் சந்தித்தோம்.

**உங்கள் பார்வையில் ஆசிரியத்துவம் என்பது எப்படி அமைகின்றது?**

ஆசிரியர் சார்ந்த அனைத்து விடயங்களையும்தான் ஆசிரியத்துவம் என்பதில் உள்ளடக்குகின்றோம். முக்கியமாக ஆசிரியருடைய கற்பித்தல் திறன்தான் ஆசிரியத்துவம் எனக் கருதி நின்றாலும் ஆசிரியர் ஒருவருடைய அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுடன் தொடர்புடைய கருத்தியலாகத்தான் ஆசிரியத்துவம் அமைந்திருக்கின்றது. ஆசிரியத்துவம் என்பதனால் இலட்சிய ஆசிரியர் ஒருவருக்குரிய குணப்பண்புகளே நோக்கப்படுகின்றன. அதாவது, ஒரு சமூகம் ஆசிரியர் ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றதோ அந்தப் பதத்தைச் சுட்டும் சொல்லாகத்தான் ஆசிரியத்துவம் என்பதை நோக்க முடியும்.

**ஒரு மாணவனின் பார்வையில் ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும்?**

இது சற்றுச் சிக்கலான கேள்வி. ஏனெனில், மாணவர்களில் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை அவர்களுள் பல்வகைமையை ஏற்படுத்துகின்றன. எனவே ஒவ்வொருவருடைய பார்வையிலும் ஆசிரியர் என்பவர் வெவ்வேறானவராகத்தான் தோற்றம் பெறுவார். ஒரு மாணவன் ஆசிரியர் நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என விரும்புவான். ஒருவன் தனது ஆசிரியர் நல்ல அழகாக உடுத்தி வரவேண்டும் என விரும்புவான். ஒருவன் தனது ஆசிரியரைச் சமூக முன்மாதிரியாக நோக்குவான். இதில் மாணவரது வயதுப் பருவமும் தங்கியிருக்கிறது. என்னதான் படித்த பெற்றோருடைய பிள்ளை என்றாலும் சிறுவயதுப் பிள்ளைகள் ஆசிரியர் சொல்வதுதான் சரி என நம்பிக்கை கொள்வர். எனவே அவர்களுக்குரிய முன்மாதிரியை ஆசிரியர் பேணவேண்டும். மாணவன் ஒருவன் எதிர்பார்க்கின்ற குணாதிசயங்களை ஆசிரியர் கொண்டிருக்கின்றபோது இயல்பாகவே ஆசிரியர் மீதான விருப்பு மாணவனிடம் ஏற்படுகின்றது. இது மாணவனின் வயது மட்டத்தில் தங்கியிருக்கின்றது. ஆனால் பொதுவாக ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் எனச் சொல்வதாயின் அதற்கெனத் தற்போது ஒழுக்கக்கோவை ஒன்று உள்ளது. அதன்படி இருக்கவேண்டும் என ஒரு வார்;த்தையில் பதிலளிக்கலாம்.

**நல்ல ஆசானின் கடமைகள் எவை எனக் கருதுகின்றீர்கள்?**

மாணவர்களை எதிர்காலச் சமூகத்திற்கு ஏற்றவாறு தயார்படுத்திவிடுவது. இங்கு பாடப்போதனை மாத்திரம் இடம்பெறுவதில்லை. வாழ்க்கைக்குரிய தேர்ச்சிகளையும் சவால் களையும் போதிக்கவேண்டும். இன்று கூட்டுக் குடும்பங்கள் கலைந்து கருக்குடும்ப வாழ்வு அதிகரித்துள்ளது. ஒரு காலத்தில் பாட்டா பாட்டி என ஆதரவு வழங்கி நின்றனர். இன்று பிள்ளை ஆதரவை வேண்டி நிற்கின்றது. எனவே ஆசிரியர் என்பவர் இடம்சார் பெற்றோராகக் (Loco Parent) கடமையாற்ற வேண்டியவரும் ஆகிறார்.

**இன்றைய காலத்தில் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளில் சற்றுத் தொய்வு காட்டுவதாகக் கூறுகின்றனரே. இக்கருத்துச் சரியானதா?**

உங்கள் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், முற்காலத்தை விட ஆசிரியரிடம் இருந்து சமூகம் எதிர்பார்க்கின்ற விடயங்களும் ஆசிரியர் நிறைவேற்ற வேண்டிய விடயங்களும் அதிகரித்துள்ளன. இப்படி வேலைச் சுமை அதிகரிக்கும்போது ஆசிரியர் என்பவர் ஒரு சராசரி மனிதன் என்கின்ற நிலையில் தொய்வு ஏற்பட வாய்ப்புண்டு. அப்போதிருந்த சமுதாய அமைப்பு மற்றும் அதன் எதிர்பார்க்கை வேறு. இப்போது இருக்கின்ற சமுதாய அமைப்பு மற்றும் அதன் எதிர்பார்க்கை வேறு. எனவே, இன்றுள்ள சமூகம் அதிகம் எதிர்பார்க்கின்றபோது தொய்வாகத் தென்படலாம்.

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?**

ஆசிரியர் தினம் என்பது ஒக்டோபர் 05 அல்லது 06 ஆம் திகதி மாத்திரம் அல்ல. (ஒக்டோபர் 05 சர்வதேச ஆசிரியர் தினம். ஒக்டோபர் 06 இலங்கையில் ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட தினம்) ஆனால், எந்த நாளும் ஆசிரியர் தினம் எனப்பிள்ளை கருதத்தக்க வகையில் எங்கள் நடைமுறைகள் மாறவேண்டும். பிள்ளை தனது முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க வகையில் நமது நடை, உடை, பாவனைகள் அமைந்திருக்க வேண்டும். வசதியீனங்களை வாய்ப்பாகக் கருதிச் சோம்பியிருக்காமல் இருக்கின்ற வளங்களை உச்சமாகப் பயன்படுத்திக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை உச்சமாக முன்னெடுக்க வேண்டும்.

**ஒரு நாட்டின் எழுச்சி ஆசிரியரின் கைகளில் தங்கியுள்ளது என்பது பற்றி...**

நீங்கள் குறிப்பிடுவது மறுக்கமுடியாத உண்மை. ஆசிரியன்தான் அனைத்திற்கும் வடிவம் கொடுக்கின்றான். இன்று அறிவுப் பொருளாதாரம், அறிவுசார் உலகம் என்றெல்லாம் சொல்கின்றோம். உயர்மட்டத்தில் கண்ணாடி அறைகளுள் திட்டமிடப்பட்டவற்றையும் சரியாக வகுப்பறையில் மாணவச் செல்வங்களிடம் வழங்கும் முகவர் ஆசிரியரே. எனவே, நாட்டின் எழுச்சி ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. உலகில் அரசியல் தலைவர்களாகப் பல ஆசிரியர்கள் எழுச்சி பெற்றுள்ளனர். இது இலங்கைக்கும் பொருந்தும். இதைவிட ஆசிரியர் என்று வகுப்பறையில் கற்பிப்பவனை மாத்திரம் சொல்வதில்லைத்தானே. நூலை ஆக்கியவனையும் ஆசிரியர் என்றுதானே குறிப்பிடுகின்றோம். பத்திரிகையின் கர்த்தாவையும் ஆசிரியர் என்றுதானே குறிப்பிடுகின்றோம். எனவே, எழுச்சியை ஏற்படுத்துவதில் பிரதான பங்கு ஆசிரியரிடம் இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

**இன்றைய இளைஞர், யுவதிகளின் மனநிலை மாற்றத்தின் அடிப்படைக் காரணி எது எனக் கருதுகின்றீர்கள்?**

மூன்று காரணிகளைக் குறிப்பிட முடியும். ஒன்று நாட்டுச் சூழலால் நம்மிடையே ஏற்பட்ட குடும்பச் சிதைவு (கருக்குடும்ப வாழ்க்கை). மற்றையது எங்களிடம் வந்துள்ள நவீனத்துவச் சாதனங்கள் குறிப்பாகத் தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் ஊடகங்கள். இதைவிடத் தான் உழைக்காமல் வேறு மார்க்கங்களில் கிடைக்கும் பணம்.

**இளம் தலைமுறையினருக்குக் கூறவிரும்புவது...**

அப்துல் கலாம் குறிப்பிட்ட வாசகத்தைத்தான் நானும் மீள நினைவூட்டுகின்றேன். கனவு காணுங்கள் கனவு காணுங்கள், நீ தூங்கும்போது காண்பது அல்லக் கனவு. உன்னைத் தூங்கவிடாமல் செய்கிறது எதுவோ அதுவே கனவு. எல்லோரும் கனவு காண்கின்றனர்தான்.

ஆனால், அந்தக் கணத்துடன் அதை மறந்துவிடுகின்றனர். எனவே கண்ட இலட்சியக் கனவு மனதுள் என்றும் நிறைந்திருக்க வேண்டும். அதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சை நாளில் இந்தளவு நாளும் என்ன செய்தோம் என உணர்ச்சி வசப்படுவதும் அடுத்த பரீட்சையில் பார்ப்போம் என உறுதி எடுப்பதும் பின் சில நாட்களில் அந்த எண்ணத்தை மறந்துவிடுவதும் தோல்விக்கான காரணமாகும்.

**தலைமுறைகடந்தும் மாறாதிருக்கவேண்டிய விடயங்கள்பற்றிக் கூறமுடியுமா?**


தன்னைப்போலப் பிறரையும் நேசிப்பது. பண்பாட்டு அடையாளங்களைப் பேணுவது இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்லப்போனால் உயர்ந்த விழுமியங்களை பேணும் பண்பில் மாற்றம் ஏற்படக்கூடாது. ஒரு காலத்தில் வீட்டிற்கு வந்தவருக்குப் பழந்தண்ணீர் கொடுத்தனர் நம்முன்னோர். நாங்கள் இன்று தேநீர் கொடுக்கின்றோம். எனவே, விருந்தோம்பல் என்ற பண்பாடு மாறக்கூடாது. இங்கு பண்பாட்டின் பிரகாரம் பழந்தண்ணீர்தான் கொடுக்கவேண்டும் என யாரவது நினைத்தால் அது அறிவீனம்.

**போரின் பிற்பாடான அதிகரித்துள்ள மனித உரிமைச் செயற்பாடுகள் மாணவர்களின் வன்முறைக் கலாசாரம் அதிகரிப்பதற்கான ஒரு காரணம் என அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இது பற்றி கலாசாலை ஒன்றின் பிரதி அதிபராக, ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் கல்வியாளராக நீங்கள் கூறுவது யாது?**

இது ஓர் அபத்தமான சூழல் என்றே கருதுகின்றேன். மனித உரிமைகளை மதிக்க வேண்டும் இதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. ஆனால் ஆசிரியர்கள் கண்டிப்பானவர்களாக நடந்து கொண்ட காலம் ஒன்றிருந்தது. இப்போ சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகளின் காரணமாக மென்போக்குடையவர்களாக தங்கள் நடத்தைக் கோலத்தை மாற்றிக் கொண்டுள்ளனர் இந்த நிலைமாற்றத்தைப் பலவீனமாகக் கருதும் மாணவர் சிலரை அவதானிக்க முடிகின்றது. கடந்த மாதம் நடந்த பிரபல தனியார் பெண்கள் பாடசாலைக் களேபரம் ஒன்றின் போது வேண்டுமென்றே சில மாணவிகள் தமது ஆசிரியர் ஒருவரைப் போய் இடித்து தாம் விழுவது போல் விழுந்து அவர் அடித்துவிட்டார் எனப் பிரச்சினையை உருவாக்கித் திசை திருப்ப முயன்றதைப் பலரும் இணையங்களில் உலாவிய காணொலியில் பார்த்திருப்பர். தற்போது மனித உரிமைச் செயற்பாடுகள் முதன்மைப்படுத்தப்படும் சூழலில் - இந்த நிலைமாற்ற காலத்தில் இப்படியான வன்முறை அதிகரிப்புக்களுக்கும் இடம் இருக்கின்றது. எனவே தரமான கல்வி மூலம் தான் இப்பிரச்சினையை வெற்றி கொள்ளலாம். தரமான கல்வி என நான் இங்கு குறிப்பிடுவது பாடத்தில் பெறும் புள்ளிகள் மாத்திரம் அல்ல. உயர்ந்த மனிதாயப் பண்புகளை வளர்ப்பது கல்வியால் சாத்தியமாக்கப்பட வேண்டும்.

**சாதாரணதரம், உயர்தரம் சார்ந்த கற்கை நெறிகள் தொடர்பாக இலங்கையின் தற்போதைய கல்வித்திட்டம் எதிர்கால தொழில் வளத் திற்கு ஏற்றவாறு உள்ளதா?**

தற்போது தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தொழில் உலகுக்குத் தயார்படுத்துவதில் தேக்கநிலையே காணப்படுகின்றது. பிள்ளைகள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கேற்பது குறைவு. சாரணர் இயக்கத்திற்கு ஆள்தேடுவது இன்று பாட சாலைகளில் முயற்கொம்பாகவுள்ளது. இவற்றிற்கு முன்வராமல் எப்படித் தலைமைத்துவத்தை வளர்க்க முடியும். வெறுமனே தலைமைத்துவம் பற்றி எழுதிப்படித்துவிட்டால் சரியாகுமா? வெறும் புத்தகப்பூச்சிகளாக இருந்து பாடசாலையிலும் தனியார் கல்வியகத்திலும் புறோயிலர் கோழி வளர்க்கப்பட்டதைப்போல பிள்ளைகளை ஊட்டி வளர்க்கின்றோம். பின் உயர்கல்விக்குப் புகுந்த அந்தப் பிள்ளைகளிடம் பிரயோகத்திறன் இல்லாததைக் கண்டு வேதனைப்படுகின்றோம்.



(ஜனதன், கொழும்பு)




முதியோர்-சிறுவர் தின சிறப்பு கட்டுரை

# ஊஞ்சலாடும் உணர்வுகள்

மிகப்பெரிய விடயங்களை அழிப்பதற்கு மிகச்சிறியவிடயங்கள் தான் காரணமாகின்றன, மலைதடுக்கிநாம் ஒருபோதும் விழுவதில்லை. கல் தடுக்கித்தான் விழுகின்றோம்

இன்றைய உலகம் நவீனமயமாகவும் அவசரமானதாகவும் மாறிவிட்டது. ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனிதர்களே அதிகமாக உள்ளனர். இந்த அவசரயுகத்தில் தனிமனித வாழ்வும் நெரிபட்டுகறைபட்டு நிற்கின்றது. கோபம் என்பது இன்றையவாழ்வில் அனைவரையும் ஆட்டிப்படைக்கும் ஒரு விடயமாக மாறிவிட்டது. கோபம் என்பதற்கு சிறந்த ஒரு வரைவிக்கணம் கூறப்படுகின்றது,யாரோசெய்யும் தவறுக்குநமக்குநாமேகொடுக்கும் தண்டனைஎனக்கூறுவர். உறவுகள் என்றவளமும் அதன் புனிதமும் கூட எமக்கு அருகிவிட்டது. அதனை மதிக்கவும் போற்றவும் கூட தவறிவிடுகின்றோம். அழகான உதாரணம் ஒன்றை பார்ப்போம்.

ராஜா மிகப்பெரிய செல்வந்தர். கார் வாங்கவேண்டும் என்பது அவரது கனவுகளில் ஒன்றாக இருந்தது. அவர் நினைத்தபடியே கறுப்பு நிறக்கார் ஒன்றைவாங்கினார். அதனைப் பார்க்க பார்க்க அவருக்குப் பெருமையாக இருந்தது. தனது வாழ்நாள் கனவை நனவாக்கி விட்டமகிழ்ச்சியில் திழைத்தார். தனது நண்பாகள் அனைவருக்கும் கூறிப்பெருமிதப்பட்டார். உறவினர்களிடமும் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார். ஒருநாள் ஓடி மறைந்து விட்டது அந்தக்கார் வந்து.

மறுநாள் காலையில் தேநீர் அருந்தியபடியே தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது தூரத்தில் தெரிந்தகாட்சி அவரைக் கோபப்படுத்தியது. அவசரமாக அவ்விடத்திற்கு விரைந்தார். அவரது நான் கேவயதான கடைசி மகள் அவர் ஆசையாக முதல் நாள் வாங்கிய காரில் கல்லினால் ஏதோகிறிக்கொண்டிருந்தாள். கோபம் அவரது கண்ணை மறைத்தது, ஓடிச்சென்று மகளின் கையில் இருந்தகல்லைப் பறித்து அதனாலேயே அவளது கையில் ஓங்கிகுத்தினார். குழந்தைவீரிட்டு அழுதது. அப்போதுதான, தான் புரிந்தமடத்தனம் அவருக்குப் புரிந்தது.

மகளைவைத்தியசாலையில் சென்றுபார்த்த அவருக்கு தாங்க முடியாத துயரம் நெஞ்சை அடைத்தது. அதைவிடமகள் கேட்ட அந்தக் கேள்வி அவரைமிகவும் பாதித்தது. கையெல்லாம் பண்டேஜால் கட்டப்பட்டிருந்த அவரது சின்னமகள், அப்பா, எப்ப எனக்கு புதுக்கைகிடைக்கும்? என்றபோது அவரால் தாங்கவே முடியவில்லை. எதுவுமே அறியாத பச்சைக் குழந்தையை இவ்வாறு துன்புறுத்தி

விட்டேனே என எண்ணினார். மறுநாள் காலையில் எழுந்துதோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தவரின் கண்களில் அவரது கார் தென்பட்டது. இதனால் தானே இந்தப் பிரச்சனையே வந்தது என எண்ணியவர் கோபத்துடன் காரை உதைக்கச் சென்றவேளை கண்ணில் பட்ட அந்தவரிகள் அளவில்லாத திகைப்பைக் கொடுத்தது. இதுதான் அந்தவரி, I love you dad எவ்வளவு ஆழமானவரிகள் இவை. இப்படி எழுதியதற்காகவா என் மகளை அடித்தேன் என எண்ணியவரின் உள்ளம் அவரைச் சுட்டது. அவரது மனச்சாட்சி அவரை குத்திக்கிழித்தது. நாட்கள் கடந்துமகள் வீடுதிரும்பி நன்றாக நடமாடத் தொடங்கிவிட்டபோதும் அப்பாவின் மனம் மட்டும் ஆறவேயில்லை.

இந்த உதாரணம் அப்பாவிற்கானது மட்டுமல்ல, அம்மாக்களுக்கும் பொருந்தும். வேலைப்பழு, வறுமை, சீரியல்களின் மோகம் எனபவற்றால் அவர்களும் இவ்வாறு நடந்துகொள்கின்றனர். குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். நாம் கோபத்தில் அடித்துவிட்டாலும் அடுத்த நிமிடம் அதைமறந்து விட்டு எம்முடன் உறவாடத் தொடங்கி விடுவார்கள். ஒருவிடயத்தை நாம் மனதில் கொள்ளவேண்டும். தன்னை தண்டிப்பவர்களையும் மன்னிக்கும் குணம் குழந்தைகளுக்கே உண்டு.

குழந்தைகளைப் போலவே முதியோரும் எம்மால் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் தான். அவர்கள் எமது முதுசங்கள்.

மேற்கூறப்பட்ட அதே அப்பாவின் மகள் வளர்ந்து பெரியவளாகி திருமணவயதை அடைந்தாள். அவளுக்கு முதல் பிறந்தவர்கள் இருவரும் திருமணம் செய்துவெளிநாடு சென்று விட்டனர். தாயும் இறந்து விடதந்தை மட்டுமே இருந்தார். அவளுக்கும் பலவெளிநாட்டு வரன்கள் வந்தது. எல்லாவற்றையும் பிடிக்கவில்லை எனக்கூறிதட்டிக்கழித்தாள். ஒருகட்டத்தில் சலிப்படைந்த தந்தை மகளிடம் என்னம்மா நீ, இப்பிடியே சொன்னா என்ன அர்த்தம்? ஏன் இப்பிடிசெய்யிறாய் என்றார்.

அந்தமகள் சொன்னாள், அப்பா நானும் கலயாணம் பண்ணி வெளிநாடு போனா உங்களையார் பார்த்துக் கொள்வது?

அதனால் என்ன, இப்பதான் முதியோர் இல்லங்கள் அதிகம் இருக்கே, காசு இருந்தாசரி, ஏதோ இன்னும் கொஞ்சகாலம் வாழ்ந்தாசரி அப்பா, எங்களை நீங்கவிடுதியில விட்டு வளர்க்கவில்லையே, நாங்கள் மட்டும் எப்படி உங்களை முதியோர் இல்லத்தில் விடுவது என்றாள். மகளே, எனக்காக நீ உன் எதிர்காலத்தைவீணாக்கவேண்டாம். உன் அண்ணா, அக்காவுடன் சென்று வாழ்வது தான் உனக்கு நல்லது என்ற தந்தையிடம் அண்ணாவும் அக்காவும் தான் யோசிக்காமல் வெளிநாட்டிற்கு வரச் சொல்கின்றார்கள் என்றால் நானும் சம்மதித்து விடுவேனா, அம்மாவும் இல்லாமல் உங்களை இப்படிவிட்டுச் செல்ல என்னால் முடியாது அப்பா. எனக்கு உள்ளூரிலேயே வரன் பாருங்கள், திருமணம் செய்துகொள்கின்றேன், அதுவும் நீங்கள் என்னோடு இருப்பதற்கு அவர் சம்மதித்தால் மட்டும் என்றாள். சில மாதங்களில் அவளது ஆசைப்படியே திருமணமும் நடந்தது. இந்த மகளைப் போல வீட்டில் ஒரு வராவது நினைத்தால் நிச்சயம் முதியோர் இல்லங்கள் குறைந்துவிடும் என்பது உறுதி. அன்பானவர்களே, நாம் இன்று தொலைக்கக் கூடாதவற்றைத் தொலைத்து விட்டும் தொலைக்க வேண்டியவற்றை இழுத்துவைத்துக் கொண்டும் உள்ளோம். அதிலிருந்து விடுபட்டு நல்லதொரு எதிர்காலத்தை எமது சந்ததிக்கு வழங்க அனைவரும் ஒன்றிணைவோம்.

(ஜன(ா)ரஞ்சகன், கொழும்பு)



# பாட்டி வைத்தியம்

கொள்ளுக்காய்ச் செடி, வேளைச் செடி வேர், மிளகு ஆகியவற்றைச் சேர்த்து, கசாயம் செய்து சாப்பிட, கல்லீரல் வீக்கம் குறையும்.

மூட்டு வலியா? தேங்காய் எண்ணெயில் எலுமிச்சைச் சாறைச் சேர்த்துக் கொதிக்கவிட்டு ஆறியபின் மூட்டுக்களில் தேய்த்தால் நிவாரணம் கிடைக்கும்.

அகத்யதிக்கீரையை சூப்செய்து, அடிக்கடி குடித்து வந்தால், கண்ணில் நீர் வடிதல் நோய் குணமாகும்.



பொன்னாங்கண்ணி கீரையை வேக வைத்து, வெண்ணெய் சேர்த்துக் கடைந்து சாப்பிட்டு வந்தால், கண்பாரவை தெளிவடையும்.

வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும் கலந்து குடித்துவிடுங்கள். சிறிது ரேத்திலேயே குணம் தெரியும்

கர்ப்பிணிப் பெண்கள் அடிக்கடி இளநீர், தர்ப்பூசணி பழம் ஆகியவை சாப்பிட்டால், குழந்தை வெளுப்பாகப் பிறக்கும். அழகாகவும் இருக்கும்.

நன்றி முகநூல் - கமலா சரஸ்வதி






இம்மாத

# பென்சில் ஓவியம்

by YOGA





மனோரமா (26 மே 1943, மன்னார்குடி, தமிழ்நாடு, இந்தியா) தென்னிந்தியத் திரைப்பட நடிகையாவார். அதிகளவு நகைச்சுவைக் கதாபாத்திரங்களில் நடித்தவர். 1000 திரை படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். இவர் தமிழ்த் திரையுலகினராலும் தமிழ்த் திரைப்பட ரசிகர்களாலும் ஆச்சி, என அன்போடு அழைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

10 அம் திகதி ஒக்டோபர் 2015 இல் இவர் மாரடைப்பால் இவ்வுலகைவிட்டு பிரிந்தார். இவர் தனது நடிப்பு திறமையினால் உலகத்தமிழர் அனை வரது மனங்களிலும் நீங்க இடம் பிடித்துள்ளார்.


Call: 075 441 9019
yogendrankumarasingham
Email: yoganads@gmail.com


(26 ஆம் பக்க ஆங்கிலக்கதைக்கான கருத்து)

# புத்திசாலியான நீதவான்

confuse : குழப்பமடைதல்
silent : அமைதி
quarrel : சண்டை
thought : யோசித்தார்
believe : நம்பிக்கை
brought : எடுத்துவருதல்

இரு பெண்கள் மன்னர் சொலமன் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் இருவரும் குழந்தையொன்று யாரிற்கு சொந்தம் என வாதிட்டுக்கொண்டிருந்தனர். இரு பெண்களும் அந்த குழந்தைக்கு தானே தாய் என வாதிட்டனர். ஒரு பெண் மன்னனிடம் நானே அந்த குழந்தையின் தாய் என தெரிவித்தார். மற்றைய பெண் மன்னரே நீ ங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ இது என்னுடைய குழந்தை என்றார். மன்னர் குழப்பமடைந்தார், ஆழ்ந்த யோசனையின் பின்னர் அவர் நான் குழந்தையை இரண்டு துண்டாக வெட்டி இருவரிடமும் தருகிறேன் என்றார், அதனை கேட்ட ஒரு பெண் மௌனமாக இருந்தாள், மற்றைய பெண் கதறியழ தொடங்கினாள். மன்னரே, அவள் குழந்தையை வைத்துக்கொள்ளட்டும், எனக்கு குழந்தை உயிருடன் இருக்கவேண்டும் என்றாள், மன்னர் அழுதுகதறிய பெண்ணிடம் குழந்தையை வழங்கினார்.

**உண்மை எப்போதும் வெற்றிபெறும்**



கந்தர்மடம் இந்துசமய பேரவையும் ஒளிஅரசியும் இணைந்து நடாத்திய திருமுறை, அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் கடந்த மாதம் நல்லூர் ஆலய முன்றலில் தேர்த்திருவிழா அன்று நடைபெற்றது. இவர்களுக்கான பரிசில்களை உதயன், சுடரொளி, ஒளிஅரசி குழுமத்தலைவரும் யாழ். பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஈ.சரவணபவன் வழங்கிவைத்தார்.

சுடர் ஒளி, ஒளிஅரசி, புலமைச்சுடர் குழுமத்தில் கடமை புரியும் காட்டூன் கலைஞர் சுப்பைய்யா ஜெயபாலன் அண்மையில் கண்டியில் மூன்று நாட்கள் கோலாகலமாக நடந்த விருது வழங்கும் நிகழ்வில் 'மக்கள் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ் விருதுபெற்ற ஒரே ஒரு தமிழ் பத்திரிகை காட்டூன் கலைஞர் இவர் ஆவார். கடந்த 47 வருடங்களாக காட்டூன் கலைஞராக கடமையாற்றும் இவர் பல உயர் விருதுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரை பாராட்டி வாழ்த்து தெரிவிப்பதில் ஒளிஅரசி மகிழ்வடைகின்றாள். இவருடன் உரையாடி இவரது அனுபவங்களை பகிர்ந்துகொள்ள 072 358 8982 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.





வவுனியா தமிழ் மாமன்றத்தின் ஆண்டு விழா தமிழ் மாருதம் 2016. கடந்த செப்டம்பர் 3, 4 ஆம் திகதிகளில் வவு/ நகரசபை கலாச ார மண்டபத்தில் பெருந்திரளானோரின் முன்பாக அரங்கேறியது.



(அருள்மதி வவுனியா.)





**Happy birthday**



கனிநிலா
2016.09.24
மீசாலை



தஸ்மிர் அகமட்
2016.09.01
திருகோணமலை



முகமட் றணத்
2016.09.09
சோனகவாடி





வவுனியூர் இரா உதயணனின் நூலறிமுகம். கடந்த 12. 9. 2016 இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்.. கல்லூரியின் பீடாதிபதி திரு கு.சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்றது. இரண்டு நூல்களுக்கான அறிமுகத்தினை கல்லூரியின் தமிழ் மன்றம் ஒழுங்கு படுத்தியிருந்தது. வலியின் சுமைகள் எனும் நாவலானது தமிழ் மொழியிலிருந்து சிங்களம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுமிருக்கிறது. அத்துடன் வன்னி வலி எனும் சிறுகதைத் தொகுப்புமாக இரண்டு நூல்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



வே. முல்லைதீபன்




# எது சந்தோஷம்?

தருவது

சுவாமி – சுகபோதானந்தா

ஸூஃபி இலக்கியத்தின் ஒரு முக்கிய கதாபாத்திரமான முல்லா நஸ்ருதீன் ஒருநாள் சோகமாக உட்கார்ந்திருந்தார். முல்லாவைப் பார்க்க வந்திருந்த நெருங்கிய சிநேகிதன், ''ஏன் சோகமா இருக்கிறாய்?'' என்று கேட்க, முல்லா அழ ஆரம்பித்துவிட்டார். ''என் மாமா தன் பெயரிலிருந்த சொத்துகளை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு போன மாசம் இறந்துவிட்டார். அதை நினைத்தேன்.... அழுகிறேன்.'' என்றார் முல்லா.

'உன் மாமாவை எனக்குத் தெரியும். அவருக்கு எண்பது வயதாயிற்றரே. மரணம் இயற்கையானதுதானே அதற்கென்ன இத்தனை பெரிய சோகம்? உண்மையில் பார்த்தால் அவரது திரண்ட சொத்து கிடைத்ததற்காக நீ சந்தோஷமாகத்தான் இருக்கவேண்டும்'' என்று முல்லாவுக்கு நண்பன் ஆறுதல் சொல்ல முயன்றான். முல்லாவோ, ''என் சோகம் உனக்குத் தெரியாது நண்பா. போன வாரம்தான் என் சித்தப்பா என் பெயரில் ஒரு லட்ச ரூபா சொத்துகளை எழுதி வைத்துவிட்டுச் செத்துப்போனார்'' என்று சொல்லிவிட்டு இன்னும் பெரிதாகச் சத்தம்போட்டு அழத்தொடங்கினார். நண்பனுக்குக் குழப்பம். ''உன் சித்தப்பாவையும் எனக்குத் தெரியுமே.... அவருக்கு எண்பத்தைந்து வயது. பணம் வந்ததை நினைத்துச் சந்தோஷப்படாமல் முட்டாளைப்போல இப்படி அழுகிறாயே?'' என்று நண்பன் எரிச்சலுடன் கேட்டான். ''என் சோகம் இன்னும் அதிகம். எனது நூறு வயது தாத்தா இரண்டு இலட்ச ரூபாவுக்கு மேலே என் பெயரில் சொத்து எழுதி வைத்துவிட்டு நேற்று இறந்துவிட்டார்'' என்றார் முல்லா.

வெறுத்துப்போன நண்பன், ''எனக்குப் புரியவில்லை. நீ ஏன்தான் அழுகிறாய்?'' என்றான்.

முல்லா கண்களைத் துடைத்தபடியே சொன்னார். ''செல்வந்தர்களான என் மாமா, சித்தப்பா, தாத்தா மூவருமே இறந்துவிட்டார்கள். இனிமேல் என் பேரில் சொத்து எழுதி வைத்துவிட்டு சாக உறவினர்கள் எவருமே இல்லையே..''

மிக முக்கியான ஒரு கருத்தை உணர்த்துவதற்காகச் சொல்லப்படும் கதைதான் இது. சந்தோஷத்துக்கும் திருப்திக்கும் எல்லை நாம் வரையறுத்துக்கொள்வதில்தான் இருக்கிறது. எல்லைகளை நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் விரிவடையச் செய்துகொண்டே போனால் எந்தச் சந்தோஷமும் நமக்கு நிம்மதி தரக்கூடியதாக இருக்காது. ஓட்டைவாளியில் தண்ணீர் ஊற்றினால் எப்படி நிற்காதோ, அதேமாதிரி இதுபோல திருப்தியற்ற மனம் உடையவர்களுக்கு எத்தனை சந்தோஷம் வந்தாலும் அது தங்காது. அவர்களின் மனம் சோகமாகவே இருக்கும். தன்னிடம் இல்லாததை நினைத்தே கஷ்டப்படும். வாளியில் உள்ள ஓட்டையை அடைத்துவிட்டால் ஓர் அளவு தண்ணீர் ஊற்றியதும் நிரம்பிவிடுவதுபோல, மனதில் இருக்கும் கரும் புள்ளிகளை (Blind spots) அழித்துவிட்டால் மகிழ்ச்சி நிரம்பும். ''இது கிடைத்தால்தான் என் மனசு சந்தோஷப்படும்'' என்று மண்டைக்குள் சில

## மனசே ரிலாக்ஸ்

விஷயங்களை நம் மனது ஏற்றுக்கொள்கிறது. இன்றைய இளைஞர்கள் சந்தோஷம் என்றால் அமெரிக்கா என்று அர்த்தம் பண்ணிக்கொள்வதையும் நாம் பார்க்கிறோம். அவர்களைப் பொறுத்தவரை அமெரிக்கா போக விஸா கிடைத்தால் அதுதான் சந்தோஷம். அதாவது, ''விஸா கிடைக்கும்வரை நான் சந்தோஷப்படுவதை ஒத்திவைக்கிறேன்'' என்று அர்த்தம். ஆம். வருங்காலத்தில் நடக்கப்போகும் ஒரு விஷயம் மட்டுமே சந்தோஷம் கொடுக்கப்போகிறது என்று சொல்லிக்கொண்டு நிகழ்காலத்தில் கிடைக்கும் சந்தோஷங்களை ஓட்டை வாளியைப்போல இவர்கள் கீழே விட்டுவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட 'பிளைண்ட் ஸ்பாட்' மனமுடைய இளைஞர்களுக்கு அமெரிக்கா போக விஸா கிடைத்தாலும் சந்தோஷமாக இருக்கமுடியாது. விஸா கிடைத்த மறுகணமே அமெரிக்காவில் வேலை கிடைத்தால்தான் என் மனசு சந்தோஷப்படும் என்று ஏதாவது இன்னொரு காரணத்தைச் சொல்லி இவர்களே தங்களின் சந்தோஷங்களை மீண்டும் ஒத்திப்போட்டுவிடுவார்கள்.

சரி. அமெரிக்காவில் வேலையும் கிடைத்துவிட்டது. அப்போதாவது சந்தோஷப்படுவார்களா? 'கிரீன் கார்ட் கிடைக்கும்வரை சந்தோஷம் இல்லை' என்பார்கள். அதுவும் கிடைத்துவிட்டால் 'அமெரிக்கா வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை. அப்பா, அம்மா, அக்கா, தங்கை, மாமா, உறவினர்கள், உற்றார்கள், நண்பர்கள் ஆகிய எல்லோரும் இருக்கும் இந்தியாவில்தான் சந்தோஷம் இருக்கிறது'' என்று சொல்லி மீண்டும் தங்களின் சந்தோஷத்தை ஒத்திப்போடுட்டுவிடுவார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் சந்தோஷம் என்பது 'கடைகளில் விற்பனையாகிறது' என்ற கருத்து உடையவர்கள். ஆம். அவர்களுக்கு சிகரெட், மது இதில்தான் சந்தோஷம். இவர்களை பார்க்கும்போது ரமண மகிரிஷி சொன்ன கதைதான் நினைவுக்கு வருகிறது.

வசதியான மனிதரின் வீட்டில் வளர்க்கப்பட்ட அந்த நாய்க்கு வேளா வேளைக்குக் கிடைத்த சாப்பாட்டில் திருப்தி இல்லை. அந்த வீட்டைவிட்டு வெளியேறி ரோட்டுக்கு வந்து தனக்குப் பிடித்த உணவைத் தேட ஆரம்பித்தது. நாள் கணக்கில் அலைந்து வாடியதுதான் மிச்சம். ரோட்டில் ஏற்கனவே திரிந்துகொண்டிருந்த நாய்களுடன் சண்டைபோட்டுத் தெருவோர எச்சி லையைக்கூடக் கைப்பற்ற முடியவில்லை.

கடைசியாக அதற்குக் காய்ந்துபோன மாட்டு எலும்புத் துண்டு ஒன்று கிடைத்தது. வெயிலில் பல மாதங்கள் காய்ந்த எலும்பு என்பதால் அதிலிருந்த அத்தனை சுவையும் வற்றிப்போய் கல்போல ஆகியிருந்தது. ஆனாலும் அது தெரியாத நாய், அந்த எலும்புக் கஷ்டப்பட்டுக் கடித்தது. நாயின் வாயில் கீறல்கள் ஏற்பட்டு இரத்தம் கசிந்தது. தன் இரத்தத்தை ருசித்த நாயோ, இரத்தம் எலும்பிலிருந்துதான் வருகிறது என்று எண்ணி இன்னும் ஆவேசமாக எலும்பைக் கடிக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த வழிப்போக்கர் ஒருவர், ''மட நாயே! அது காய்ந்துபோன எலும்பு. நீ சுவைக்கும் இரத்தம் எலும்பிலிருந்து வெளிப்படும் இரத்தம் இல்லை. உன் வாயிலிருந்து கசியும் இரத்தம்'' என்று சொலல... வழிப்போக்கரைப் பார்த்து நாய் ஏளனமாகச் சிரித்துவிட்டுச் சொன்னது,

''இத்தனை நாள்வரை - இந்த எலும்புத் துண்டைக் கடிக்கும்வரை - என் நாக்கு இரத்தம் சுவைத்ததில்லை. இதைக் கடிக்க ஆரம்பித்த பிறகுதான் இரத்தத்தின் சுவை தெரிய ஆரம்பித்தது. ஆகவே, இந்த இரத்தம் எலும்புத் துண்டிலிருந்துதான் எனக்குக் கிடைக்கிறது. என்னை நீ ஏமாற்ற முடியாது.'' என்று சொல்லி, காய்ந்த எலும்பை மேலும் ஆவேசமாகக் கடிக்க ஆரம்பித்தது. தன்னையே அழித்து ஏமாற்றி கிடைக்கிற தற்காலிக சந்தோஷங்களைத் தேடி ஓடும் இப்படிப்பட்ட மனிதர்களும் இருக்கிறார்கள். இதைத்தான் Dog's logic என்று சொல்கிறோம்.

சிந்தித்துப் பாருங்கள். காய்ந்துபோன எலும்பைக் கடித்த நாய் அடைந்த சந்தோஷத்துக்கும் கிகரெட் மதுபோன்ற பொருட்களால் தன்னையே அழித்துக்கொண்டு சிலர் அடையும் சந்தோஷத்துக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?



# TASTER'S

# ரேஸ்ரர்ஸ்




மொத்த விற்பனை நிலையங்களுக்கும், உணவகங்களுக்கும் மொத்த கொள்வனவாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுவதுடன் தங்களது இடங்களுக்கு வந்து விநியோகிக்கப்படும்

மொத்த கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
கொள்வனவு தொடர்பாக
**024 2052141**
**076 7052141**
என்ற தொலைபேசி
இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

## பிட்டு, இடியப்ப மா

### "ரேஸ்ரர்ஸ்" இடியப்பமாவின் சிறப்பம்சங்கள்!

* மிருதுவானது சுவையானது.
* சுடுநீர் அவசியமில்லை.
* எமது பாரம்பரிய முறைப்படியே உற்பத்தி செய்யப்படுகின்றது.
* இதற்கான மூலப்பொருட்கள் 3000 க்கு மேற்பட்ட உள்ளூர் விவசாயிகளிடமிருந்தே பெறப்படுகின்றது.
* தரக்கட்டுப்பாட்டு நியமங்களுக்கமைவாகவே தயாரிக்கப்படுகின்றது.
* எவ்விதமான இரசாயன சேர்க்கையும் இல்லை.

**தரமான சுவையான பாரம்பரிய குண நலன்களை கொண்ட உற்பத்தியாக சர்வதேச ரீதியில் பல பாராட்டுக்களை பெற்றுக்கொண்டிருக்கின்றது.**

தயாரித்து விநியோகிப்போர்
Northern Farm (Pvt) Ltd. ( Reg No: PV 72077 )
Marukkarampalai,Vavuniya, Sri lanka.
Email- northernfarmpvtltd@yahoo.com



வடக்கில் மல்லிகை!
மதுரை மல்லிகை செயற்றிட்டம்
தம்பா மாதிரிப் பண்ணை
மல்லிகைப்பூக்களின் தொடர்புகளுக்கு
Thampa Tourist Hotel - Sinnaputhukkulam, vavuniya.
Tel :- 024 5670262 / 0777153963
THAMPA TOURIST HOTEL
Spa,Restaurant, Wedding Hall, Luxury Rooms, Swimming Pool, African Beer Garden
THAMPA MODAL FARM
PULIYANKULAM
No:10,1st Lane, Sinnaputhukkulam,Vavuniya, Sri Lanka.
Tel: +94 24 2220598, +94 24 5670262 www.thampahotel.com | e-mail: info@thampahotel.com
WWW.thampahotel.com / info@thampahotel.com